உ

இணுவில்

# ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்

# மஹா கும்பாபிஷேக மலர்




ருதிரோற்காரி ஆண்டு தைத்திங்கள் 23ஆம் நாள்

6-2-1984

255.22
பரா
SLIPR

"நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை"
இவற்றை அளிப்பதுதான்

போன்:
24096

சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்

WEAR A COLOUR
WEAR A DESIGN
VISIT

Seemati
TEXTILE'S OCEAN.

158, நவீன சந்தை, (மின்சார நிலைய வீதி) யாழ்ப்பாணம்

இணுவில்

# ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்

# மஹா கும்பாபிஷேக மலர்



ருதிரோற்காரி ஆண்டு தைத்திங்கள் 23ஆம் நாள்

**6-2-1984**

# விநாயகர் வணக்கம்

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோவென்னச் செய்யுந் தேவே.

— சித்தியார்

தன்றோ ணன்கி னென்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

— தொல்காப்பியம்

அத்தி முகவனை நித்தம் நினைபவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவரே.

— பிள்ளையார் கதை




வசந்த மண்டபம் (தோற்றம்)



வசந்த மண்டபம் (தோற்றம்)

# சமர்ப்பணம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் திருமஞ்சனப் பெருவிழாவையொட்டி, ஆசியுரை, கட்டுரைகளாற் பொலிந்து, அன்பர்கள், அடியார்கள் எல்லாம் பக்திப் பரவசப்படும் வகையில், ஞானமணம் கமழ வெளியாகும் இம்மலரினை எல்லாம் வல்ல ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருவடிகளிற் சமர்ப்பணமாக்குவோமாக.

உ

## இன்னருளை எம்மவர்க்கு ஈந்தருள்வாய் இறைவா!

*தென்னிணுவைப் பதியமர்ந்து தெய்விக அருள்சுரந்து*
*மன்னுயிர்க் கெலாம் மங்கல வாழ்வளித்து,*
*பன்னுபுகழ்ப் பரராச சேகரனார் பாரதனில்*
*சென்னிமிகப் பணிந்து சேவித்த கணபதியே!*
*முன்னை வினைகளைந்து முத்தி நெறியருளி*
*இன்னருளை எம்மவர்க்கு ஈந்தருள்வாய் இறைவா!*

— வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்

'திருப்புகழமிர்தம்' ஆசிரியர்

திரு. கிருபானந்தவாரி அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

இலங்கைமாநகரம் — இணுவில் என்ற பதியில்
எந்தை தந்திமுகத்தண்ணலின் திருக்கோயிலைப் புதுப்பித்து
மகாகும்பாபிஷேகம் செய்வதையறிந்து மகிழ்கின்றேன்.
மிகவும் உயர்ந்த நற்பணி, விரைவில் முடியுமாறு
மகாகணபதியை வழுத்துகிறேன்.

நேரிசை வெண்பா

ஏரார் இணுவில்வாழ் எந்தை கணபதியின்
தாரார் திருவடியைத் தாழ்பணிந்தோர் — ஆரா
அமிழ்தம்போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்
தமிழுள் ளளவுந் தழைத்து.

*89, சிங்கண்ணசெட்டி தெரு,*
*சிந்தாதிரிப்பேட்டை,*
*சென்னை-2.*
*10-1-84*

சிவசிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளிய

# வாழ்த்துரை

*பண்டுதொட்டுப் பைந்தமிழும் திவ்வியமும் பழுத்த சைவ நெறியும் போற்றி வருகின்ற யாழ்ப்பாணத்தில் "இணுவில்" என்னும் பதியுள் பொலிவுற்று அமைந்துள்ள ஸ்ரீ விநாயகர் ஆலயத்துத் திருக்குடமுழுக்கு விழா நிகழவிருப்பதும், விழாவில் சிறப்பு மலரொன்று மலர்வதும் அறிந்து மகிழ்கின்றோம்.*

*ஒன்றியிருந்து நினைக்கின்ற மெய்யடியார் மனம் கொண்ட எண்ணங்கள் எண்ணியாங்கு நிறைவுறும். அவர்கள் இம்மைச் செய்தது மறுமைக்காமெனும் அறவிலைவணிகரினின்றும் முற்றும் வேறுபட்டவர். அவர்தம் உளப்பாங்கும், உரையும், ஒத்த செயலமைப்பும் பரம்பொருள் அடித் தொழும்பினையே சார்ந்து நிற்கும். தன்னலன் கருதாது. இம்மெய்ம்மை யாழ் மக்களின் வழி நிரூபணமாகிறது.*

*அன்பர் கைக்கொள்ளும் தெய்வீக அருட்பணி திறம்பட நிகழ்ந்து நிறைவுறவும், கார் அமர் மேனிக் கணபதியின் கருணை வெள்ளம் முகந்து நிற்கும் கவினுறும் கலை மலராக, விழா மலர் மணந்து கஞலவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.*

*சுபம்.*

திருப்பனந்தாள்
*தஞ்சை மாவட்டம்*
*13-1-84*

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

*அருளிய*

# ஆசிச் செய்தி

ஊனை உருக்குகின்ற பணி உழவாரப் பணி. உள்ளத்தைத் தொடுகின்ற பணி இறையுண்மை கண்டு இறவாமை பெற பக்தி செலுத்தி நிற்கும் பணி இரண்டையும் செய்து கிடப்பதே என் பணி என்ற பெருமான், நாயன்மார்களுள் அப்பர் என என்றும் அன்புடன் அடியார்களால் அழைக்கப் பெற்றவர். இன்றைய காலத் திருப்பணிகளுக்கு அவரே வழி வகுத்தவர் என்று ஐயமின்றிச் சொல்லலாம். தமிழகத் திருக்கோயில்களில் நூற்றுக்கணக்கானவை இதற்குட்படுத்தப்பட்டுப் பொற்சுடராகப் பொலிந்திருக்கின்றன. தமிழ் ஈழத்திலும் இணுவில் என்னும் திருத்தலத் திருக்கோயில் கொண்டானுக்கு அடியவர்கள் ஒன்றியியைந்து திருப்பணிகள் செய்து தைத் திங்கள் 23ஆம் நாள் திருக்குட முழுக்கு விழா எடுத்திடும் செய்தி அறிந்ததில் அளவற்ற மகிழ்ச்சி.

விழா மணக்க ஒரு சிறப்புமலர் பொருத்தமுடன் பக்திப் படையல்களுடன் வருவது மிகவும் பாராட்டுக்குரியது, பயன் பெற வைப்பது, திருப்பணிகள் இனிதே நிறைவு பெற்று இணுவில் அருள் மிகு விநாயகப் பெருமானின் வரங்களைப் பெற்று அனைவரும் அக மகிழ்ந்திட நல்வாழ்த்துக்கள். ஆசிகள்.

*70, ஆவனி தெற்கு,*
*மூலத்தெரு, மதுரை.*
*12-1-1984.*

# இணுவில் விநாயகர் திருக்கோயில்
# திருக்குட நீராட்டு வாழ்த்து

## தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்

வழங்கியது

செந்தமிழ் நெறியே போற்றிச்
    சிவமணம் கமழச் செய்து
சிந்தனை யாளர் பல்லோர்
    திகழ்ஈழ யாழ்ப்பா ணத்தார்
வந்திக்க இணுவில் நல்லோர்
    வழிபட வாழ்த்தி ஞானந்
தந்தனை வரையும் காக்கும்
    விநாயகர் தமது கோயில்

புண்ணியப் பொருளால் நன்கு
    பொலிவுறப் புதுப்பித் தன்பால்
திண்ணிய ராகி வாழ்வு
    சிறந்திடக் குடநீ ராட்டி
மண்ணினிற் பிறந்தார் எய்தும்
    பயன்பெற்றுப் பரவி வாழ்த்தி
உண்ணினைந் துருகி வாழும்
    உத்தமர் பணிகள் வாழி.

*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்,*
*பேரூர் அஞ்சல்,*
*கோயமுத்தூர்—13-1-84*

திரு. பெ. திருஞானசம்பந்தன், எம். ஏ., எல். ரீ. அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

இணுவில் விநாயகராலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் அண்மையில் நடக்க இருப்பதைக் கேட்க மகிழ்ச்சி. அருவமான இறைவன் நம்பொருட்டு உருவத்திருமேனி தாங்கி அருள் வழங்கும் பொருட்டு திருக்கோயில்களில் எழுந்தருளுகிறான். எங்குமுள்ள மின்சக்தி பல்பின் வாயிலாக ஒளியூட்டுவதுபோல, எங்கும் வியாபித்துள்ள இறைசக்தி திருக்கோயில்களில் மந்திரசக்தியால் குவியப்பெற்று நமக்கெல்லாம் அருளை வழங்குகின்றது. அடியார் இணக்கத்தையும் கூட்டுவிக்கிறது.

பல்வேறு வடிவங்களில் காட்சி தருகின்ற இறைவன் விநாயக உருவில் பெருங் கோயில்களில் மட்டுமன்றி மக்கள் கூடும் மரத்தடியிலும் நாற்சந்திகளிலும் காணப்பெறுவதை நோக்க அவன் எளிவந்த தன்மை தான் என்னே என்று வியக்கிறோம். பிரணவத்தின் வடிவைப் பெற்ற அவன் ஞானத்தை வழங்கி அதன் வழி முத்தியையும் வழங்குகிறான். இம்மையில் இன்னலைப் போக்கி நன்மையைச் செய்கிறான். வெவ்வினையை வேரறுக்க வல்ல அவன்தான் இன்றைய மக்கட் சமுதாயத்திடை நிலவிவரும் பகைமை, பொறாமை முதலிய தீய சக்திகளை ஒழித்து சாந்தியை ஏற்படுத்த முடியும்.

மகா கும்பாபிஷேகம் முடிந்து புதுப்பொலிவுடன் விளங்க இருக்கும் திருக்கோவில் குடிகொண்டுள்ள விநாயகப் பெருமான் உலகெலாம் வாழ அருள்வானாக.

சைவ சித்தாந்தப் பெருமன்றம்.
4, வெங்கடேச அக்கிரகாரம் சாலை,
(முதல் மாடி)
மயிலாப்பூர்,
சென்னை. 600004,     20-1-84

'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

வழங்கிய

## ஆசியுரை

மன்னன் பரராஜ சேகரன் மன்னுவித்துத்
துன்னும்அவன் பேருடனே தோற்றமடைந் — தின்னல்
எலாம்அகற்றும் பிள்ளையார் இன்பமுறு கோயில்
சுலாவி உயர்க சொலித்து.

தன்னைத் தொழும்அடியார் தாங்கள் உறுகின்ற
இன்னலைத் தீர்க்கின்ற இப்பெருமான் — பன்னலமும்
வாய்ந்து பெருமை வயங்கியே நல்லோர்கள்
ஆய்ந்துரைசீர் கொள்க அலர்ந்து.

*கலைமகள் காரியாலயம்*
*மயிலாப்பூர், சென்னை, 600004*
*த. பெட்டி 604*
*போன் 76011, 76012*
*4 - 1 - 1984*

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

வழங்கிய

# பிரார்த்தனை உரை

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேக விழா,

சாத்திரவிதிப்படி

மக்களுக்கும் நாட்டுக்கும்

நன்மை விளையத்தக்க வகையில்

நல்ல முறையில்

நடைபெறுவதாக என்று,

பிள்ளையாரின்

திருவடிமலர்களைப்

பிரார்த்திப்போமாக.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

வணக்கம்

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
*10 – 1 – 84*

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசார்ய சுவாமிகள்**

வழங்கிய

# ஆசியுரை

சிவநேயச் செல்வர்களே,

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம். ஆலயங்களில் வருடாவருடம் நாமெடுக்கும் விழாக்கள்போலல்லாது, பன்னிரண்டு அல்லது பல ஆண்டுகளுக்கொரு முறை எடுக்கப்படும் இப்பெருவிழாவில் கலந்துகொண்டு மூர்த்தி தரிசனம் செய்வது பெரும் பாக்கியம். திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு எனப்படும்.

பிரபஞ்ச உற்பத்திக்கு முதற்காரணமாக நிற்பது "ஓம்" என்ற பிரணவ நாதமே. எவ்வகையான மந்திரங்களை ஓதப் புகினும் முதற்கண் ஓதப்படுவது பிரணவமே. இதில் பல தத்துவப் பொருள்கள் உள்ளடங்கி நிற்கும். அதுபோன்று பிரணவ சொரூபனை விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானுக்கே எங்கும் முதலிடம். இதைச் சைவமக்கள் நன்குணர்ந்து செயலாற்றுவர். எனவே அந்த விநாயகப் பெருமானுக்கே இவ்விழா எடுப்பதாக அமைந்தால் அது எத்துணை மகிமை உடைத்து. கும்பாபிஷேகக் காட்சிகளைக் காண நாம் சஞ்சித வாயிலாகப் பெரும் புண்ணியம் செய்தவர்களெனவே கொள்ளல் வேண்டும்.

இப் பெரும் புண்ணிய கைங்கரியத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துத் தொண்டுகள் பல புரிந்த அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். இவ்விழா செவ்வனே நிறைவுற விநாயகப் பெருமானின் திருவடிகளை உளமாரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**பருத்தித்துறை வீதி, நல்லூர்**
**யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இல. 24018**
**6 - 1 - 84**



ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

## இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்தான
## மஹாகும்பாபிஷே வைபவத்தையொட்டி

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமாகிய

## திரு. தேவநேசன் நேசையா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

*யாழ்ப்பாண மாவட்டம் சைவ ஆலயங்கள் நிறைந்த ஒரு மாவட்டமாகும். ஒவ்வொரு ஊரிலும் சராசரியாக நான்கு அல்லது ஐந்து பெரிய ஆலயங்கள் இருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆலயங்கள் புதுப்பிக்கப்படுகின்றன; புதிதாக அமைக்கப்படுகின்றன. இதைத் தவிர சந்திகளிலும், மூலைமுடுக்குகளிலும் சிறிய கோயில்கள் அமைந்திருப்பதைக் காண்கின்ரேம். சிறியனவோ, பெரியனவோ இவ்வாலயங்கள் எல்லாம் செவ்வனே பராமரிக்கப்பட்டு, அங்கு நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன.*

*கடந்த சில ஆண்டுகளாக மக்களிடையே பக்தி, சமய உணர்ச்சி ஆகியன பெருகி வருகின்றன என்பதை இவை குறித்துநிற்கின்றன.*

*இணுவிலில் அமைந்துள்ள ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் இலங்கையின் சரித்திரப் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்ருகும்; மிகப் பழமையான ஆலயங்களுள் இதுவும் ஒன்ருகும்.*

*ஏற்கெனவே நன்கு புதுப்பிக்கப்பட்ட இவ்வாலயம், மேலும் பல திருத்தங்களையும், புதிய அமைப்புக்களையும் உள்ளடக்கியதாய் இன்று அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்யாண மண்டபமும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*

*இவ்வாலயத்தின் மஹாகும்பாபிஷேகத்தை ஒட்டி வெளியிடப்படும் "மலர்" செவ்வனே மலர்ந்து தெய்வீக மணம் வீச எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.
15-1-84

## பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

ஓங்கார வடிவமாகிய எம்பெருமானை எண்ணிய காரியம் யாவையாயினும் எளிதின் முற்றுப்பெறத் தொழுது மேம்படுவது சைவ மரபு. இக்காரணம்பற்றியே ''வழிபடு மவர் இடர்கடி கணபதி'' எனத் திருஞானசம்பந்தர் அருளினர், அடியவர் இடர் நீக்கும் பெருமை வாய்ந்த விநாயகப் பெருமானை வழிபட்டு உய்வதற்கென ஈழத்திருநாட்டில் பல்வேறு இடங்களில் திருக்கோயில்கள் எழுந்துள்ளன. அவ்வகையில் ஆன்றோரால் போற்றிப் பேணப் பட்டதும் வரலாற்றுப் புகழ்பெற்றதுமான இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழ்வதற்குத் திருவருள் கூடியுள்ளமை எமக்கெல்லாம் மட்டிலா மகிழ்ச்சியாகவுள்ளது.

இத்திருக்கோயிற் திருப்பணிகள் எம்பெருமானின் திருவருள் கைவரப்பெற்ற அடியவர்களின் அயராத முயற்சியினால் இனிது நிறைவேறி கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. புனர் நிர்மாணம் செய்யப்பெற்று, திருப்பணிகள் நிறைவேறி மகாகும்பாபிஷேகம் நடைபெறும் இத் திருக்கோயில் தெய்வீக சாந்நித்தியம் பெருகும் வகையில் காசியிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட சிவலிங்கத்தின் பிரதிஷ்டையும், மற்றும் அம்பாள், நடராசர் ஆகிய மூர்த்தங்களுக்குரிய பிரதிஷ்டையும் நிகழ்வது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

இக் கும்பாபிஷேகத்தை யொட்டி வெளியிடப்படும் இம் மலரில் யாவரது உள்ளத்திலும் சமய உணர்வை ஏற்படுத்தவல்ல சமய சிந்தனைகள் இடம்பெறுவதறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

இக் கும்பாபிஷேகத்தின்போது, எங்கணும் திருவருள் பொலிந்து விளங்குவதாகுக. இத்திருப்பணிக் கைங்கரியத்திலும் இம்மலரினை அழகுற வெளியிடுவதிலும் ஈடுபட்ட அடியவர்கள் அனைவரும் சகல நலங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழத் திருவருள் கைகூடுவதற்கு எம்பெருமானின் திருவடிகளைப் போற்றி இறைஞ்சுகின்றோம்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
**திருநெல்வேலி**
***23–1–1984***

யா/தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவி
திருமொழி அரசி, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

கலையும் கலாச்சாரமும் ஒருசேர வளர்ந்துகொண்டிருக்கும் தனிப்பெருஞ் சிறப்பு இணுவில் கிராமத்துக்கு உண்டு. இங்கு வாழ் மக்கள் சைவப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவர்கள். விரத நியமமும், ஆசார சீலமும் நிரம்பப்பெற்றவர்கள். அத்துடன் இசையையும் கொடையையும் பேணுபவர்கள். இதனாலேயே இவ்வூர்த் திருக்கோயில்களுக்கும் சிறப்புண்டு.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவிலின் அமைப்பு இதற்கோர் எடுத்துக்காட்டாகும். இக்கோயிலின் வளர்ச்சி அதியற்புதமானது. அதேபோன்று விநாயகப் பெருமானின் அருள் விளையாட்டும் மிகமிக ஆனந்தமானது.

சமீபத்தில் பாலாலயம் அமைத்து மிகத்துரிதமாகத் திருப்பணிகள் செய்து 6-2-84 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கும். அற்புதத்தை நான் எண்ணிப் பூரிக்கின்றேன். இப்பணியில் ஈடுபட்ட இணுவில்வாழ் சைவமக்களுக்கும் சிறப்பாகத் தொண்டர்களுக்கும் வாழ்த்துக் கூறிப் பாராட்டுகிறேன். கும்பாபிஷேக விழா சிறப்புறவும் பக்தர்கள் அருள் பெறவும் எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் நல்லருள் பாலிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

வணக்கம்

தெல்லிப்பழை
*12-1-84*

திரு. க. கனகராசா *(சமாதான நீதவான்)*

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

**வ**ரலாற்றுக் காலத்துக்கு முந்திய இதிகாச காலத்துப் பழம்பெருமைவாய்ந்த இலங்கைத் தீவின் வடபாலமைந்த யாழ்ப்பாணம் நாட்டின் சிரம்போலமைந்து சீரிய முறையில் சிறப்பும் மேன்மையும் பொருந்திவந்துள்ளதாகும். யாழ்ப்பாணத்துச் செந்தமிழும் சிவ நெறியும் செழித்து வளர்ந்த பண்ணைகளுள் இணுவில் முன்னணியில் நிறைபெருமையும் ஏற்றமும் பொருந்தியதாகும். மத்திய கால வரலாற்றில் மன்னர் மதிப்பும்பெற்று மண் வளமும் நிரம்பிய இணுவிலில் தொண்டை நாட்டிலிருந்து வந்த சான்றோர்கள் குடியேறி வாழ்ந்தமைக்குப் போதிய சான்றுகள் உண்டு.

குலோத்துங்க சோழன் காலத்தில் இலங்கை எறிந்த கருணாகரன் என்னும் தளபதி யின் உறைவிடமாயமைந்த பெருமையும் இணுவிற் பதிக்கு வாய்த்துள்ளது. யாழ்ப் பாணத்தை ஆண்ட ஆரிய சக்கரவர்த்திகளுள் மேகத்தைப் போன்ற கொடை வள்ளலான பரராசசேகரமன்னன் நினைவாக நிலவும் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் பழமை யும், புதுமையும், சாந்நித்தியமும் பொருந்தியதாகும். சைவம் வளர்த்த சான்றோர் வரிசையிலும் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசையிலும் இணுவில் உபகரித்த பெரும் புலவர்கள் பலர். சித்தாந்த சாத்திரங்களுள் சிரோரத்தினமாய் பார்விரித்த நூல்களிலே சிவபரத்துவம் நிறைந்ததாய் உள்ள சிவஞான சித்தியாருக்கு எழுந்த உரையமுதத்தை நூற்றாண்டுகளுக்குமுன் அச்சிட்டு வெளியிட்டவர் இணுவிலைச் சேர்ந்தவர் ஆவர். அதுமட்டு மின்றி தணிகைப் புராணத்துக்கு உரையெழுதியவரும் இணுவிலைச் சேர்ந்த பெரும்புலவரே.

ஈழத்துச் சித்தர் பரம்பரையிலே உருவாகி கீரிமலை முதல் கிளிநொச்சிவரையிலும், அப்பாலும் சைவமும் தமிழும் நிலைக்குமாறு மகாதேவ ஆச்சிரமத்தை நிறுவி அரும்பணி யாற்றும் தவசீலரும் இணுவையூர் தந்த பெரியாரே ஆவார். இப் பெரியோர்கள் மட்டுமின்று, மேலும் பல சிவனடியார்களை உருவாக்கி உலகுக்கு முன்மாதிரியாக இணுவில் இன்று மிளிர்ந்துவருவது கண்கூடு.

சமயவாழ்வில் விரதங்கள் அனுட்டானங்கள் ஆசாரங்கள் சமஸ்காரங்கள் ஆகியவை சிறப்போடு நிலவும் ஊர் இணுவில். நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை முதலிய வேளைகளிலும் விநாயக விரதகாலங்களிலும் இணுவில் மக்களின் சீலமும் சிவப்பொலிவும் செய்காரியங்களும் சிந்தை நிறைவும் சீரியவை; செம்மையானவை.

கோயில்கள் நிறைந்த இணுவிற்பதியில் சைவ வித்தியாசாலைகளும் உள்ளன. அன்று முதல் இன்றுவரை பண்டிதர் புலவர் கூட்டத்தினர் வாழையடி வாழையாக வரன் முறை யிலே வந்து செந்தமிழையும் சிவநெறியையும் புரந்து வருகிறார்கள்.

நாகரிக வாழ்வில் சிறப்பிடம் வகிக்கும் கலைத்துறையில் கரகங்கள், கூத்துக்கள், கும்மிகள், கோலாட்டங்கள், காவடிகள், இசை நாடகங்கள், நர்த்தனங்கள் இணுவிலில் செழித்து வளர்கின்றன. இசைத்துறையிலே தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி மீட் பவர் தமிழ்நாடறியப் புகழ்பெற்றுள்ளார்கள்.

இத்தகைய புகழ்பூத்த இணுவிற்பதியில் இன்று வர்த்தகப் பெருக்கமும் கைத்தொழில் வளாகங்களும் விவசாயப்பண்ணைகளும் நிரம்பியுள்ளன. வீட்டுக்கு வீடு ஏதோ ஒரு வகையில் கலைத்துறை களிநடனஞ் செய்யும் இணுவிற்பதி மேலும் மேலும் சிறந்து நிலவுவதற்கு இன்றியமையாத திருக்கோயிற் கும்பாபிடேகமும் இனிது நிறைவேறுவதாக.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

**'' திரு ஆலவாய்''**
***மில்க்வைற் தொழிற்சாலை,***
***யாழ்ப்பாணம், 16-1-84***

"இயலிசைவாரிதி," "கவிமாமணி", "ஸாஹித்யசிரோமணி"

## பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

ஸன்மார்க்கப் பக்திநெறி இணுவில் மக்களுக்கும், இளைஞர்களுக்கும் உள்ளூர உணர்ச்சியோடு கலந்துவிட்ட தேவாம்ஸம். பரராஜசேகர மன்னன் ஆதரித்துவந்த பிள்ளையார் ஆலயம் இலங்கையில் பிரஸித்திபெற்ற அருள்தலங்களில் ஒன்று. இந்த ஆலயப் புனருத்தாரணத் திருப்பணிகளில் ஸன்மார்க்கப் பக்திநெறியில் ஊறிய இணுவில் மக்களும், இளைஞர்களும் ஆற்றிடும் தெய்வத் தொண்டு விநாயகனின் வரப்ரஸாதம். இவர்கள் தெய்வக் காணிக்கையாக மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களையும் சுத்தியுடன் இறைபணியில் அர்ப்பணிக்கும் பாங்கு வியக்கத்தக்கது. பக்தியின் உயர்ந்த நிலையைக் காட்டுவது. இத்தகைய பெரிய அரிய பண்பு வேறு இடங்களில் காண்பதரிது. இவ்வரிய பண்பையும், பண்பாட்டையும், பக்தியையும் அருளிய விநாயகப் பெருமானின் ஆலயக் கும்பாபிஷேகம், அவனருளால் மிகச் சிறப்பாகவும் தேவகடாக்ஷம் நிறைந்ததாகவும் நிகழ்வதற்கு அருள்பாலித்த பரராஜசேகரப் பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை திரிகரண சுத்தியுடன் நமஸ்கரிக்கின்றேன்.

*விரிவுரையாளர்,*
*அரசினர் ஆசிரிய கலாசாலை,*
*கோப்பாய். 15 – 1 – 1984.*

திரு. கே. சபா ஆனந்தர், பி. ஏ. (லண்டன்), பி. ஓ. எல். (மதுரை)

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

சகல புவனங்களையும் சிருஷ்டித்து, காத்து, அழித்து ஐந்து தொழில்களையும் செய்யும் இறைவனின் அருள் வேண்டிச் செய்யப்படும் விழாக்களில் மகா கும்பாபிஷேக வைபவம் மிகவும் பிரதானமானதாகும். இந்தவகையில் இணுவிலில் உறைகின்ற பரராசசேகரக் கணபதிக்கு ஊர் மக்களும் குறிப்பாக இளைஞர்களும் பெருந் தொண்டு உள்ளம் கொண்டு மகா கும்பாபிஷேகம் செய்யத் திருவருள் பாலித்திருப்பது பெரு வணக்கத்திற்குரியதாகும்.

எனவே எல்லாம் வல்ல கணேசனை சகல சித்திகளையும் அள்ளி அள்ளித் தந்து பக்தர்களைக் காக்க வேண்டும் என்று வேண்டி கும்பாபிஷேக வைபவம் சிறப்புடன் நிகழ்ந்தேற வாழ்த்துகின்றேன்.

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்''.

இணுவில்,
*17-1-1984.*

# பிள்ளையார் மாலை

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்

அணுவில் மகத்தை யடக்கியெந் நாளும்
இணுவில் இலகியெமை யாளும் — குணமணிஓம்
சீரார் பரராச சேகரப் பிள்ளையார்
பேரார் பெருமைகளைப் பேசு !

செல்வக் கணபதியே சித்தி விநாயகனே
கல்விக் கடலேஎன் கண்மணியே — வெல்லுஞ்சொல்
ஈந்துன்னைப் பூசிக்கும் இன்பந் தரவேண்டும்
சார்ந்துன்னை நின்றேன் சரண்.

ஞாலமெல்லாம் உன்புகழை நாட்டக் கவிபுனைந்தேன்
காலமெலாம் உன்னைக் கருதிடுவேன் — வேலவனின்
அண்ணாவுன் னன்பர்களை ஆதரிக்கும் மெய்ஞ்ஞானக்
கண்ணா எனைக்கண்ணுற் காண்.

சக்திக் கணபதியே சாதுக்க ளைக்காக்கும்
சுத்த சிவஞானச் சோதியே — பக்தியுடன்
என்னையுனக் கீந்தேன்; இறைவா குருபரனே
உன்னையெனக் கீவாய் உவந்து.

கணபதிஓம் என்று கருத்துருகி நின்றேன்
குணபதியே தேனருவிக் குன்றே — கணமதனில்
தூயநல் லார்க்குத் துணைசெய்வாய்; உள்ளத்தே
கோயிலிருந் தென்பூசை கொள்.

ஓம்வடிவ மாகிய விநாயகக் கடவுளே
உன்னைச் சரண்புகுந் தேன்
உள்ளத்தில் உள்ளபடி உலகெலாம் உன்னை
உயிர்த்தொகுதி யாயுணர்ந் தேன்
தீம்புனல் இசைத்துவரும் சிவகங்கை யென்னத்
தெளிந்தநல் வாக்கருளு வாய்
தேடித் திரிந்ததைத் தியானத்தி லேவந்து
தீம்பா லெனத் தந்தனை.

பூம்புவிக் கோயிலிற் பொலிகின்ற தெய்வமே
புண்ணியக் கண நாதனே
பூரணத் தவயோக சித்திக்கு வித்தே
புகழ் மணக்கும் கருணையே

ஆம்பணிக ளின்பயன் அனைத்தும் நிவேதனம்
அறிவான குரு நாதனே
அகரமும் உகரமும் மகரமும் பொலிவேத
சிகரமும் ஆன சிவமே.

ஒன்றாகி யிங்கே உயிர்க்குலம் அன்புடன்
உன்னருளில் ஓங்க வேண்டும்
ஒவ்வாத சாதிமத நாடுநிற பேதங்கள்
ஓய்ந்துபட் டொழிய வேண்டும்
நன்றாக உண்டுடுத் தெல்லாரும் வறுமையற
நலமோங்கி வாழ வேண்டும்
நானென் றெழும்பாது நீயென்று நம்பியிஞ்
ஞாலம் நடக்க வேண்டும்.

மன்றான வுள்ளே மகாதுரிய சிவஜோதி
மங்கலம் பொழிய வேண்டும்
மனிதவாழ்க்கை தெய்வ வாழ்க்கையாய் மாறிடும்
மாதவச் சித்தி வேண்டும்
வென்றிமேல் வென்றிகண் டெம்பணிகள் உலகிலே
வேரூன்றி வளர வேண்டும்
வேதாந்த சித்தாந்த தேசிய விநாயகா
வேண்டினேன் வரம் உன்னையே.

✻

தரித்திரனாய் இருக்கும்போது திருப்தி அடையாதவன், செல்வனாயபோதும் திருப்தியடையான். திருப்தியடையாமை மனக் குற்றமேயன்றிப் பொருட்குற்றம் அன்று.

சரீர வருத்தத்திற்கு அஞ்சிப் பிற தொழில்களைச் செய்து பொருள் பெற்றும், உணவின் பொருட்டு வேளாளரிடத்துச் செல்ல வேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும் வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை.

— நாவலர்



சித்திரத் தேர்

# இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

போற்றிஓம் பரம்பொரு ளேகண பதியே
பொழுது புலர்ந்தது பொலிந்தநின் திருவிழி
ஊற்றெழுங் கருணை மழைநனைந் தொப்பிலா
ஒளிமலர்க் கழலிணை தொழுவரம் பெற்றேம்
ஏற்றினன் தேரிறுத் தருட்செயல் புரிந்த
இணுவையி லுறைபர ராசசே கரனே
தோற்றமும் நடுவும் முடிவும் சொலற்கருஞ்
சோதிய னேபள்ளி யெழுந்தரு ளாயே.

அப்பனு மம்மையுந் தருமுதன் மகனே
ஆதியாம் மறையை யசலமே லெழுதி
முப்பொரு ளெழுந்த முளைக்கொழுந் துணர்ந்து
முற்படு முயிரெலாம் நற்கதி பொருந்த
இப்புவி முதலெவ் வுலகினு மமர்ந்தாய்
இணுவையி லுறைபர ராசசே கரனே
செப்பரும் நாதவிந் தொடுகலை வடிவச்
சிற்பர னேபள்ளி யெழுந்தரு ளாயே.

மன்னனும் தொண்டரும் வந்துவந் தேத்த
வளமெலாம் சுரந்து வாழவைத் தவனே
பின்னிய பிறவிப் பெருங்கட னீந்தப்
பிறவாப் புணைதருங் கருணைநா யகனே
இன்னிசை சுவைத்துத் தமிழ்த்தாய் வதியும்
இணுவையி லுறைபர ராசசே கரனே
கன்னிமா வல்லபை கணவனே தொண்டரின்
கற்பக மேபள்ளி யெழுந்தரு ளாயே.

யாழ்குழல் வீணைகள் நாத சுரவகை
நடனபே ரிகைதுடி மத்தளம் மேளம்
சூழ்கலை வல்ல தொழும்பினர் இசைத்தார்
சுந்தர அரம்பையர் ஏந்தினர் தீபம்
ஏழ்வகை யுயிர்தமை யறிந்தினம் பிரிக்கும்
இணுவையி லுறைபர ராசசே கரனே
வாழ்வு நலம்பெறு மனுநெறி சிறக்க
வரோதய னேபள்ளி யெழுந்தரு ளாயே.

வன்னிமந் தாரை நறுமலர் தூர்வை
வண்ணவம் புயவினம் சுமந்தன ரடியார்
கன்னலும் கனியும் களபமஞ் சனமும்
கதித்தபொற் கும்பம் வகுத்தன ரந்தணர்
இன்னே பெறுதியென் றெமக்குவந் தருளும்
இணுவையி லுறைபர ராசசே கரனே
பொன்னியைத் தந்துல கின்னலை நீக்கிய
பூரண னேபள்ளி யெழுந்தரு ளாயே.

அகரமு முகரமு மகரமு மாதியாம்
அட்சர மியாவையு மடக்கிய சுருதிச்
சிகரமாய் நின்ற திருவருட் குன்றே
சிந்தனைத் தேறலே சித்தியும் புத்தியும்
இகபர சுகந்தர இருமருங் கிருத்தி
இணுவையி லுறைபர ராசசே கரனே
பகவன் திருமகள் மகிழ்மரு மகனே
பராபர னேபள்ளி யெழுந்தரு ளாயே.

தருங்கனிக் காகத் தந்தைதாய் தம்மைத்
தனிவலம் வந்ததற் பரனே மகாமயில்
வருங்குகன் மணம்பெற மருவுவா ரணனே
வணங்கிநின் றகலா வடியவர் மனக்கண்
இருந்தவ ரவர்குறை கேட்டினி தளிக்கும்
இணுவையி லுறைபர ராசசே கரனே
அருங்குண நிதியே அன்பினில் விளைந்த
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

எக்கணம் எவ்விடத் தெவர்நினைக் கினுஞ்சென்
றிடையூ றகற்றி யினிதெலாம் கொடுக்கும்
முக்கணு துயில்கொளும் பொழுதுனக் குளதோ
முச்சுட ரின்றெனி லிச்சகம் தங்குமோ
இக்கணம் எமதிருள் வினைகடிந் தாள்வாய்
இணுவையி லுறைபர ராசசே கரனே
பக்குவ தவத்தினர்க் குச்சியி னுதிக்கும்
பாஸ்கர னேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஐந்தொழிற் கரங்களும் அகிலாண்ட கோடி
அமைந்தபே ருதரமும் ஆதார மூலம்
உந்திய குண்டலி உயர்ந்தெழு கழலும்
உற்றவர்க் குதவிடும் சர்க்கரை உண்டியும்
இந்திளம் பிறைமருப் பியல்பும் தெளிதர
இணுவையி லுறைபர ராசசே கரனே
சிந்தையி லுருவெழு தித்தனித் திருக்கச்
சிவமக னேபள்ளி யெழுந்தரு ளாயே.

அரவா பரண அணிநட விகடா
ஆதிகோ கர்ண மமைத்த சீராளா
சுரரா குலந்தீர்த் தசுரனை மூஷிக
சுந்தர வாகன மாக்கிய தேவா
இரவா வாழ்வினை எமக்களித் தென்றும்
இணுவையி லுறைபர ராசசே கரனே
விரவா ரணமுப நிடதமும் காணுணு
விநாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே.

பங்கயன் மறலி நான்நவ கோள்களுன்
பணிப்புரைக் காயெதிர் பார்த்துநிற் கின்றார்
சங்கர னும்சிவ சத்தியும் கண்ணனும்
தழுவிமுத் தந்தர வருகைமேற் கொண்டனர்
எங்கணும் பயிலும் கந்தவே ளுடனே
இணுவையி லுறைபர ராசசே கரனே
மங்கள வளந்தரும் சச்சிதா னந்த
வாருதி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

சீர்வளர் கல்வியும் செல்வமும் செழிக்க
சிவமணி வெண்ணீ றைந்தெழுத் தாலே
பார்வளர் மன்பதை பவக்கட னீங்க
பன்னிரு திருமுறை தருநாரை யூரனே
ஏர்வளர் பொழில்சூழ் கோபுரக் கோயில்
இணுவையி லுறைபர ராசசே கரனே
பேர்வளர் தத்துவா தீதபஞ் சாட்சர
பிரணவ னேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஐந்தொழிற் கரங்களும் அகிலாண்ட கோடி
அமைந்தபே ருதரமும் ஆதார மூலம்
உந்திய குண்டலி உயர்ந்தெழு கழலும்
உற்றவர்க் குதவிடும் சர்க்கரை உண்டியும்
இந்திளம் பிறைமருப் பியல்பும் தெளிதர
இணுவையி லுறைபர ராசசே கரனே
சிந்தையி லுருவெழு தித்தனித் திருக்கச்
சிவமக னேபள்ளி யெழுந்தரு ளாயே.

அரவா பரணு அணிநட விகடா
ஆதிகோ கர்ண மமைத்த சீராளா
சுரரா குலந்தீர்த் தசுரனை மூஷிக
சுந்தர வாகன மாக்கிய தேவா
இரவா வாழ்வினை எமக்களித் தென்றும்
இணுவையி லுறைபர ராசசே கரனே
விரவா ரணமுப நிடதமும் காணொணு
விநாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே.

பங்கயன் மறலி நான்நவ கோள்களுன்
பணிப்புரைக் காயெதிர் பார்த்துநிற் கின்றார்
சங்கர னும்சிவ சத்தியும் கண்ணனும்
தழுவிமுத் தந்தர வருகைமேற் கொண்டனர்
எங்கணும் பயிலும் கந்தவே ளுடனே
இணுவையி லுறைபர ராசசே கரனே
மங்கள வளந்தரும் சச்சிதா னந்த
வாருதி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

சீர்வளர் கல்வியும் செல்வமும் செழிக்க
சிவமணி வெண்ணீ றைந்தெழுத் தாலே
பார்வளர் மன்பதை பவக்கட னீங்க
பன்னிரு திருமுறை தருநாரை யூரனே
ஏர்வளர் பொழில்சூழ் கோபுரக் கோயில்
இணுவையி லுறைபர ராசசே கரனே
பேர்வளர் தத்துவா தீதபஞ் சாட்சர
பிரணவ னேபள்ளி யெழுந்தரு ளாயே.

# ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் திருவூஞ்சல்

திரு. அ. க. பொன்னம்பலபிள்ளை அவர்கள்

## காப்பு

சீர்பூத்த ஈழவள நாட்டி னேர்சார்
திகழ்கின்ற யாழ்ப்பாணத் திணுவை தன்னில்
நார்பூத்த நல்லடியார் நாளுளுந் துதிசெய்ய
நாலுந் துதிக்கை நற்குஞ்சரந் தன்னைப்
பார்பூத்த பரராச சேகரனும் பார்த்திபன்
பரிவுடன் தாபித் தேத்து மொப்பிலாக்
கார்பூத்த கணபதியே நின்னூசல் பாடக்
கருணைமழை பொழிந் தெந்நாளுங் காப்பதாமே.

பூமேவு காதரனுஞ் சீதரனும் ஓதரனும்
புகழ்ந்து போற்றும் மெய்ஞ்ஞானப் பொருளே
தேமேவு கொன்றையந்தார் மிலைச்சு மோங்காரத்
தனிப் பொருளே தந்திமுகத்தெம் தற்பரனே!
மாமேவு மிணுவைநகர் வந்த மாசிலா மணியே!
மாமதம் பொழியு மழவிளங் களிறே!
பாமேவு பரம்பொருளே பண்ணியமேந்துங் கரத்தோய்!
பரராச சேகரரே யாட ரூஞ்சல்.

தூயமறை முடிபுணரா ஞானத்தின் திருவுருவே!
தூமறையோர் போற்று மொப்பிலா மணியே!
ஆயகலைக் கெல்லாம் அதிபதியா மைங்கரனே!
ஆமயத் தொளிரு மாதியே யற்புதனே!
மேயவிருள் அகற்றவந்த சிவஞானக் கன்றே!
மேதினி போற்றும் மன்னர் மன்னனும்
பாயபுகழ்ப் பரராச சேகரன் போற்றும்
பரராச சேகரரே யாட ரூஞ்சல்.

பொருவரு மொண்முகிலே பொலங்கூர் மேனி
பொலியவரு புண்டரமாம் வெண்ணீற் றழகும்
வெருவரும் உதரபந்தனத் தோடொளி கால
விம்மத மாய்த் துலங்கும் நடையழகும்
மருவரும் மார்பமிசை மன்னித் துவளும்
மாவடமாம் அக்குமணி கான்ற அழகும்
ஒருவாத அன்பினர் நாளுங்கண்டு துதிசெய்ய
உள்ளக்கமலத் தொளிரு முத்தமனே யாடரூஞ்சல்.

எம்மைவாழ் விக்கவெண்ணி யெப்பொருளுந் தானும்நின்ற
ஏதமிலாக் குழவிபோன்றாய் எண்குணத் தீசா!
மும்மையா நுலகாய் வேறுமாய் உடனுமிக்க
முழுமுதலாய் விளங்குந் தன்மை மேவுங்
கொம்மைசேர் முலையாள்பெற்ற கோதிலாக் குன்றே
கொற்றவனே யவனன்றி யாரறிவ ரேழை
வெம்மைகூர் நரகினிடை வீழாமற் காத்தருளும்
விநாயகனே யேரம்ப ஆடீ ரூஞ்சல்.

மின்னு நவரத்ந மணிமகுட மசைந்தாட
மிகுநாதவிந்து வடிவான துதிக்கை யாடத்
துன்னு செவிகள் கால்தனை யிருமருங்கும் வீசத்
தளர்நடை பயின்று தத்தியு மசைந்தாட
மன்னு கணநாதர் முனிவர் மகிழ்ந்தேயாட
மாமறையோர் பலரும் சாமகீதம் பாட
இன்னுயிர்க் கிறையே இன்பவா ரிதியே
இபமுகத் தெந்தாய் ஆடீ ரூஞ்சல்.

அருவுருவா யமலமா யநாதி யாகி
யற்புதமா யானந்த சாகர மாகிப்
பரவொளியாய் நிர்க்குணமாய் அகண்ட மாகிப்
பாசவிரு ளகற்றுமோர் பரிதி யாகிக்
குருவடிவா யொருபொருளாய் நித்த மாகிக்
கூறரிய வாரணத்தின் உட்பொரு ளாகிக்
கருதரிய வரங்கள்பல நாளுளு நல்கும்
கவுரிதன் பாலகரே யாடீ ரூஞ்சல்.

ஒருங்குலக மெளிதீன்று ளொண்முகத் தொளிபாய
ஒன்றித் திருந்து சப்பாணிகொட்டு முதலே
பெருங்குலமா முனிவர்முதற் பெரியோர்க ணெக்குருகப்
பெட்புடைய பெண்மணிகள் சேவித்து நிற்ப
அருங்குளிர்மென் னகையரும்ப அன்பருளத் தினிக்கு
மானந்தத் தேனே! ஆனைமுகத் திறையே!
மருங்குலவு மானனையார் தம்மா மருந்தே
மருப்பொன்றுடைய மதகளிறே யாடீ ரூஞ்சல்.

உரியமறை யாகமங்கள் நாளு மொலிக்க
உம்பர்சொரி மலர்மாரி யெங்கும் பொங்க
பிரியமொழி பேசி மடவார் சாமர மிரட்டப்
பிடியொடு கலந்த பெருங்களிற் றிறையே!
அரியயனுர்க்கு மெட்டா வத்திமுகத் தெந்தாய்!
ஆனே றுகந்தான் அருந்தவக் குழந்தாய்!
கரியகுழற் செய்யவாய்க் காமாக்ஷி தன்பாலா!
கன்னற் சுவைகொள் களிறே யாட ருஞ்சல்.

திருக்கோயிலிற் றிருவலகிடு மடியார் வாழி!
திருவமுது சிவனடியார்க் களிப்போர் வாழி!
விருப்பொடு மலர்பறித் தர்ச்சிப்போர் வாழி!
வன்னிகொன்றை யாதிய வளர்ந்தே வாழி!
தருக்கள்பல தொகுப்போர் என்றும் வாழி!
தகுதிபெறு மகளிர்கொண்ட விரதம் வாழி!
தருப்பைகொய் வேதியரும் நனிசிறந்து வாழி!
தந்தமொன்றுடைய தற்பரநின் திருவடியும் வாழிவாழி!


மாவாழி மறையவரும் அறமும் வாழி!
வையகத்தில் வானமழை பொழிந்தே வாழி!
சேவாழும் கொடியவர்தம் மடியார் வாழி!
செகம்புரக்கு மரசர்செங் கோலும் வாழி!
கோவாழி குடிவாழி சைவம் வாழி!
குலவுசிவ நாமம்வெண் ணீறும் வாழி!
காவாழு மிணுவைநகர் மாந்தர் வாழி!
காமர்மிகு கற்பகக் கன்றும் வாழி!

❀

*நீ உன்னிலும் மெலியாரை வருத்தச் செல்லுமிடத்து உன்னின் வலியவர் உன்னை வருத்த வரும்போது அவர்முன் அஞ்சிநிற்கும் உனது நிலையை நினை.*

*பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின் பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களிலும் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.*

— நாவலர்



சிவஸ்ரீ சி. சதாசிவக் குருக்கள்

மேற்படி ஆலயம் சிறந்து விளங்க
1960ஆம் ஆண்டு கும்பாபிஷேகம்
செய்துவைத்தவர்.

# ஆலய வழிபாடும் அதன் தத்துவமும்

சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்
(தேவஸ்தான பிரதமகுரு)

பரம கருணாநிதியாகிய இறைவன் அவரவர்கள் கருமங்களுக்கு ஏற்ப நல்வினை தீவினையை அனுபவிக்கும் பொருட்டே இவ்வுடம்பை அளித்துள்ளார். பசுக்களாகிய மக்கள் ஈடேற ஒரேயொருவழி காட்டினர். அது சிவாகமத்தின் மூலம் பெறப்படுவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளில் வீடாகிய பேறுதான் ஆன்மாவின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதை எய்யும்வழி பூசனையாம். அதை எப்படிச் செய்வது பெறுவது அதனால் ஆன பயன் என்ன என்பது போன்ற வினாக்களுக்கு ஐயம்திரிபற விளக்குவது சிவாகம நூல்களாம். எனவே சிவாகமநூல் பிரமாணங்களைக் கேட்டுணர்ந்து தெரிந்து அதன்படி பூஜைகளைச் செய்யவேண்டும். சிவாகமம் பல சாஸ்திரங்களின் நிலைக்களமாகும். சிவனின் ஐந்து திருமுகங்களிலிருந்து வெளிப்பட்டது.

சிவன் நித்தியம் சரீரம் அநித்தியம். அதில் தங்கியிருக்கின்ற ஆன்மா எந்த நேரத்திலும் வெளிக்கிளம்பிச் செல்லலாம். அந்த ஆன்மா உய்யவேண்டுமானால் அநித்தியமான சரீரத்தைச் சிவன்பால் அடைக்கலம் புகுத்தினாலன்றி மேன்பாடில்லை. ஆதலினால் இறைவன் அருள்பெற வேண்டுமானால் அறிவுபெற்று மலம் ஏற்படவொட்டாமல் செய்தலும் பெற்ற அறிவு தோன்றி விளங்கிடவும் அருவுருவாகிய கடவுள் வழிபாட்டைத் தவிர வேறு வழியே இல்லை. இவ்வழிபாடே பூஜை. இதனை எவ்வாறு செய்வது, செய்யின் பெறும் பயன் யாது என ஆராயப்புகுந்தவேளை தோன்றியதே இக்கட்டுரை.

சிவாகமமுறை கொண்டு ஆலயங்களில் செய்யப்படும் பூஜை நித்தியம், நைமித்தியம், காம்மியம் என மூன்று வகைப்படும். நித்திய பூஜை உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகையாகப் பிரித்து பின் ஒவ்வொன்றிலும் உத்தமம், மத்திமம், அதமம் எனப் பிரிக்கப்பட்டு அதமத்தில் அதமமில்லாமல் எட்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உத்தமத்தில் மூன்றுவதாகவுள்ளது ஆறுகாலப் பூஜை.

## ஆறுகாலப் பூஜைகளுக்கு உரிய நேரம்

சூரிய உதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி (4–30 தொடங்கி 6–00 மணி வரை) சூரிய உதயம்வரை செய்ய வேண்டிய பூஜை உஷக்காலம். பூஜையின் முடிவில் சூரியன் உதயமாகவேண்டும். ஏழரை நாழிகைவரை (6–00 தொடங்கி 9–00 மணி வரை) காலசந்தி.

பன்னிரண்டரை நாழிகைமுதல் இருபது நாழிகை வரை (11–00 மணி தொடக்கம் 2–00 மணி வரை) உச்சிக்காலம்.

சூரியன் அஸ்தமிக்கு முன்பு மூன்றே முக்கால் நாழிகை முதல் (4–30 மணி தொடக்கம் 6–00 மணி வரை) செய்யப்படும் பூஜை பிரதோஷகாலம்.

சூரிய அஸ்தமனம் தொடங்கி ஏழரை நாழிகை வரை (6–00 மணி தொடங்கி 9–00 மணி வரை) சாயங்காலப்பூஜை.

அதன்பின் மூன்றேமுக்கால் நாழிகை (9–00 தொடக்கம் 10–30 மணி) அர்த்தயாமம்.

## பூஜா தத்துவம்

செய்யப்படும் பூஜைகள் யாவும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற ஐந்து பூதசம்பந்தமாகும். அதாவது சந்தனம், பழம், புஷ்பம், அன்னம் இவை யாவும் பிருதுவி உபசாரம். திருமஞ்சணம், பால், தயிர் முதலியவை அப்புவுபசாரம். இரத்தினம், கற்பூரம், அக்கினி உபசாரம். தூபம், சாமரை, விசிறி முதலியவை வாயுவுபசாரம், மணி, தோத்திரம், வாத்தியம் முதலியவை ஆகாசவுபசாரம். சந்தனத்திற்கு கந்தம் என்றும் பெயர் உண்டு. அதிகமான ஆபத்திலிருந்தும் காப்பது துர்ப்பாக்கியம் பயம் இவைகளைப் போக்குவது என்ற செயலினாலே கந்தம் என்று பெயர் வந்தது. இதுபோல புண்ணியத்தை வளர்ப்பதாலும் பாவக்கூட்டங்களை அழிப்பதாலும் புஷ்பம் என்று பெயர் வந்தது. தூபமானது பாவத்தைக் கொளுத்தி ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவ மலசத்தியாகிய அறியாமையை நீக்கும் தத்துவமுடையது. சிற்சத்தியின் வாசமாய் ஞானவிளக்காய் இருப்பது தீபம். எனவே தீபத்தினால் தீவர் மரணம் இல்லாது போகும்.

## அபிஷேக திரவியங்களின் வரிசையும் அளவும் பயனும்

| வரிசை | திரவ்யம் | அளவு | பலன் |
|---|---|---|---|
| 1ஆவது | வாசனைத்தைலம் | ஒரு படி | சுகமளிக்கும் |
| 2ஆவது | மாப்பொடி | ஒரு பலம் | கடனைத் தீர்க்கும் |
| 3ஆவது | நெல்லிமுள்ளி | ஒரு பலம் | அரசன் வசம் |
| 4ஆவது | மஞ்சள்பொடி | ஒரு பலம் | ரோகத்தைப் போக்கும் |
| 5ஆவது | ஜலதிரவம் | இரண்டு பலம் | |
| 6ஆவது | பஞ்சகவ்யம் | ஒரு மரக்கால் | பாபத்தைப் போக்கும் |
| 7ஆவது | பஞ்சாமிர்தம் | ஒரு மரக்கால் | புஷ்டி அளிக்கும் |
| 8ஆவது | பசுவின் நெய் | அரைப் படி | மோக்ஷமளிக்கும் |
| 9ஆவது | பசுவின் பால் | ஆறு படி | ஆயுளைக் கொடுக்கும் |
| 10ஆவது | பசுவின் தயிர் | 12 படி | பிரஜாவிருத்தியுண்டாக்கும் |
| 11ஆவது | தேன் | ஒரு ஆழாக்கு | சுகமளிக்கும் |
| 12ஆவது | கரும்பின் சாறு | ஒரு படி | ஆரோக்கியமளிக்கும் |
| 13ஆவது | சர்க்கரை | மூன்று பலம் | |
| 14ஆவது | பழவர்க்கம் | | |
| | வாழைப்பழம் | 25 | பயிரை வளர்க்கும் |
| | மாம்பழம் | 15 | வச்யம் |
| | மாதுளை | 10 | கோபத்தைப் போக்கும் |
| | பலாப்பழம் | 10 | புஷ்டியளிக்கும் |
| 15ஆவது | எலுமிச்சம்பழம் | 25 / 10 | நேர்மை |
| 16ஆவது | இளநீர் | 25 | போகமளிக்கும் |
| 17ஆவது | அன்னாபிஷேகம் | ஒரு மரக்கால் | சாம்ராஜ்யமளிக்கும் |
| 18ஆவது | சந்தனம் | ஒரு மரக்கால் | லக்ஷ்மியைக் கொடுக்கும் |
| 19ஆவது | கும்பம் | 10 | மோக்ஷப்பரதம் |
| 20ஆவது | பத்ராம்பு | ஒரு மரக்கால் | உலகவசம் |
| 21ஆவது | தாராம்பு | ஒரு மரக்கால் | இன்பமளிக்கும் |
| 22ஆவது | சிருங்கதோயம் | ஒரு மரக்கால் | தைரியத்தையளிக்கும் |
| 23ஆவது | ரத்னோதகம் | ஒரு மரக்கால் | லக்ஷ்மீப்ரதம் |
| 24ஆவது | குசோதகம் | ஒரு மரக்கால் | தூய்மையளிக்கும் |
| 25ஆவது | அர்க்யோதயம் | ஒரு மரக்கால் | ஞானமளிக்கும் |
| இதன்பிறகு | சங்கோதகம் | ஒரு மரக்கால் | புண்யப்ரதம் |
| | தீப எண்ணெய் | ஒரு படி | |

### தீபாராதனை

கீழ்வரும் பதினாறு தீபங்களும் "தீபஷோடசோபசாரம்" என்று அஜிதாகமத்தில் பெயர்பெறும்.

| வரிசை | பொருள் | பயன் |
|---|---|---|
| 1வது | தூபம் | உற்சாகத்தைத் தரும் |
| 2 ,, | ஏகதீபம் (உருக்களி) | விழிப்பைத் தரும் |
| 3 ,, | அலங்காரதீபம் (புஷ்பதீபம்) | சாம்ராஜ்யத்தைத் தரும் |
| 4 ,, | நாகதீபம் | லோகாதிபத்யம் தரும் |
| 5 ,, | விருஷபதீபம் | அரசையளிக்கும் |

| வரிசை | | பொருள் | பயன் |
|---|---|---|---|
| 6 | ,, | புருஷா மிருகதீபம் | |
| 7 | ,, | சூலதீபம் | வயிற்றுவலி தீரும் |
| 8 | ,, | ஆமைதீபம் | ஜலகண்டத்தைத் தடுக்கும் |
| 9 | ,, | கஜதீபம் | ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும் |
| 10 | ,, | சிம்மதீபம் | ஆயுளைக் கொடுக்கும் |
| 11 | ,, | வியாக்கிரதீபம் (புலி) | விலங்குகளிடத்தில் பயத்தைத் தீர்க்கும். |
| 12 | ,, | கொடிதீபம் | சோபையைத் தரும் |
| 13 | ,, | மயூரத்தீபம் (மயில்) | புத்திரப்பேறு அளிக்கும் |
| 14 | ,, | பஞ்சதட்டுடன் பூர்ண கும்பம் | சாம்ராஜ்யமளிக்கும் |
| 15 | ,, | நக்ஷத்ரதீபம் | பாதுகாப்பு ஆதிபத்தியமளிக்கும் (காவல்துறை அதிகாரி) |
| 16 | ,, | மேருதீபம் | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும். |

## அபிஷேக பலன்

சிவபிரானுக்கு நெய்யபிஷேகஞ் செய்தலால் ஆயிரங்கோடி வருடங்களில் செய்யப்பெற்ற மகா பாவங்கள் நீங்கும். ஒரு மாதம் நெய்யபிஷேகஞ் செய்தால் இருபத்தொரு தலைமுறையிலுள்ளாரும் சிவபதத்தையடைவர், கை இயந்திரத்தாலுண்டான தைலத்தை அபிஷேகஞ் செய்தால் அலங்காரஞ் செய்யப்பட்ட அளவில்லாத பசுக்களைத் தானம் செய்த பலன் கிடைக்கும். தயிரபிஷேகஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கி முடிவில் சிவபதங் கிடைக்கும். தேன் அபிஷேகஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கும்.

## பிரதோஷ காலத்தில் வணங்கும் முறை

முதலாவது இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடதுபக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பிவந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று கோமுகியைக் கடவாது சென்ற வழியே திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பி இடபதேவரைத் தரிசியாது கோமுகி வரை சென்று, அங்கு நின்றும் திரும்பி இடபதேவரைத் தரிசியாது இடது பக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்துத் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் பிரதக்ஷணத்தில் இடபதேவரை நான்கு முறையும், சண்டேசுவரரை மூன்று முறையும், கோமுகியை இரண்டு முறையும் தரிசித்ததாக ஆகின்றது.

## பூஜாத் திரவியத்தின் பயன்

எண்ணெ அபிஷேகத்தினல் சௌக்கியம் உண்டாகும். இவ்வாறு பஞ்சாமிருதத்தினல் பரிசுத்தம், நெய்யினல் முக்தி, பாலினல் ஆயுள்விருத்தி, தயிரினல் புத்திரப் பேறு, தேனினல் சுகம், அன்னபிஷேகத்தால் சாம்ராஜ்யம், சந்தனத்தினல் மோக்ஷம் கிடைக்கும். வஸ்திரத்தினல் தாரித்திரியம் நீங்கும். புஷ்பமாலை ஐச்வர்யமளிக்கும். நைவேத்தியத்தினல் அரசபதவி கிடைக்கும். தாம்பூலத்தினல் குறைவற்ற பயன் உண்டாகும்.

## திரவிய குறைவினல் ஏற்படும் தீமைகள்

சந்தனம் இல்லையேல் குஷ்டம் உண்டாகும். புஷ்பமில்லையேல் குலமளியும். தீர்த்தமில்லாவிடில் சுகக்குறைவு உண்டாகும். தீபமில்லையேல் தனநாசம் உண்டாகும். நைவேத்தியமில்லாவிடில் பஞ்சம் உண்டாகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## பூசையில் ஐந்தொழில்

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்யம் காத்தல் தொழில், பலிபோடுதல் சங்காரத் தொழில், தீபம் திரோபாவத் தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

## பூஜையால் அடையப்படும் நன்மை

யாகம், தவம், தானம், புண்யதீர்த்தாடனம் இவைகளாலுண்டாகும் பலனுக்கு நூறுகோடி பயன் சிவலிங்கர்ச்சனையால் உண்டாகும். மற்றும் பூசகருடைய தவவலிமையாலும் பூசையின் அதிகத்தினல் பிம்பத்தின் லக்ஷணத்தினலும் சிலையானது தெய்வத் தன்மை யடைகிறது.

# ஆலயங்களின் அற்புதங்கள்

துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவி, திருமொழி அரசி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

மக்கட் பிறப்பினை மாண்புடையதாக்க வேண்டுமானால் சிந்தனையும் வந்தனையும் வேண்டற்பாலதாகும். மனிதன், என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்றே இறைவனை வந்திக்கவுந் தொடங்கிவிட்டான். தனது உயிர்க் கொள்கையாக அறிவு, இச்சை, செயல் மூன்றையும் போற்றினான். அறிவினாற் பொருளீட்டி இச்சையினால் இறையின்பம் நுகர்ந்து செயலினால் அறம் புரிந்து வாழுதல் தனது உயர்ந்த கடனெனக் கண்டான். இந்த வகையிற் செம்மையாக வாழ்ந்தோர் செம்பொருளாம் இறைவனைக் கண்டனர். மற்றவர்களும் காண வழிகாட்டினார். கடவுட் கொள்கையின் பயன் கடவுளைக் காணுதலினாலேயே நிறைவு பெறவேண்டும். கடவுள் இருக்கிறார் என்று மட்டும் சொல்லிவிட்டாற் போதாது. காண்பதற்குரிய வழிகளிலே நின்று அவரைக் காண முயலவேண்டும்.

பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்ததோர் படரொளிப் பரப்பாக விளங்குகின்ற இறைவன் சிறப்பாக எழுந்தருளி அருள்புரியுமிடங்கள் இரண்டு. ஒன்று கற்கோயில்; இரண்டாவது மனக் கோயில். கற்கோயிலிலே எழுந்தருளியிருக்கும் பெருமானைப் புறக்கண்களாற் கண்டு வழிபடுகிறோம். உள்ளக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானை அகக்கண்களாற் கண்டு வழிபடுகிறோம். புறக்காட்சியும் அகக் காட்சியும் ஒன்றுபடாவிட்டால் வழிபாட்டால் உண்மைப் பயனை அடைய முடியாது.

> "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
> பலத்துமென் சிந்தையுள்ளும்
> உறைவான்"

என்று மணிவாசகப் பெருந்தகையார் போற்றுகிறார். புறக்காட்சியில் நம்மை வழிப்படுத்த வந்த நாவரசர்,

> "கண்காள் காண்மின்களோ
> கடல் நஞ்சுண்ட கண்டன்றனை
> எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
> கண்காள் காண்மின்களோ"

என்று பாடி, அடுத்துத் திருவங்கமாலை முடிவிலே,

> "தேடிக் கண்டுகொண்டேன்
> திருமாலொடு நான்முகனும்
> தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
> தேடிக் கண்டுகொண்டேன்"

என முடிவுசெய்கிறார். புறத்திலே தரிசித்த பெருமானை அகத்திலேயும் இருத்தித் தரிசிப்பது வேண்டற்பாலது. ஆனால், புறக்காட்சி சிறந்தாலன்றி அகக்காட்சி சிறக்காது. இதன் காரணமாகவே ஆயிரமாயிரமாலயங்கள் நம் நாட்டில் தோன்றின.

நம் நாட்டிலே பக்திநெறியை வளர்ப்பதற்குரிய வாயில்கள் ஆலயங்களேயாகும். ஆ லயம் எனப் பிரித்தால் உயிர்கள் இலயித்தற்குரிய இடங்களே ஆலயங்கள் எனக் கருத்துத்தருகிறது. கோயில் என்று குறிப்பிடும்போது மேலான தலைவனுடைய இருப்பிடம் என்பதை அறியத்தருகிறது. அமைதியையும் தூய்மையையும் எடுத்துக்காட்டும் பக்தி நிலையங்களாக இவை விளங்குகின்றன. அவற்றைச்சார்ந்து வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனாகிய இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் மாண்புடைச் செயலாகும். உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். பார்க்கும் இடமெங்கணும் நீக்கமற நிறைந்துநிற்கும் பரம் பொருளைக் கோயிலில்தான் சிறப்பாக உணர முடிகிறது. ஏனைய இடங்களில் இறைதரிசனம் பெறும் பக்குவம் உயர்ந்த ஞானிகளுக்கே சாலும்.

> "தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ
> கல்லினுள் மணியும்நீ சொல்லினுள் வாய்மைநீ
> அறத்தினுள் அன்புநீ மறத்தனுள் மைந்துநீ
> வேதத்து முதல்நீ பூதத்துள் ஐந்துநீ
> வெஞ்சுடர் ஒளியும்நீ செஞ்சுடர் அளியும்நீ
> அனைத்தும்நீ அனைத்திலும் பொருளும்நீ"

என்று பாடிய சங்கப் புலவரின் பாவிலே, பெருமானின் வியாபகத்தைக் காண்கிறோம்.

காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காணும் பெற்றியுடையோர் ஒரு சிலரே. எனவே, மற்றையோருக்குக் கோயில்களே இறை நினைப்பை ஊட்டுகின்றன. விக்கிரகங்களும் வடிவங்களும் அங்கு அமைந்திருப்பதால் இறைக்காட்சிக்குத் துணைபுரிகிறது.

''திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறைவ னுங்கே''

என்ற வாக்கை ஊன்றி நினைக்கவேண்டும். தனித்துநின்று உருகுவதிலும்பார்க்க அன்பர்களுடன் கூடிநிற்கும்போது உருக்கம் மிகுந்து தெய்வக் காட்சியில் திளைக்க வைக்கிறது.

''பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணம் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழுவதும் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கை யானைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநாம் கண்ட வாறே''

என்பது அப்பருடைய திருப்பாட்டு. பண்டைக்காலத் தமிழ் மக்கள் வாழ்க்கையிற் கோயில்களே முதன்மையான இடம்பெற்றிருந்தன. அநாதைகள், அடியார்கள், நோயாளர்கள் ஆகியோருக்கு ஆறுதலளிக்கும் நிலையங்களாகவும், கலைவளர்ச்சிக்குரிய ஸ்தாபனங்களாகவும் அவை விளங்கின.

இறைவனுடைய இருவகைப்பட்ட நிலைகள் சொரூபம், தடத்தம் எனப்படும். சொரூபம் எமது மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட நிலையாகும். தடத்தம் என்பது, மனம் வாக்குக் காயங்களுக்கு உட்பட்டவனாக இறைவன்நின்று அருள் புரியும் நிலை. இந்த நிலையில் மூவகைத் திருமேனிகளைக் கொள்ளுகிறான் பெருமான். அவை அருவம், அருவுருவம், உருவம் என்பன.

''உருமேனி தரித்துக் கொண்ட
தென்றலும் உருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம்
அருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோம்
செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த
கருணையின் வடிவு தானே.''

மூவகைத் திருமேனிகளையும் இறைவன் கொண்டது, எமது கருமேனியைக் கழிக்க வேண்டுமென்ற கருணையினாலேயே. எமது பிறவியையே கருமேனியென்று குறிப்பிடுகிறார் அருணந்திசிவம். உருவத்திருமேனியுடன் விளங்குகின்ற ஆலய அமைப்பு, உடம்பின் அமைப்பைப் போன்றதாகவே அமைந்துள்ளது. தூலம், சூக்குமம், காரணம் என்பவற்றை விளக்க மூன்று வீதிகளும், பதி, பசு, பாசம் என்பவற்றை விளக்கக் கொடிமரம், நந்தி, பலிபீடம் என்பனவும், தூலலிங்கமாகக் கோபுரமும், உள்ளமாகக் கர்ப்பக்கிரகமும், ஆறு ஆதாரங்களாகக் கொடிமரந் தொடக்கம் மூலஸ்தானம் வரை அமைந்த பகுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பார்கள். பிண்டம் என்பது எம்முடல். அண்டம் உலகமாகும். பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய ஆலயம் உலகமே. எனவே, மூன்று கோயில்களைக் காணலாம். உலகமாகிய கோயில் கற்கோயில், மனக்கோயில் என்பவை அவை.

கற்கோயிலின் அமைப்பைக் கூர்ந்து கவனிப்போமானால் அதில் பல உறுப்புகளைக் காணலாம். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் இடம் விமானம் எனப்படும். இதன் மேற்கூரை ஸ்தூபி எனப்படும். ஸ்தூபியின் கீழுள்ள கருவறை கர்ப்பக்கிரகம் எனப்படும். அதனை அடுத்திருக்கும் மண்டபங்கள் அர்த்த மண்டபம் என்றும் மகாமண்டபம் என்றும் இருவகைப்படும். இதைவிடச் சபாமண்டபம், வசந்தமண்டபம், வெளிமண்டபம் என்பனவும் அமைக்கப்படும். சுற்றுப் பிரகாரத் தெய்வங்களின் அமைப்பும், கொடிமரம், பலிபீடம், நந்தியின் அமைப்பும் ஆலயங்களில் மிக முக்கியமானவை. இதைவிடத் தூலலிங்கம் எனப்படும் கோபுரமே கோயில் வாயிலாக அமைகிறது. கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக் கொண்டு ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

ஆலயங்களில் நல்ல முறையிற் கட்டிடங்களும் விக்கிரகங்களும் அமைந்தால் மட்டும் போதாது. காலத்துக்குக் காலம் குடநீராட்டி நித்திய நைமித்தியங்களைச் செய்து விக்கிரகங்களுக்குத் தெய்வீக சக்தியைக் கொடுக்க வேண்டும். மின்விசிறியோடு மின்சார இணைப்புச் சேரவிட்டாற் காற்றின் அசைவை உணர முடியாது. அதே போன்று மந்திரம், மஞ்சனம், தூபம், தீபம் முதலியவற்றினாற்றான் விக்கிரகத்திலிருந்து தெய்வீக சக்தி வீசுகிறது. திருவிழாக்களினால் ஆலயங்கள் சிறப்படைய ஆலயங்களினால் ஊர் சிறப்படைகிறது. ஊருக்குச் செய்கின்ற பெருஞ் சாந்தி போல் விளங்குவன விழாக்களே. நாளாந்தம் நிகழும் நித்திய பூசைகளில் நிகழும் குறைகளை நிவிர்த்தி செய்வதற்குரிய மார்க்கம் நைமித்திக விழாக்களேயாகும்.

''சிறப்போடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு''

என்றார் வள்ளுவர். இங்கே சிறப்பு என்பது நைமித்திக விழாக்களையும், பூசனை என்பது நித்திய பூசைகளையுங் குறித்து நிற்கிறது. நித்தியத்தின் தாழ்வு, குறைகளைத் தீரச் செய்வது நைமித்திகமாதலின், 'சிறப்பு' என்பதை முற்கூறினார் என்பர் உரையாசிரியர். இறைவனைப் பற்றி அதிகமாகத் தியானிக்க வாய்ப்பளிக்கும் நாட்கள் விழா நாட்களே. மனிதனுடைய பந்த பாசத்தின் விடுமுறை நாட்கள் இவையென்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. சிறந்த ஒரு ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளத் தெளிவை ஊட்டும் நாட்கள் விழா நாட்களே. இந்த நாட்களை ஒவ்வொருவரும் தமது வாழ்ந்த நாட்களாகக் கருதவேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாடல்தரும் விளக்கத்தைக் கண்போம்.

''புல் நுனைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளில்லை நாளும்
என் னெக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன் சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை யருளாய்
இடை மருதுறை எந்தை பிரானே.''

நாயன்மார்கள் எல்லோரும் தத்தமக்கேற்பச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளிலே நின்று பக்குவ முதிர்ச்சியடைந்தவர்களாவர். ஆனால் அந்த நிலையிலும் ஆலய வழிபாட்டை அவர்கள் மறக்கவில்லை. தேவார முதலிகள் மூவரும் நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசித்தார்கள் என்று பெரிய புராணத்திற் படிக்கின்றோம். நாவரசர் கன்னியாகுமரி தொடக்கம் கயிலைமலை வரை காலாலே நடந்து தரிசனஞ் செய்தார். 'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா. நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு' என்று வழிப்படுத்தினார். தொண்டு கிழவரான பின்பும் கயிலையைக் காணவேண்டும் என்ற விருப்போடு சென்று மலையிலேற முடியாமையினால் உருண்டும், புரண்டும், தவழ்ந்தும் ஏறிச் சென்றார். முடியாத நிலையில் சோர்வடைந்திருந்த சமயத்தில் இறைவன் முனிவர் வடிவிலே தோன்றி விசாரித்ததும், கயிலை காண்பதற்கரிதெனக் கூறியதும் இதனைக்கேட்ட அப்பரடிகள்,

'' ஆளும் நாயகன் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்''

எனக் கூறினார். அவருடைய உறுதிப்பாட்டை எம்பெருமான்போற்றி 'அங்கேயொரு தடாகமமைத்து மூழ்கச் செய்து திருவையாற்றிலே எழுந்து கயிலைக் காட்சியைக் காணலாம்' என அருள்புரிந்தார். அந்நிலையிற் கயிலைக் காட்சியைக் கண்டு உய்ந்தார் அப்பர்பெருமான். சிவாலய வழிபாட்டின் மேன்மையை உலகுக்குக் காட்டுமுகமாக ஆளுடைய பிள்ளையாரும் தமது பிஞ்சுப் பாதங்கள் நோவப் பல தலங்களுக்கும் யாத்திரை செய்யத் துணிந்தமையைப் பொறாத எம்பெருமான், முத்துப்பல்லக்கு ஒன்று உதவி யாத்திரைக்கு வழிகாட்டினார். அவர் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் தோறும் சென்று நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருக்கயிலையிற் கொடுத்த வாக்குறுதியின்படி திருவெண்ணெய்நல்லூரில் தடுத்தாட்கொண்ட பெருமானை அறியாத அந்தணர்கள் எல்லோரும் முதிய அந்தண வேடத்தில் வந்தவரைக் கண்டு, நீர் இருக்கும் இடம் எது? என்று வினவினார். அப்பொழுது வந்தவர், இருப்பிடத்தைக்

காட்டுகிறேன் வாருங்கள்' என்று அழைத்துச் சென்று திருவருட்டுறை என்ற கோயிலுக்குள் புகுந்தார்; அப்படியே மறைந்துவிட்டார். நின்றவர்கள் திகைத்தார்கள்.

"திருவருட் டுறையே புக்கார்
கண்டிலர் திகைத்து நின்றார்"

என்று பெரியபுராணத்திற் காண்கிறோம். எம்பெருமான் சிறப்பாகத் தான் எழுந்தருளியிருக்கும் இடம் ஆலயமே என்பதை அறிவுறுத்தியமைக்கு இது ஒரு சிறந்த சான்றாகும். மூவர் பெருமக்களுக்கும் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலைக் கோலம் மூன்று இடங்களிலே காட்டப்பட்டது. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குச் சீர்காழியிலும், திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவையாற்றிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவெண்ணெய் நல்லூரிலும் காட்சி கொடுத்தார் பெருமான். இவர்கள் ஆலயங்கள்தோறுஞ் சென்று தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி அவ்வத் தலங்களின் மகிமையை எடுத்து விளக்கியுள்ளனர்.

சிவாலய தரிசனஞ் செய்யும் முறைகளை நாவலர்பெருமான் தமது சைவ நூல்களில் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். ஆலயத்திற்குச் செல்வோர், ஆலய வழிபாட்டு முறையை நன்கு அறிந்துகொண்டு அதன்படி சென்று வழிபட்டே நலம் பெறல்வேண்டும். சிவாலய தரிசனத்தில் நமஸ்காரம், பிரதட்சணம், நிவேதனம், தோத்திரம், தியானம் என்பன செய்தல் வேண்டும். நமஸ்காரம் என்பது இரு கைகளையும் குவித்து சிரசிற்கு மேலாயினும், முகத்திற்கும் மார்பிற்கும் நேராக ஆயினும் வைத்துக் கும்பிடுதலும் தலைவணங்குதலுமாம். ஆயினும் நிலத்திலே விழுந்து வணங்குவனவாகிய அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் முக்கியமானவை. இவைகளைக் கோவிலின் உட்புறத்திலே செய்வதிலும்பார்க்க வெளியிலேதான் செய்தல்வேண்டும். ஏனெனில் உட்புறத்தில் எப்பக்கத்திலும் மூர்த்திகள் இருப்பார்கள். ஆகையால் எந்தத் திசையிற் கால் நீட்டினாலும் குற்றமாகும். இதனால் உட்புறங்களிற் கும்பிடுதலும் தலை வணங்குதலுமே செய்தற்குரியன.

பிரதட்சணம் என்பது, கோயிலை வலமாகச் சுற்றி வருதல். இதனை வெளித் திருச்சுற்று இல்லாத கோயில்களில் உள் திருச்சுற்றாகும். பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு என்பன நிவேதனப் பொருள்களாம். தூபம், தீபம், பத்திரபுஷ்பம், பூமாலை முதலியன நிவேதனத்தின் அங்கமாகும். இவைகளை அர்ச்சகர் வாயிலாகப் பெருமானுக்கு வைத்துத் தரிசித்தல் வேண்டும். தோத்திரம் என்பது, தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளைப் பாடி இறைவனை அன்போடு வழிபடுதலாகும். வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டரினத்தகத்தானாக இறைவன் விளங்குகிறான். தியானம் என்பது முடிவிலே செய்யப்படவேண்டியது. ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் செபித்து அமைதியோடு மனத்தை இறைவனிடத்துச் சேர்த்து அவனையே நினைந்திருக்கும் நிலையே இதுவாகும். இந்த முறையில் இறைவனை வழிபட்டால் நிறைந்த பலனைப் பெறலாம்.

எனவே, ஆலயங்களே இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் சிறந்த இடங்கள் என்பதும் அவ்விடங்களை மையமாகக்கொண்டே கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன வளர்க்கப்பட்டன என்பதும் திருக்கோயில் வழிபாட்டை முறைப்படி ஆற்றி உய்தியடையவேண்டுமென்பதும் சைவ மக்களின் கவனத்திற்குரியவையாகும்.

✻

நாம் பிறவாத இடமோ, பேசாத மொழியோ, தோன்றாத குலமோ கிடையாது. எண்ணில் கோடி பிறவிகளை எடுத்துள்ளோம். ஆதலால் எல்லா நாடும் நம் நாடு, எல்லோரும் சகோதரர்கள் என்று கருதி சாந்தமாகவும் அன்பாகவும் வாழவேண்டும்.

— வாரியார்

# கிரியைகள் நிறைந்த கும்பாபிஷேகம்

க. சி. குலரத்தினம் அவர்கள்
(கௌரவ ஆசிரியர், மில்க்வைற் செய்தி)

## பிறவிப் பயன்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் திருவாக்கு. இது சைவாகமங்களின் சாரமாயுள்ள ஒரு வாசகம். சைவாகமங்கள் சைவசமயத்தவர்க்குரிய வாழ்க்கை, வழிபாட்டு முறைகளைக் கூறுவன. அவை சைவப்பண்பாட்டின் பண்டாரம்.

சிவபெருமான் தம்மைத் தாபித்து வழிபட்டு உய்தி பெறுவதற்கே நமக்குத் தனுகரண புவனபோகங்களைத் தந்தருளினுர். எங்கும் நிறைந்துள்ள இறைவனை எல்லோருங் கூடி ஓரிடத்தே நின்று வழிபடுவதற்கு வாய்ப்பானது ஆலயம். ஆலயம், கோயில், கோட்டம், நகரம், தனி முதலியன இறைவனிருப்பிடங்களுக்கு வழங்கும் பெயர்கள். ஆலயம் தலக்கோயில், மலைக்கோயில், குடக்கோயில் என மூவகைப்படும் என்பர்.

தமிழர் வாழ்வில் சைவம் மலர்ந்த காலத்தில் உலகெங்கும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் எழுந்தன. இன்றைய உலகில் ஐம்பெரும் கண்டங்களாக வகுக்கப்பட்ட பெருநிலப் பரப்பெங்கும் மிகப் பழைய காலத்தில் ஆலயங்கள் நிலவின. தென்னமெரிக்காவில் பழைய சைவாலயங்கள் மண்மூடுண்டு கிடக்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளில் பல்வேறிடங்களில் பாரிய அளவில் சைவாலயங்கள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. ஆபிரிக்காக் கண்டம், மத்தியகிழக்கு நாடுகள் எங்கும் சைவாலயங்கள் பல மறைந்து கிடக்கின்றன. பாரததேசத்தின் பாகிஸ்தான் பகுதியின் வடபால் பஞ்சாப்மாநிலத்தில் பழைய சிவாலயங்கள் மண்மூடுண்டு கிடக்கின்றன. இவை 5000 ஆண்டுப் பழைமை வாய்ந்தவை.

ஆன்மா லயப்படும் இடமாதலால் ஆலயம் எனப் பெயர் பெற்ற கோயில் வழிபாடு, இன்றியமையாதது. பெரும்பயன் தருவது. எனவே பழந்தமிழர் கோயிலமைந்த இடங்களிலேயே குடியேறினர். கோயிலில்லா இடங்களில் கோயில் அமைத்தனர். ஆலயந் தொழுவது சாலவுநன்று என்னும் கோட்பாட்டைக் கொண்டொழுகினர். நாற்பெரும் படைகள் புடைசூழ, ஊர்வலம் சென்ற முடியுடைமன்னர்களும் கோயில் வலம் வந்து வணங்கிச் சென்றனர். முற்றுந் துறந்த முனிவர்களும் ஞானவொடுக்கம் பெறக் கோயில்களுக்கருகில் குடிகளிலுறைந்தனர். ஆலயங்கள் தோறும் சித்தர்கள் சமாதிகள் அமைந்தமையும் இவ்வாறே. இறைவன் ஆலயங்களில் உறையத் தொடங்கிய நாள் எந்நாளோ என்று நாயன்மார் இறைவனையே கேட்டுப் பாடியுள்ளார்கள். எனவே ஆலய வழிபாடு ஆரம்பித்த நாள் எவருக்கும் தெரியாது. அது ஆதி நாள். வழிபாடு வாழ்வளிக்கிறது. வாழ்வளிக்கும் வழிபாடு முத்தியின்பம் நல்குகிறது. முத்தி பெறுவதற்குப் பக்திநெறி யறிவிப்பது ஆலயம்.

## ஆலய அமைப்பு

ஆலய அமைப்பு, மூர்த்திகள் திருவுருவங்கள், அவற்றின் பிரதிட்டை, அவற்றுக்கான கும்பாபிடேகம், உற்சவங்கள், பிராயச்சித்தம் முதலியன யாவும் சைவாகமங்களில் விரிவாகவுள்ளன. ஆகமவழியில் நாம் ஒழுகினல் இறைவன் நமக்கு அண்மையில் வருகிறுன் என்று மாணிக்கவாசகசுவாமிகள் அருளியுள்ளார். ஆலயம் பெரிய அண்டத்தின் பிரதி அமைப்பு. அது எங்கள் உடம்பின் அமைப்புமாகும். ஆலயம் கர்ப்பக்கிரகத்தை மூலத்தானமாக்க் கொண்டு, மூலவரைப் பிரதிட்டை செய்து, அவருக்குப் பரிவார தெய்வங்களைச் சுற்றுப் பிரகாரங்களிற் பிரதிட்டை செய்து, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புக்களில் அமைய வேண்டிய நந்தி, பலிபீடம், கொடிமரம் முதலியன அமைத்து, அப்பால் தேவசபை, வசந்தமண்டபம், யாகசாலை முதலியன அமைத்துக் கோபுரவாச

வின் மேலே தூலலிங்கம் எனத் தூரத்திலே கண்டு வணங்கத்தக்கதாக வானளாவிய கோபுரம் எழுப்பி நாற்பெரு மதில்கள் அமைத்து, அப்பால் பெருவீதிகள், தீர்த்தக்குளங்கள், நந்தவனங்கள், பசு மடங்கள், திருத்தொண்டர் உண்டுறங்கும் அம்பலங்கள் யாவும் அமைப்பர்.

## ஆலயம் அழைக்கிறது

நாம் சைவ நன்னெறியிலே பீடுநடை நடப்பதற்கு நம்மை அழைத்து அருள் சுரப்பது ஆலயம். ஆலயம்தானும் அரனெனத் தொழுமே என்பது சைவசித்தாந்தத்தின் முடிந்தமுடிபு. திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே நினைந்தவர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே. திருக்கோயில் பக்தி நிலையம், திருவருளான மூலபண்டாரம் வழங்கும் பத்தாயம். அது பண்பாட்டு நிலையம்.

ஆலயத்துக்கு அருள்சுரக்கும் சாந்நித்தம் அளிப்பது கும்பாபிஷேகம். கும்பாபிஷேகத்தைக் குடமுழுக்கு என்று தமிழில் வழங்குவர். கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற திருக்கோயில் மக்களுக்குப் பெருவாழ்வளிக்கும் அருள்தேக்கம். மின்சாரத்தேக்கம், நீர்த்தேக்கம் போலத் திருக்கோயிலும் ஒரு தேக்கம்.

ஆன்மா திருக்கோயிலில் லயிக்கின்றமையால் அதை ஆலயம் என்பர். ஆலயம் ஒரு பசு. அதன்மடி கருப்பக்கிருகம். பசுவின் மடி பால் சுரத்தல் போல் கருப்பக்கிரகம் திருவருள் சுரக்கிறது. பால் உடலுக்கு ஆதாரமானாற்போல் திருவருள் உயிருக்கு ஆதாரம். இந்த ஆதாரம் இம்மைக்கேயன்றி மறுமைக்கும் பயன் தருமாதலால், அருளில்லாதவர்க்கு அவ்வுலகம் இல்லை என்பர்.

கருப்பக்கிருகமாகிய மடியில் முலைக்காம்புபோல உள்ளது மூலமூர்த்தி. மூலமூர்த்தியைப் பிரதிட்டை செய்யும்போது முழுமூச்சளிப்பது கும்பாபிஷேகம். மூலத்தானம் ஒரு ஞானவாபி. அதில் திருவருள் வெள்ளம் தேங்கி நிற்கும். அதைச் செழுநீர்த்திரள் என்று தேவாரம் போற்றுகிறது, திருக்கோயில் திருவருள் சுரக்கிறது. மூலபண்டாரம் வழங்குவதற்குத் திருக்கோயில் அழைக்கிறது. வாருங்கள் வாருங்கள் என்று மணியோசை கேட்கிறது.



## யந்திரஸ்தாபனம்

ஆலயத்தில் எவர் கண்ணுக்கும் புலப்படாமல், ஆதிமூலத்தில் மூலமூர்த்தியின் பீடத்தின்கீழ் வைக்கப் பெற்றிருக்கும் ஒரு தகடு யந்திரம் ஆகும். அது பொன், வெள்ளி, செம்பு ஆகிய ஒரு உலோகத்தால் செய்யப்பெற்று, கோடுகள் வரையப்பெற்று, மந்திர அட்சரங்கள் எழுதப்பெற்று, புனிதமாக்கப் பெற்று, மந்திரவுரு வேற்றப் பெற்றுப் பீடத்தில் மறைத்து வைக்கப்பெற்று மருந்து சாத்தப் பெறுவதாகும். இயந்திரத்தின் மேல் பிம்பம் தாபித்தலும், அது ஆடாமல் அசையாமல் இருப்பதற்காக அஷ்டபந்தனம் என்னும் மருந்து சாத்துதலும், மந்திரங்கள் ஒலித்தலும், பலவிததீர்த்தங்களால் அபிடேகஞ் செய்தலும் விதிகளாகும்.

## கும்பாபிடேகம்

இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து, அவரை அன்புடன் ஆராதனை செய்து. அருள்பாலித்தருளும் வண்ணம் நாம் வணங்குவதற்கு அவ்சியமான, ஆதாரமான, இயல்பான, ஈடுபடுத்துவனவாய, உடன்பாடான, ஊக்கமுள்ள, எடுப்பான, ஏதுவான, ஐயமில்லாத, ஒப்புரவான கிரியா கருமங்கள் உள்ளன. அவற்றுள் கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கும் ஒன்றாகும். ஆலயத்துக்கெனத் திரட்டப்பெற்ற பொருளில் மூன்றில் ஒருபாகம் கும்பாபிஷேகத்தின் பொருட்டுச் செலவிடல் வேண்டும் என்பது பொதுவிதி.

கும்பாபிஷேகம் என்பது குடத்தில் உள்ள புனித நீரைக் கொண்டு இறைவனை நீராட்டுதல் என்பது பொருள். சாதாரணமாக அவ்வாறே அபிடேகம் செய்வதும் வழக்கமும் விதியுமாகும். ஆனால் கும்பாபிஷேகம் என்னும் அபிடேகம் சிறப்பாக மந்திர பூர்வமாகப் பெருமளவில் கிரியைகள் மலியச் செய்வதொன்றாகும்.

கும்பாபிடேகம் ஆவர்த்தம், புனரா வர்த்தம், அனுவர்த்தம், அந்தரிதம் என நால்வகைப் பிரதிஷ்டைகளின்போது நடைபெறும் பெருங்கிரியையாகும். ஆவர்த்தம் என்பது புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற திருக்கோயிலில் செய்வதாம். புனராவர்த்தம் என்பது பழுதுபட்டு சீர்குலைந்த ஆலயத்தைப் பழுது திருத்திப் புதுக்கியமைத்துப் பல பாகங்களையும் அழகுபடுத்திய வேளையில் செய்வதாம். இது செய்யும் வேளையிலே தான் ஆலயத்தின் மூலமூர்த்தி முதலான தெய்வத் திருவுருவங்கள் பாலஸ்தாபனஞ் செய்து நாளாந்த பூசைகளைச் செய்கிறார்கள். அனுவர்த்தம் என்பது திருக்கோயிலில் ஏதாவது தாறுமாறாப் பிறழ்வாக நடைபெற்றால் அக்குற்றங்கள் நீங்குவதற்குப் பிராயச்சித்த பூர்வமாகச் செய்யப் பெறுவது. அந்தரிகம் என்பது திருமேனிகளான பிம்பங்களில் ஏதாவது பிளவுகள், வெடிப்புகள் குறைவுகள் உண்டாதல், ஆலயத்திரவியங்கள், களவு போய்க் குறைவுகள் உண்டாதல் முதலிய வேளைகளில் குறை நீக்கிச் செய்வதாகும்.

இவ்வாறாக ஆவர்த்தம், புனராவர்த்தம் என்னும் இரண்டு வேளைகளிலும் செய்யும் கும்பாபிஷேகம் பெருமளவில் எவ்விதலோபமும் இன்றிச் செய்வதாகும். புனராவர்த்தம் பன்னிரண்டாண்டுகளுக்கொரு முறை செய்தல் உத்தமோத்தமம். இத்தகைய கும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண் கொண்டு பார்த்தல் பிறவியெடுத்ததன் பெரும்பேறு என்பர்.

## கும்பம்

சாதாரணமாகச் சைவச்சடங்குகள் சமஸ்காரங்கள் நடைபெறும் போதெல்லாம் நடு நாயகமாக நிறைகுடம் வைக்கும் வழக்கத்தில் கும்பம் இடம்பெறுகிறது. புரட்டாதி மாதத்தில் நடைபெறும். நவராத்திரி விழாவுக்குக் கும்பபூசை என்றே பெயர். திருக்கோயிலில் கொடியேறித் திருவிழா நடைபெறும்போது யாகசாலையில் கும்பம் இடம்பெறுகிறது. கும்பம் வைப்பதற்கு தங்கம், வெள்ளி, தாமிரம் முதலிய உலோகங்கள் பயன் தருகின்றன. இவற்றுள் தாமிரமே பெருவழக்கில் உள்ளது. தாமிரம் மின் சாரத்தை ஈர்ப்பதுபோல, மந்திரவொலியையும் ஈர்க்கும் தன்மை வாய்ந்தது.

செப்புக்குடத்தில் உள்ள நீர், யாகசாலையில் வேதமந்திரங்கள் ஓதும் ஒலியை ஈர்த்து, ஓசை ஒலியெலாமான இறைவனை மூலத்தானத்து மூர்த்தியில் லயிக்கச் செய்கிறது. மந்திரவொலி பாய்ச்சப்பெற்ற மூலமூர்த்தி, சாந்நித்தம் பெற்று அருள் சுரக்கிறது. அதற்கு ஆதாரமாக அடிப்பாகத்திலே தங்கத்தகடு அல்லது வெள்ளி, தாம்பரத்தகடு மந்திரம் பாய்ச்சப்பெற்று வைக்கப் பெறுகிறது. அது ஒரு பரம இரகசியம்.

கும்பத்தில் வருணபகவான், கண்கண்ட தெய்வ நதிகளான கங்கை முதலிய நீர்களில் நிரம்புகிறார். கங்கைநீர் கிடையாவிட்டால் எந்த நீரையும் பாவனையால் கங்கையாக்கிக் கொள்வது சம்பிரதாயமும் சடங்குமாகும். சாதாரணமாகத் தீபாவளி நாளில் நீராடுதல் கங்கா ஸ்நானமாகும்.

## கும்பலட்சணம்

கும்பலட்சணம் கூறுங்கால் அதிலே போர்த்த புடைவை தோலாகவும், கும்பம் சிவப்பேறப் பூசிய மண் இரத்தமாகவும், குடத்துமண் மாமிசமாகவும், கும்பத்துநீர் மேதஸாகவும், தர்ப்பையினாற் செய்த கூர்ச்சம் எலும்பாகவும், நன்றாக நாற்புறமும் சுற்றிய நூல் நரம்பாகவும், கும்பத்துள் இடப்பெற்ற இரத்தின பொன் பூ சுக்கிலமாகவும், நியசிக்கப்பெற்ற மந்திரம் உயிராகவும், கீழே பரப்பிய நெல், அரிசி, எள், பயறு, உளுந்து, துவரை, கோதுமை என்பன ஆசனமாகவும் கொள்ளப்பெறும். இஃது பாவனையின் உச்சம். பயனளிப்பதிலும் உச்சம். பக்தி வயப்படுத்துதலிலும் உச்சம். எனவேதான் இவ்வித கிரியா கிரம காலங்களில் மக்கள் ஆயிரவராக ஆலயத்தை மொய்க்கிறார்கள். இது சைவப்பண்பாட்டின் உச்சம்.

## கும்பாபிஷேக கிரியை

ஆலயத்தை எவ்வாறமைத்தல் அதிலே மூர்த்தியை எவ்வாறு பிரதிட்டை செய்தல் என்பனவாதிய கிரியைகளைக் கூறும் ஆகமம், கும்பாபிஷேகத்துக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளது. கும்பாபிஷேகம் கிரமமாகச் செய்யும் நெறியில் ஆசாரியவரணம், விப்ரா

னுக்ஞை, தேவானுக்ஞை, விக்னேச ஸம்பூஜநம், வாஸ்துசாந்தி, ரட்சோக்னஹோமம், பிரவேசபலி, தேனுவாசம் என்னும் கோபூசை, புண்ணியாக வாசனம், விப்ரயோஜனம், நவக்கிரகமகம், ஸம்ஹிதா ஹோமம், காஷ்டா ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ஆசார்யரட்சாபந்தனம், பிரஸன்ன பூஜை, யாக அலங்காரம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ராஹோமம், யாத்திராதானம், கடம் உலா, யாகசாலைப் பிரவேசம், யாகபூசை ஹோமம், யந்திரஸ்தாபனம், இரத்தினநியாஸம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், பிம்பசுத்தி, ரட்சாபந்தனம், தத்துவ திரயோசனம், யாஹாவஸாநகம், யாத்திராதானம், கிரஹப்பிரத்தானம், கும்பஉத்தாபனம், கும்பலிங்கசம்யோஜனம், மஹாகும்பாபிஷேகம், சாங்கோபாங்க பூசை, மஹாபிஷேகம், திருக்கல்யாண உற்சவம், திருவீதியுலா, ஆசார்ய உற்சவம், எஜமான உற்சவம், அவபிருதஸ்நானம், ரட்சாவிஸர்ஜனம், மண்டலாபிடேகம் பூசை, சகஸ்ரசங்காபிடேகம், சண்டயாகம் எனபனவாம். இவற்றில் குற்றங்குறைகள் இன்றிச் செய்தல் நாட்டின் சுபீட்சத்துக்கு ஏதுவாகும், பிழைகள் உண்டானால் பீடை உண்டாகும். பீடை உண்டாகாதிருப்பதற்காக மூலமந்திரத்தாலும் அஸ்திரமந்திரங்களாலும் ஹோமம்செய்து நிறைவுசெய்தல் பூரணாகுதியாகும்.

## கும்பத்தை எழுந்தருளச் செய்தல்

யாகசாலையில் உருவேற்றப் பெற்ற கும்பங்களை மூர்த்திகளுக்கு அபிடேகிப்பதற்கு எடுத்துச் செல்லும் காட்சி அற்புதமானது, பக்திமயமானது. கண்ணீர்மல்கச் செய்வது. பல்லியங்கள் ஒலிப்ப, வேத மந்திரங்கள் ஒலிப்ப, திருமுறைகள் ஒலிப்ப, பக்தர்களின் பஜனை கோஷங்கள் ஒலிப்ப அடியார்கள் மலர்மாரி பொழிய, இராஜ கெம்பீரத்தோடு கொடி குடை ஆலவட்டம் சாமரையாகிய உபசாரங்கள் மலிய சிவப்பிராமணர் சிரசின் மேல் பயபக்தியுடன் கும்பங்களைச் சுமந்து செல்வதைப் பார்ப்பது ஒரு பேறு.

## மகாகும்பாபிஷேகம்

நல்ல நேரம் முகூர்த்தம் பார்த்துக் குடத்துநீரை மூலமூர்த்தி, பரிவாரமூர்த்திகள், விமானத்துக்கலசம் முதலிய இடங்களில் அபிடேகம் செய்வதைக் கண்ணுற்றுக் காணும் பேறு மனிதப் பிறப்பெடுத்த பயனாகும்.

## எஜமானர் அபிஷேகம்

கும்பாபிஷேகத்துக்குப் பெரும்பொருள் செலவிட்டு முன்னின்று சங்கற்பஞ்செய்து கிரியையாதியன செய்தவர் எஜமான் என வழங்கப்பெறுதலோடு; நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களோடும்; சூரியன், சந்திரன் ஆகிய சுடர்களோடும் சேர்த்து எட்டாம் இடத்தில் எண்ணப் பெற்று நிலவும் பேறுபெற்றவருமாவர். இறைவனுறையும் இயமானன் அவர் எனவே அவருக்கும் அபிடேகம் செய்யப்பெறுகிறது.

✳

ஒருவரிடம் நேரிற் பேசும் போது 'நீங்கள்', 'உங்கள்' என்று பன்மையில் பேசிவிட்டு, அவர்கள் இல்லாதபோது 'இவன், அவன்' என்று ஒருமையில் பேசுவது மனிதனுடைய உயர்வைக் கெடுத்துவிடும்.

* * * *

பிறருடைய குற்றங்களை ஆராய்தல் கூடாது, நினைக்கவும் கூடாது, பேசவும் கூடாது. பிறருடைய குணநலன்களை மட்டும் சமயம்வரும்போதெல்லாம் கூறுதல் வேண்டும். இது மனிதவாழ்வை உயர்த்தும்.

— வாரியார்

# விரைகழல் சரணே

பண்டிதர் நா. இராசையா அவர்கள்

ஓம் என்பது பிரணவ மந்திரம். அவ்வோங்கார நாத சொரூபியாக விளங்குபவர் விநாயகப் பெருமான். அவரது ஆனைமுகத் தோற்றம் அப்பிரணவாட்சரத்தின் வடிவமாக அமைந்தது. சிவகணங்கள் எல்லாவற்றிற்கும் அவரே தலைவர். அதனாலேயே அவர் கணபதி என்றழைக்கப்படுவர். தனக்கு மேல் ஒரு தலைவனில்லாது தாமே ஆன்மகோடிகட்கெல்லாம் தலைவனாக விளங்குதலின் விநாயகன் எனவும், தம்மை அலட்சியம் செய்வார்க்கு விக்கினங்களை ஏற்படுத்தி அவர்தம் அறியாமையை அகற்றி அருள் புரிந்தும், தமது அடியார்களின் விக்கினங்களை அகற்றி அவர்களைக் காத்து அருள் புரிந்தும் நிற்றலின் விக்கினேஸ்வரன் என்றும் பெயர் பெறுவர். தம்மை வழிபட்டோரது இன்னல்களைப் போக்கி அவர்களுக் கெல்லாம் அருள் புரிபவர் விநாயகப் பெருமான். முருகன், மால், அகத்தியர், இந்திரன் முதலாய கடவுளரும், தேவர்களும், முனிவர்களும் விநாயகப் பெருமானை வழிபட்டுத் தம் துயர் தீரப் பெற்றனர்.

முன்னொரு காலத்தில் தென்றிசை நோக்கிப் புறப்பட்ட அகத்தியர் விநாயகப் பெருமானை வழிபடவிழைந்தார். விநாயகப் பெருமான் ஒரு கற்பாறையிடத்தே தோன்றியருள அகத்தியர் அவரை வழிபட்டு எம்பெருமானே நீர் இவ்விடத்தே நிலைகொண்டிருக்க வேண்டுமென இரந்ததோடு அவ்விடத்தே தாம் ஒரு நகரத்தையுண்டாக்கி அந்நகர மக்களைக் காத்து அருள் புரிய வேண்டுமென வேண்டினார். விநாயகப் பெருமானும் அவர் வேண்டியவாறே அருள்புரிந்தார். அகத்தியரால் நிறுவப்பட்ட அந்நகரமே பின்னாள் ''வாதாபி'' எனப்பட்டது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டை ஆண்ட நரேந்திர பல்லவனின் படைத்தளபதி பரஞ்சோதி (இவரே பின்னாள் சிறுத்தொண்ட நாயனார் எனப் போற்றப்பட்டவர்) வாதாபி நகர்மீது படையெடுத்து அந்நகரை வெற்றிகொண்டு அங்கு அகத்தியரால் வழிபடப்பட்ட விநாயகர் சிலையை எடுத்து வந்து தமிழ் நாட்டில் கோவிலமைத்துப் பிரதிட்டை செய்தார். இவ்வரலாற்றைக் கொண்டே ''வாதாபி ஹணதீபம்'' என்ற ஹம்சத்துவனி ராகக் கிருதியை அருளிச் செய்தார் தியாகப் பிரமம். அக்கிருதியில் வரும் ''பிரணவ சொரூப வக்ரதுண்டம்'' என்ற தொடர் பிரணவ மந்திர சொரூபியே விநாயகப் பெருமான் என்ற உண்மையை உணர்த்தும். பரஞ்சோதியின் மூலம் விநாயகர் வழிபாடு தமிழ் நாடெல்லாம் பரவிற்று. மக்கள் ஊரெல்லாம் வேழ முகத்தவனுக்கு கோவில் அமைத்து வழிபாடியற்றினர். அவ்வாறமைக்கப்பட்ட ஆலயங்களுள் ஒன்றே இணுவில் தெற்கு மடத்து வாசற் பிள்ளையார் கோவிலாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் வேழமுகத்தண்ணல் பாதமலர்களை சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னன் ஸ்ரீ பரராச சேகரன் வழிபட்டு அவனருள் பெற்றுத் தான் தொடங்கிய வினைமுடித்து மகிழ்ந்தான். பரராசசேகரன் வழிபட்ட காரணத்தால் இக்கோவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் என்னும் பெயர் பெற்றது.

விநாயகப் பெருமான் தம் திருவடிகளைச் சரணென நாடிவந்தோர் தம்மிடர் தீர்த்து, அவர் வேண்டுவ வருளிக் காப்பவர். அவரை ஔவை மூதாட்டி சரணடைந்து அவரது திருவடிகளை ''சீதக் களபச் செந்தாமரைப் பூம் பாதம்'' எனச் சிறப்பித்து அகவல் பாடி இறுதியில் ''வித்தக விநாயக விரைகழல் சரணே'' என அவர் திருவடிகளே தஞ்சம் என்றார். விநாயகர் அவர்க்கு அருள் புரிந்து அவரைக் கைலை சேர்த்தார். விநாயகரது திருவடிகள் சரணடைந்தோரைக் காக்கும் திருவடிகள். அவற்றை நம்பியவர் பிறப்பறுத்தோராவர். இறைவனுடைய திருவடிகள் ஆன்மாக்களுக்கு அருள்புரிவன. அவற்றை நாளும் நினைவார் தம் வினைநீங்கி வீடெய்துவர்.

பாவமும் பழியும் பற்றற வேண்டுவீர்
ஆவிலஞ் சுகந்தாடும் அரன் கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்குமே.

என்றுர் அப்பர். 'எல்லாவற்றிற்கும் தோற்ற மாய் இறுதியாய் ஆதியாய் அந்தமாய் போக மாய் விளங்குவன இறைவன் திருவடிகள். அத்திருவடிகளை அடியார்கள் போற்றித் துதித்து அருள் பெற்றனர். ''இனித்த முடைய எடுத்த பொற்பாதம்'' என்றுர் அப்பர். ''தானே வந்தெம்மைத் தலையளித் தாட் கொண்டருளும் வான்வார் கழல்'' என்பர் மாணிக்கவாசகர். இத்துணைப் பெருமை வாய்ந்த இறைவன் திருவடிகளை நினையாது, மலபந்தத்தான் பிணிப்புண்டு பழிபாவங்கட்கு ஆளாகி வருகின்றேம். மனைவியென்றும், மக்களென்றும், மாடென் றும், கன்றென்றும், நிலமென்றும், பொரு ளென்றும் ஆசைவயப்பட்டுக் கருத்தழிந்து கலங்குகின்றேம். அரிதிற் கிடைத்த மனிதப் பிறவியை வீணுக்கித் துன்பச்கடலில் சிக்கித் தவிக்கின்றேம். அமைதியற்று அல்லற்பட் டழிகின்றேம். படித்தும் படியாத பாமரராய் அறிவிழந்து வெந்துயரில் வீழ்கின்றேம். இவ் வாறு துன்புறும் நம்மையெல்லாம் காத்து அருள் புரியவே ஆண்டவன் எங்கும் கோவில் கொண்டெழுந்தருளியுள்ளான். எனவேதான் 'திருக்கோவில் இல்லாத ஊர் காடு' என்றுர் அப்பர். 'கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்' என்றுர் ஔவை மூதாட்டி. எனவே நாம் ஆலயங்களிற்குச் சென்று ஆண்டவன் பாதகமலங்களைப் போற்றி வணங்குதல் வேண்டும்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா போற்றிசய போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறு நில்லே.

என்றுர் அப்பர். மனம் அமைதிபெற இன்பம் நிலைத்திடத் துன்பம் அகன்றிடத் தும்பிக் கையான் பதமலர் போற்றுதலே நங்கடனு கும். எனவே தஞ்சம் என்றடைந்தோர் தந் துயர் தீர்க்கும் வித்தக விநாயகன் விரை கழல் சரண்புகுந்திடுவோம்.

✱

மனிதன் வாழும் வழிவகைகளை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். சிந்தனையும், தெய்வ வந்தனையும் மனிதனுடைய வாழ்வை உயர்த்துகின்றன.

✱ ✱ ✱ ✱

நமக்கு எது மகிழ்ச்சியைத் தருகின்றதோ, அதனை நாம் மனம், வாக்கு, காயங்க ளால் பிறருக்குச் செய்யவேண்டும். நமக்கு எது வெறுப்பைத் தருகின்றதோ அதனை நாம் மறந்தும் பிறருக்குச் செய்யக்கூடாது.

✱ ✱ ✱ ✱

எப்போதும் எந்த இடத்திலும் பிறர் மனம் நோகப் பேசக்கூடாது.

— வாரியார்

# பிரணவப் பொருளாம் பெருந்தகை

ஸ்ரீமான் வை. கதிர்காமநாதன் அவர்கள்
(ஓய்வுபெற்ற அதிபர், சைவப்பிரசாரகர்)

சர்வஜீவதயாபரனுய் வேதாகமங்களி னுலும் காணுதற்கரியனுய் யாண்டும் சிவமய மாய் விளங்கும் இறைவனின் வேருகாத திரு வருட் சக்தியே விநாயகர். ஓங்கார வடிவினர். வேதாகமங்களும் பிறகலைகளும் தோன்று வதற்குத் தாரகமாய் உள்ளது ஓங்காரம்.

''குடிலை யென்னும் தடவயல் நாப்பண்
வேத மென்னும் பாதம் வளர்த்தனே''

என்பது இறைவன் அருள்பெற்ற ஆன்ருேர் அருள்மொழியன்ருே. வேதநாயகனே விநாயக னென்பதும் தனக்கென ஒரு தலைவனில்லாத முழுமுதல்வனென்பதும், மண்ணின் நல்ல வண்ணம் வாழ்வதற்குறுதுணையாய் நின்று அருள் பாலிப்பவன் என்பதும், ஆம்பல் முகவரக்கன் கிளையோடும் அழிய அவனிடத் துள்ள ஆணவத்தின் வலிமையையடக்கி அவனை யாட்கொண்டருளிய பரமகருணைநிதி யென்பதும், புலன்கள் வழியே செல்ல வொட்டாது தம்மை நிறுத்திய விரதானுஷ் டான சீலர்களாகிய மெய்யடியார் தம் வாயினுங் கண்ணினு மனத்தினு மகலா திருந்து வேண்டுவார் வேண்டுவதையீயும் தாதா என்பதும் பிறவும் பிரணவப் பொருளாய் சிவஸ்வரூபமாய் விளங்கும் ஸ்ரீ விநாயகப் பெருமானிடத்தமைந்த பெருந் தகைமையாகும்.

ஒரு கோட்டன் இரு செவியன் மூம் மதத்தன் நால்வாய் ஐங்கரத்தனுகிய பெரு மானுக்கு இணுவில் என்னும் அணிபெறு நாட்டில் ஆலயமமைத்து அவரைப் பிர திஷ்டை செய்து வழிபாடாற்றி வந்தவன் யாழ்ப்பாணத்தை அரசாண்ட பரராசசேகர மன்னன். இம்மன்னன் ஆரியச் சக்கரவர்த்தி கள் மரபில் பதினெராம் தலைமுறையைச் சார்ந்தவன், உதாரகுணசீலன். வைதீக சைவ முந் தீந்தமிழுந் தழைக்கத் தொண்டாற்றிய புண்ணிய புருஷன். நற்றமிழ் வல்ல நாவ லரும், பாவலரும் போற்ற அரசாண்டவன். இத்தகைய மன்னனுல் பிரதிஷ்டை செய்யப் பெற்ற பெருமானுக்கு ''ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார்'' என்னும் திருநாமம் வழங்க லாயிற்று.

''திங்கள்நிகர் கவிகையான் துங்கமிகு பரராச
சேகரத் திகிரிவேந்தன்
பொங்கும்அருள் தங்கவே பூசித்த நாயகா''

என்னும் பழைய செய்யுளடியானறிக.

''இக்கோயில் இற்றைக்கு ஏறக்குறைய 250 வருடங்களுக்கு முன்னிருந்த பரராச சேகரனென்னும் தமிழரசனுல் தாபிக்கப் பட்டதென்பதும் அதனுற் பரராசசேகரப் பிள்ளையாரென்று வந்ததென்பதும் இது போர்த்துக்கீசரால் இடிபட்டதென்பதும் வரலாறு. இப்பொழுது 30 வருடங்களுக்கு முன் இவ்வூரவர்களுடைய பொருளுதவி கொண்டு கற்கோயிலாக்கப்பட்டுப் பூசை உற்சவம் முதலியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன''. இது 1897ஆம் ஆண்டு வெளி வந்த விஞ்ஞாபனம். 4–9–72இல் மகாகும்பா பிஷேகம் நடைபெற்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் இவ்வாலயத் தில் ஸ்ரீ விநாயகப் பெருமான் திருவருளால் பல திருப்பணிகள் நடைபெறுகின்றன. மூலஸ்தானம், உள்வீதியிலமைந்த சமயா சாரியர்கள் ஆலயம், மகாலட்சுமி ஆலயம், வேணுகோபாலன் ஆலயம், ஸ்ரீ சுப்பிர மணியராலயம், ஸ்ரீ சண்டேசுவரர் ஆலயம், நவக்கிரக ஆலயம், ஸ்ரீவைரவர் ஆலயம், வசந்த மண்டபம், யாகசாலை, இராஜ கோபுரம், மணிக்கோபுரம், மணிமண்டபம் முதலியன புதுக்குவிக்கப் பெற்று வருகின் றன. இன்னும் சிவலிங்க பிரதிஷ்டைக்குரிய கோயிலும், அம்பாள் கோயிலும், ஸ்ரீ நடனசபாபதி கோயிலும், ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் கோயிலும், ஸ்ரீ சுப்பிரமணியர் உற்சவமூர்த்தி கோயிலும் அழகிய சிற்பங்கள் அமையப் பெற்ற கோபுரங்களையுடையன வாய் விளங்குகின்றன. இவை யாவும் அவ் வவ் உபயகாரர்கள் கொடுக்கும் பெருளுதவி யோடும், தர்மவான்களாகிய ஊரவர்கள் கொடுக்கும் பொருளுதவிகளோடும் நடை பெற்று வருகின்றன.

ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு வரும் பொருட்களையெல்லாம் வழுவா வண்ணம் பாதுகாத்து இராப்பகலாகக் கடமையாற்றும் மக்களின் திருத்தொண்டு போற்றுதற்குரியது. மக்கள் பலரும் ஆற்றும் திருத்தொண்டுகளோ அளப்பரியன. ஆலயம் எங்கும் வியாபகமாய் நிறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் விழிபட்டு உய்யும் பொருட்டு சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம். வேதாகமங்களை அருளிச் செய்தவர் சிவபெருமான். அவர் திருவருளின்படி ஆலயங்கள் நடைபெறுதல் வேண்டும். நான்கு வேதங்களையும், இருபத்தெட்டு ஆகமங்களையும், பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும், பிரமாண நூல்களாகக்கொண்டு ஒழுகும் வைதீக சைவசமயிகளுக்கே ஆலயங்கள் உரியனவாம். ஆலயங்களை எவ்வாற்றானும் மாசுபடுத்தல் பெருங்குற்றம். சிவபாரதமுமாம்.

சைவாபிமானிகளாகிய புண்ணிய சீலர்களே! ருதிரோற்காரி வருஷம் தை மாதம் 23ஆம் திகதி (6–2–84) ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலயத்தில் வேதபாரங்கதர்களாகிய பிராமணோத்தமர்களால் நடாத்தப்படுகின்ற கிரியைகளையும், கும்பாபிஷேக விழாச் சிறப்பினையும் தரிசித்து மனமாசு நீங்கி ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையாரின் திருவருளுக்குப் பாத்திரர்களாகி இகபர சுகங்களைப் பெற்று நாமெல்லோரும் வாழ்வோமாக.

காரொத்த வார்குழல் சோரக்கண்
　　ணீர்குடங் கைவழியே
வாரத் தனித்து வழிபா
　　டாற்றுமெம் வனிதையர்க்கு
ஆரத் தருணத்தி லஞ்சேலென்
　　றிரங்கு வாரிணுவை
சாரத்தண் ணளி சுரக்கும்
　　பரராச சேகரனே.

— இரட்டை மணிமாலை

✱

கடவுள் சந்நிதியில் நாம் வாழுகின்றோம். கடவுள் எங்கும் உறைபவர், அவர் நாம் நினைப்பதை, பேசுவதை, செய்வதை அறிந்துகொண்டேயிருக்கின்றார். ஆதலால் தீய சிந்தனைகள், தீய சொற்கள், தீய நடைகள் இவைகளை அறவே விலக்கவேண்டும். நல்ல சிந்தனை, நல்ல சொற்கள், நல்ல நடைகள் ஆகியவைகளை மேற்கொள்ளவேண்டும்.

* * * *

"நமக்கு எல்லாந் தெரியும், மற்றவர்க்கு என்ன தெரியும்?" என்று நினைத்துக்கொண்டு தருக்குற்றிருக்கக்கூடாது. கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு. எல்லாந் தெரிந்தவர்களும், ஏதும் தெரியாதவர்களும் உலகில் இல்லை. ஆதலால் அடக்கமும், பணிவும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். பணிவு மனிதனுடைய வாழ்வை உயர்த்தும்.

* * * *

கடன்பட்டுப் பாலன்னம் உண்பதைப் பார்க்கிலும், கடன்படாமல் உப்பில்லாக் கஞ்சி உண்பது நல்லது,

* * * *

யாரிடத்திலும் கடுஞ்சொல்லாக வெடு வெடு வென்று பேசக்கூடாது. இனிமையாகவும், குளிர்ச்சியாகவும் பேசவேண்டும். கரவாக ஒருவரிடமும் பழகக்கூடாது.

— வாரியார்

# விநாயகர்

வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள்

விக்கினங்களை நீக்குபவர் விநாயகர். தனக்கு மேலாக ஒரு நாயகன் இல்லாமல் தானே அனைவருக்கும் நாயகனாக விளங்குபவர். பிரணவ சொரூபியும் அவரே! ஆதியும் அந்தமுமில்லாத பரம் பொருளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு 'ஓம்' என்னும் பிரணவ நாதமேயாகும். அந்த 'ஓம்' என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாகும். அதனால் 'ஓங்கார ரூபன்' என்று அப் பெருமான் அழைக்கப்படுகிறார். ஓங்காரத்துக்கு இடப்புறம் மட்டும் ஒரு கோடு இருக்கிறது. வலப்புறம் கோடு இல்லை. விநாயகப் பெருமானுக்கு இடப்புறம் மட்டும் கொம்பு உண்டு. வலப்புறம் இல்லை. எனவே, விநாயகப் பெருமான் 'பிரணவ ரூபி' என்பது பின்வரும் பாவால் நன்கு விளங்கும்.

'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே'

விநாயகருக்குப் பிள்ளையார், கணபதி, விக்கினேசுவரர், ஏரம்பர், மூத்த நாயனார் முதலிய பல திருநாமங்கள் உள்ளன. சிவ கணங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதனால் 'கணபதி' என்னும் திருநாமமும், மெய்யன்போடு தன்னை வழிபட்டுச் செய்பவர்களின் கருமங்களை இடையூறின்றி இனிது நிறைவேறச் செய்வதனால் 'விக்கினேஸ்வரன்' என்னும் திருநாமமும் வழங்கப்பட்டு வருகிறது.

விநாயகப் பெருமானது அருளை வேண்டி அனுட்டிக்கப்படும் விரதங்களுள் வெள்ளிக் கிழமை, விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி ஆகிய மூன்று விரதங்களும் முக்கியமானவை. இந்த விரதங்களைப் பக்தி சிரத்தையோடு தவறாது அனுட்டித்து வருபவர்களுக்கு விநாயகன் அருளால் சகல நன்மைகளும் உண்டாகும். நீண்ட வாழ்நாளும் நோயற்ற வாழ்வும் கிடைக்கும். எண்ணிய எண்ணங்கள் கைகூடும். சிறந்த கல்வியும் ஞானமும் வீடுபேறும் கிடைக்கும்.

எந்தக் கருமமும் இடையூறின்றி இனிது நிறைவேறுதற் பொருட்டு விநாயகன் அருளை வேண்டி வணங்குதல் தொன்று தொட்டு வரும் அனுஷ்டானமாகும். விநாயகரை வழிபடும் முறைகளிலே சிரசிலே குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன சைவப் பெருமக்களால் பாரம்பரியமாகக் கைக்கொள்ளப்பட்டு வரும் பண்பாட்டுப் பழக்கங்களாகும். விக்னேஸ்வரப் பெருமான் சந்நிதியில் அடியார்கள் சிரசிலே இரு கைகளையும் மாறிப் பொத்திப் பிடித்து மூன்று முறை குட்டிக் கொள்ளுதலையும், இரு செவிகளையும் இரு கைகளாலும் மாறிப் பிடித்துக் குந்தி எழுந்து தோப்புக்கரணம் போடுதலையும் இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. 'தோர்பி கர்ணம்' என்பதே தோப்புக்கரணம் என்று மாறியது. 'தோர்பி' என்றால் கைகளால் என்று அர்த்தம். 'கர்ணம்' என்றால் காது. தோர்பி கரணம் என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது. விநாயகப் பெருமானையே முழுமுதற் கடவுளாகக் கருதி உபாசிக்கிற மதத்திற்கு காணபத்தியம் என்று பெயர்.

தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியை அறியாதார் ஒருவருமிலர். விநாயகப் பெருமானை உள்ளன்புடன் பூசிப்பவள். அல்லும் பகலும் அனவரதமும் அப் பெருமானது சிந்தனையிலே திளைப்பவள். காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி வேண்டுகின்றாள். விநாயகப் பெருமானே! துங்கக் கரிமுகத்துத் தூமணியே! ஐயனே! பால், தெளிதேன், வெல்லப்பாகு, பருப்பு முதலிய நான்கு பொருள்களையும் கலந்து உனக்கு நிவேதிப்பேன். நீ எனக்கு இயல், இசை, நாடகம் என்று சொல்லப்படும் சங்கத்தமிழ் மூன்றையும் தருவாயாக, என்று அன்புடனும் பணிவுடனும் பாட்டி எம்பெருமானிடம் உள்ளம் உருகிக் கேட்கின்றார்.

'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.'

சங்கத் தமிழின் இனிமையைப் பாட்டி நன்கு சுவைத்திருக்க வேண்டும்.

சேரமான் பெருமாள் நாயனார் திருக் கைலை செல்வதைக் கேள்வியுற்ற ஔவைப் பாட்டி தானும் உடன் கைலைக்குச் செல்ல வேண்டும் என்று பெரிதும் விரும்பி வழக்க மாகச் செய்துவரும் விநாயக பூசையை வேகமாகச் செய்தாள். 'அமைதியாகப் பூசை செய். உனது விருப்பம் நிறைவேறும்' என்று அசரீரி எழுந்தது. சுற்று முற்றும் பார்த்தாள். யாரும் இல்லை. விநாயகப் பெருமானே இவ்வாறு திருவருள் பாலித்தான் என உணர்ந்து அமைதியாகப் பூசையைத் தொடர்ந்து செய்தாள். கைலையின் நினைவையே பாட்டி மறந்துவிட்டாள், சேரமான் பெருமாள் நாயனாரைப் பற்றிய சிந்தனையும் அகன்றது. தன்னையே மறந்து பெருமானுடைய திருவருட் பேற்றிலே திளைத்து 'சீதக் களப ...... என்று தொடங்கும் விநாயகர் அகவலைப் பாடி உள்ளன்போடு துதித்தாள். 'வித்தக விநாயகா விரைகழல் சரணே' என்று பாடி முடித்ததும் விநாயகப் பெருமான் தமது துதிக்கையால் பாட்டியைத் தூக்கி கைலையம்பதியிலே கொண்டு சேர்த்தார்.

எமது வெவ்வினையை வேரறுக்கவல்லவர் விநாயகப் பெருமானே! வேட்கை தணிவிப்பவரும் அவரே! விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் அவரே! எனவே, எழுபத்திரண்டு அடிகளைக் கொண்ட இந்த விநாயகர் அகவலைத் தினந்தோறும் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்துவரின் ஔவைப் பாட்டிக்கு அருள் செய்த விநாயகன் நமக்கும் நிச்சயம் அருள்புரிவான்.

'அத்தி முகவனை நித்த நினைபவர்
சித்த மகிழ்வோடு முத்தி பெறுவரே'

குறிப்பு :- இக் கட்டுரை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை 1 இல் 'சைவநற்சிந்தனை'யாக ஒலிபரப்பப் பட்டது.

அன்பளிப்பு

ஸ்ரீ முருகன் மில்
கே. கே. எஸ். வீதி,
ஆஸ்பத்திரியடி,
இணுவில்.

அன்பளிப்பு

குமரன் மில்
இணுவில் கந்தசுவாமி கோவிலடி
இணுவில்.

# விநாயகர் பெருமை

ஆசிரியை திருமதி வை. கணேசபிள்ளை அவர்கள்

''செஞ்சொற் புனைமாலை சிறந்திடப் பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்'' என்கிறார் அருணகிரி. ''எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறப் பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்'' என்கிறார் கந்த புராணம் பாடிய கச்சியப்பர். விநாயகர் என்னும் பதத்திற்குத் தனக்கு மேலொரு நாயகன் இல்லாதவர் என்பது பொருள். அதாவது தலைவன் இல்லாதவர். சைவமக்களின் வணக்கத்திலும், வைபவங்களிலும் முதலிடம் பெறுபவர் விநாயகர். அவரில்லாத கருமமே இல்லை. எமது வாழ்க்கையின் இடர்களை நீக்குபவர். இதனால் விநாயகருக்கு இப்பெரும் முதன்மை உண்டு. விநாயகர் ஒப்பற்ற தலைவன். தன்னிகரில்லாத் தலைவன் ஆயினும் அடியார்க்கு எளியவன். இதனாலே தான் பிராமணச் சிறுவனாகவும், காக வடிவினனாகவும் ஒருமுறை திருவிளையாடல் புரிந்தனர்.

இத்தகைய விநாயகருக்கு விக்கினராசா, கணேசர், கணபதி, ஐங்கரன், லம்போதரன், வக்கிரதுண்டர், ஏகதுண்டர் என்றும் பல திருநாமங்கள் உண்டு. விக்கினங்களைப் போக்குபவராதலால் விக்கினராசா என்றும், கணங்களுக்கு அதிபதியாகையால் கணபதி என்றும், ஐந்து கரமுடைமையால் ஐங்கரன் என்றும், ஒரு துதிக்கையுடைமையால் ஏக துண்டர் என்றும், பேழை வயிறுடைமையால் லம்போதரன் என்றும் சிறப்பிக்கப் படுவர்.

யானைமுகம், பேழைவயிறும், பெரும் பாரக் கோடும், ஐந்து கரமும், அங்குச பாசமும் அவர் யாவற்றையும் கடந்த பரம் பொருள் என்பதையும், இந்த உலகம் யாவும் அவருள் அடக்கம் என்பதையும், அவர் பரமசிவனிலும் வேறல்லர் என்பதையும் உணர்த்தும்.

இத்தகைய விநாயகப் பெருமானின் தோற்றம் பற்றிய கதைகள் பல. சிவனுக்கோ பார்வதிக்கோ மட்டும் பிறந்தவர் என்றும் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்தவரென்றும் பார்வதி நீராடவைத்த வாசனைத் திரவியங்களில் இருந்து தோன்றினார் என்றும் புராணங்கள் மாறுபடும். எது எப்படி இருப்பினும் சிவமும் சக்தியுமாகிய பிரணவ வடிவமே விநாயகர் என்பதே ஏற்க வேண்டிய பொருள்.

''பிடியதனுருவுமை கொள — கரியது வடிகொடு—கணபதி வர அருளினன்'' என்று தேவாரம் பாடினார் ஞானசம்பந்தர். பிள்ளையார் கதையும் ''மதகரி உரித்தோன் மத களிறாகவும் மதர்விழி உமை பிடி வடிவமாகவும் கூடிய கலவியில் குவலயம் விளங்க விநாயகர் அவதரித்தார் எனக் கூறும். சிவ சக்தி வடிவம் ஓங்காரம். ஓங்கார வடிவம் விநாயகர். அகர, உகர, மகரம் சேர்ந்ததே ஓம் எனும் பிரணவம். அகரம் (ஆண் யானையையும் சிவத்தையும்) உகரம் (பெண் யானையையும் சக்தியையும்) குறிக்கும். மேலும் அவர் தம் தோற்ற அழகினைப் பிள்ளையார் கதையிற் கண்டவாறு கண்டின்புறலாம்.

''முண்டக மலர்போல் முழுதும் சிவந்த
தண்டையுஞ் சதங்கையுமலம்புதாளிணையுங்
குண்ட வண்டியும் தண்டரள மாலையும்
மண்டொளி தழைத்த புண்டர நுதலும்
முடிவுகண் டறியா முப்புரி நூலும்
சுடர்விடுங் கனகத் தோளொரு நான்கும்
சோதிவண் டரளத் தொடைபுனை கழுத்தும்
பூதலம் புரக்கும் பொற்கரி முகமும்
தவளக் கிம்புரி தருமருப் பிரண்டும்
பவளத் தொளிவாய்ப் பைந்துவ ரிதழும்
இமையா முக்கணும் இருதழை செவியும்
அமையா நிலவுமிழ் அவிர்சடை முடியும்
அந்தி வண்ணமும் அங்குச பாசமும்
உந்திச் சுழிமேல் உதரபந் தனமும்
ஐங்கரக் கரிமுகன் வந்துஅவதரித்தலும்''

என விநாயகர் வடிவு சித்தரிக்கப்படுகிறது. கரிமுகம், ஐந்துகரம், அங்குசபாசம் முக்கண். அவிர்சடை யாவும் சிவனொடு பேதகமற்ற நிலையை உணர்த்தும்.

இவரை வணங்காத சைவ உலகு இல்லை. இவரருள் பெற்றோர் பலர். திருமுறைகளைக் கண்டெடுக்க நம்பிக்கும், கைலைத் திருமணங் காண ஔவைக்கும், குருட்டுத்தன்மை நீங்கத் திருமாலுக்கும், தவநெறி பிழைத்த தையல் இலக்கணசுந்தரிக்கும் நல்வாழ்வும் அருளும் கிடைத்தமை விநாயகர் பெருமையை உணர்த்தப் போதுமானவையே.

இத்தகைய பெருமைக்குரிய விநாயகப் பெருமான் இணுவையம் பதியில் இருந்து எம்மையெல்லாம் இரட்சித்து வருகின்றார். அவர் பொன்னடிகளை நாம் என்றும் மறவாதிருப்போமாக.

# ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும்

திரு. சபா. ஜெயராசா அவர்கள்

இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் செம்பொன் மணி நிலத்தில், மாரி தவழும் காலங்களில் மர கதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம் புல்லின் மகிமை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதந்துரைக்கப்பட் டுள்ளமையை யாவரும் அறிவர்.

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப்புராணம் யாவர்க்கும் பயன் பட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனு காண்டம், இலீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து, அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரண்டாயிரஞ் சுலோ கங்களால் ஒரு புராணமாக்கினுர்.

முதலாவது உபாசனு காண்டத்தில் அறுகம் புல்லின் பெருமை விதந்துரைக்கப் பட்டுள்ளது.

நறுமணமுடைய பலவகையான மலர் கள் இருக்கவும், அறுகினுல் நான்முகனை ஏன் வழிபடவேண்டும் என்பதை விளக்க, அவந்தி பட்டணத்திலுள்ள சுலபன் என்னும் பெய ருடைய ஓர் அரசனுடைய கதை கூறப் படுகின்றது. சுலபனுடைய மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடி வந்த அந்தணனுடைய பெயர் மதுசூதனன். அம் மூவரையும் அடியொற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெருமை உரைக்கப் படுகின்றது.

மேலும், அனலாசுரனை அழித்த ஆனை முகக் கடவுளின் வெப்பம் தணிணைக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனி வர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும் இரு பத்தோராறுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புரா ணத்திலே எடுத்துரைக்கப் பெறுகின்றது.

சனகமன்னனுடைய பசு அறிவைப் போக்கிப் பதியறிவைக் கொடுத்து ஆட் கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. 'ஒரு புல்லுக்கு நிக ராகுமா குபேரனுடைய செல்வம்' என்று கூறுமளவுக்கு அறுகின் நிறைகோல் ஏறிய வரலாறு உண்டு. ''ஆனைமுகக் கடவுளி னுடைய திருவடிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது'' என்பது விநாயக புராணம் விளக்கும் உண்மை.

புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல் லறிவூட்டும் அறிவுக்கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கியப் பண்பில் உட்பொதிந்து காணப் படும் படிமவாக்கங்களும், குறியீட்டுப் பண்பு களும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க் கின்றன. அறுகு என்பது சாதாரணமாத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை ததும்பிய படிமவாக்கம் வாமனுவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல், குறிப் பிடத்தக்கது.

சிறியன என்று கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமாய் ஆற்றலாய் ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெருமை உணர்த்தப்படுதல் நினைவுக்குரியது.

*

மரணம் எந்த இடத்தில், எப்போது வரும் என்று எவராலும் அறிந்து கொள்ள இயலாது. அது எந்த விநாடியிலும் வரும். ஆதலால் நல்ல அறங்களைச் செய்து தவம் தியானம் புரிந்து, செல்கதிக்கு வழி தேடவேண்டும்.

— வாரியார்

# இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையாரின் அருட்பொலிவும் மகத்துவமும்

ம. பொ. செல்வரத்தினம், J. P. அவர்கள்
(தொல்பொருள் ஆய்வாளர், யாழ்ப்பாணம்)

## ஆதித் தமிழர் பண்பாடு

வானளாவிய கூட கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களைக் கட்டியெழுப்பிப் புகழ்பூண்டவர்கள் ஆதித் தமிழ் மன்னர்கள். கோயில்களை விஞ்சிய அரச மாளிகைகள் எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. சோழ மன்னர்களின் அழியாப் புகழுக்குத் தஞ்சைப் பெருங் கோவிலும், பாண்டிய மன்னர்களின் பெருமைக்கு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலும் கட்டியம் கூறுகின்றன. இதேபோன்று புகழ்மிக்க சுந்தரமாற பாண்டியனது மாளிகைகள் எதுவுங் காணப்படவில்லை. எனினும் அவனது புகழுக்கு கோயில் பெருமையில் காட்சி பகர்கின்றது. இதனைக் ''கண்ணுற்ற அருணகிரிநாதர்

''துங்க கஜராணி யத்தி லுத்தம
சம்பு தடாக மடுத்த தட்சிண
சுந்தரமாறன்மதிற்புறத்துறைபெருமானே''

என்று திருப்புகழில் பாடியுள்ளார். காஞ்சியில் சிறப்புக் களஞ்சியமாக விளங்கும் கைலாசநாதர் ஆலயம் பல்லவ மன்னர்களின் அரிய சிருஷ்டியாகும். இவையனைத்தும் கலைக் கருவூலங்களாகவும், சமயப் பொக்கிசங்களாகவும் போற்றிக் காப்பாற்றப்படுகின்றன. இம் மன்னர்கள் நினைத்திருந்தால் அரச மாளிகையைக் கட்டியிருக்கலாம். எனினும் அரசமாளிகைகளிலும் பார்க்க கடவுளருக்குக் கூடகோபுரங்களைக்கொண்ட கோயில்களைக் கட்டியெழுப்பிக் கடவுள் பக்தியைப் பரப்புவதுதான் சிறந்ததெனக் கொண்டார்கள். இக்கலைப் பண்பாட்டின் அடிப்படையில் வந்த தமிழ் மக்கள் அரசபரம்பரையோடு தொடர்புபட்ட பரராசசேகரப்பிள்ளையார் கோயிலைப் புதுப்பித்து மகாகும்பாபிஷேகம் செய்விப்பது பெருமைக்குரியது. வானளாவிய கோபுரங்களைக் கொண்ட பெருங் கோயிலைக் கட்டுவித்ததோடு செம்பிலும், கருங்கல்லிலும் திருவுருவங்களையும் சிற்பங்களையும் தாபித்தும் திருப்திகாணாத அபரிமிதமான பக்திகொண்ட ராஜ ராஜ மாமன்னன் பொன்னிலும், வைரத்திலும் மலர்களைத் தயாரித்து சிவன் பாதத்தில் மலர்போலிட்டு வணங்கித் துதித்து சிவபாதசேகரன் என்னும் பெயர் பெற்றான். இந்தப் பெரிய தத்துவத்தை உணர்ந்த பரராசசேகரப் பிள்ளையாரது பக்தகோடிகள் தங்கள் மனநிறைவைப் பூர்த்திசெய்யத் தங்கள் ஆசைக்கும் மேலாக இப்புண்ணிய சேத்திரத்தை அணிபெறச் செய்துள்ளார்கள்.

## கோயில் பூர்வீகம்

ஒரு காலத்தில் உன்னதநிலையிலிருந்த புண்ணியப் பிரதேசங்கள் சிதைவுற்றும் நிலைகுலைந்த போதும், மீண்டும் இன்னொரு காலத்தில் அதேநிலையில் அல்லது விஞ்சி நிற்கும் தானத்தை அடைதல் கால நியதியாக உள்ளது. இதற்கேற்ப அக்காலத்தில் போர்த்துக்கேயரால் தகர்க்கப்பட்ட பாரிய ஆலயங்கள் மீண்டும் முன்னின்ற நிலையை அடைந்திருந்ததை இன்றுங் காணலாம். ஈழத்தில் உடுவில் கோவில்பற்றை முற்றுகையிட்ட போர்த்துக்கேயர் இணுவில் என்னும் பூர்வீக கிராமத்து பரராசசேகரப்பிள்ளையார் கோயிலையும் நிலைகுலையச் செய்துள்ளார்கள். அரச பரம்பரையில் பராமரிக்கப்பட்ட இக்கோயிலைப் பாதுகாக்க எண்ணி இத்தலத்தை மடமென்று வாதாடி ஒரள வுக்குப் பாதுகாத்தனர் என்று கர்ணபரம்பரை கூறும். வாயில் பக்கத்தில் மடம் அமைந்திருந்தமையின் இக்கோயிலை மடத்து வாசல் பிள்ளையார் கோயில் என்று தொடர்ந்து வழங்கலாயினர். ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு'' என்ற முதுமொழிக்கேற்ப எதனை ஆராயும்போதும், அதன் தோற்றத்தை காலவரையறை செய்து அறிய முற்படுவது இயல்பு. எனினும் சில விஷயங்கள் வரலாற்றுக்கு அப்பாற்பட்டதாய்

மறை பொருளாய் விஞ்ஞானத்தாலும் அதன் அரிய தொடக்கத்தை அறியமுடியாததாயிருக்கிறது. பூர்வீககாலத்தில் மானசீகமாய்ப் பின்னர் மந்திர தந்திரங்களில் குறிப் பொருள்களினுலும் உணர்த்தப்பட்ட விநாயக வழிபாடு தமிழகத்தில் பல்லவர் காலத்தில் (கி. பி. 630–668) மறுமலர்ச்சி பெற்றுள்ளது.

எந்தெந்த வழிபாடு தமிழகத்தில் முதன்மை பெற்றதோ அதே வழிபாட்டின் மறுமலர்ச்சியை ஈழத்திலும் மிக முக்கியமாக யாழ்ப்பாணத்தில் அதன் பூர்வீக வரலாறு காட்டுகிறது. சமயகுரவர் காலத்தில் மிக முக்கியமாக 7ஆம் நூற்றுண்டு திருஞான சம்பந்தர் காலத்தில் விநாயகர் வழிபாடு மலரும் காலமாக இருந்தது. சோழ குலோத்துங்கனது (1109–1118) தளபதியாகிய கருணுகரத் தொண்டமான் இணுவிலில் வைகும்நாளில் வழிபாட்டுக்காகக் கருணுகரப் பிள்ளையார் கோயிலைக் கட்டுவித்தான் என்று யாழ்ப்பாண வரலாறு கூறும். இன்று இக்கோயில் உரும்பிராய் கிராம எல்லைக்குள் இருக்கிறது. இச்சம்பவத்தை உற்று நோக்குமிடத்தும், சுற்றுடலையும், அயல் கிராமங்களையும் பார்க்குமிடத்தும் பிள்ளையார் வழிபாடு பரந்திருந்தது புலனுகின்றது. தொடர்ந்த காலத்தில் அதாவது கி. பி. 1475இல் சிங்கைப் பரராசசேகரன் அரசனுனபோது நல்லூர் ராசதானி சிறப்புற அமைக்கப்பட்டது. நல்லூர் நகர் நாற்றிசையிலும் நான்கு கோயில்கள் கட்டப்பட்டன. கிழக்கே வெயிலுகந்தப் பிள்ளையார் கோயிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும், வடக்கே சட்டநாதர் கோயிலும், தெற்கே கைலாசநாதர் கோவிலும் தாபிக்கப்பட்டு திருக்குளமும் வெட்டுவிக்கப்பட்டு, யமுனு நதியிலிருந்து தீர்த்தம் எடுப்பிக்கப்பட்டு இக்குளத்தில் ஊற்றுவிக்கப்பட்டு யமுனுரி என்று பெயரிட்டுப் புகழ் கொண்டான். இம் மன்னனின் காலத்தில் அரசகேசரி என்பான் இரகுவம்சம் என்னும் வடமொழிக்காவியத்தை தமிழில் இயற்றினுன். இவன்தான் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயிலையும் கட்டுவித்தான் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறும்.

இவை பரராசசேகரன் காலத்துச் சம்பவங்களாகும். இவையனைத்தையும் நோக்குமிடத்து அக்காலத்தில் நீடித்து நிலைத்திருந்த பிள்ளையார் கோவில் பரராசசேகரன் சகாப்தத்தில் அரசனது செல்வாக்கையும் ஆதரவையும் பெற்று அரசனது நாமம் சூட்டப்பட்டிருக்கலாம் என்று கூறி அமைவதில் தவறில்லை. முற்கால சமுதாய அமைப்பில் ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் இருந்தாற்போல, கோயில் சேவைக்கென அழைக்கப்பட்டோர்கள், குழுக்களாக அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குறிச்சிகளில் வாழ்ந்து கோயில் சேவைபுரிந்து வந்தார்கள். இக் குழுக்களின் பரம்பரையில் வந்தவர்கள் இன்று அவ்வத்துறையில் சமர்த்தராக விளங்குகிருர்கள்.

பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானது திருவுருவம் தமிழகத்துச் சிற்ப விற்பன்னர்களால் அமைக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டதென்று கூறுவர். அருட்பொலிவோடு அமைந்த திருமுகத்தைக் கொண்ட இத்திருவுருவம் அருள்பாலித்து நிற்கிறது. அக்காலந்தொட்டு, கர்ப்பக்கிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியை பக்தியென்னும் உரனும் நீரும் ஊற்றி வழிபாடியற்றிவந்தார்கள். இம் மக்களின் அபரிமிதமான பக்தியில் கட்டுண்ட விநாயகப் பெருமானும் அருள்பாலிக்கலாயினர்.

## விநாயகப்பெருமான் அருள்விளையாடல்

விடியற் காலையில் எழுந்து விநாயகப் பெருமானைத் தொழுது சென்ற அடியார்களும், வணிகர்களும், இளைஞர்களும் பெருநிதியைத் தேடிக்கொண்டார்கள். பெருநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நோய் நீங்கி தேகாரோக்கியம் பெற்றனர். இப்படிக் கை தூக்கிவிடப்பட்டவர்கள் சும்மா இருக்கவில்லை. தாங்கள் பெற்ற பெரும்பேற்றுக்காக நன்றிக் கடனுகச் சகலவகைகளிலும் எம்பெருமான் சந்நிதியைப் பெருப்பித்து அலங்கரித்துக்கொண்டார்கள். அருட்பிரவாகமாக விளங்கும் கர்ப்பக்கிருகத்தை மாசுபடுத்தா வண்ணம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. தற்போது இக்கோயில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு 6–2–84இல் மகா கும்பாபிஷேக விழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அந்நாளில் எல்லோரும் பங்குபற்றி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவோமாக.

# இணுவில், ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோவில்
# விநாயக வணக்கம்

பண்டிதர், வித்துவான் இ. திருநாவுக்கரசு அவர்கள்

### வெண்பா

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

### விருத்தம்

ஓங்குமொரு மருப்பானை உயிர்க்குயிராய் இருப்பானை உரக வேந்தன்
தாங்குமொரு மருப்பானை முகத்தானை வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்தந் தளித்தானைப் பசும்பொற் கோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவில்ஐந்து கரத்தானைப் போற்றி வாழ்வாம்.

### குறட்பா

அத்தி முகவனை நித்தம் நினைபவர்
சித்தம் மகிழ்வொடு முத்தி பெறுவரே.

### வணக்கம்

இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்குமுன் யாழ்ப்பாண அரசு நிகழ்ந்த காலத்தில் நல்லூரில் இருந்து அரசாண்ட பரராசசேகரமன்னனால் புதுக்கிக் கட்டப்பெற்ற காரணத்தால் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் எனக் காரண நாமம் கொண்ட மடத்துவாசற் பிள்ளையார் சரித்திரப் பிரசித்திபெற்ற பாடல்பெற்ற புராதன விநாயகர் திருத்தலமாகும். இக்கருத்தினைப் பின்வரும் பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

'மங்கலம் பொலிவால சிங்கபுர வலனிடையில் வைத'கவி வீரராக
வன்னியாழ் பாடியே வாங்கிஅர சாண்டநன் வளநாட தற்குவேந்தன்
பொங்குகங் காதரன் புவனேக வாகுவாம் பூசுரர்க ளோடுவந்த
புண்ணியன் பொன்னிநா டெண்ணுமதி பதியாய புங்கவர் வணங்குதிலகன்
சிங்கைஆ ரியச்சக் கரவர்த்தி தன்மரபில் ஏகாதசச் சிரமுறையினான்
திங்கள்நிகர் கவிகையான் துங்கமிகு பரராச சேகரத் திகிரிவேந்தன்
பொங்கும்அருள் தங்கவே பூசித்த நாயகா புவிபுகழும் மடவாசலில்
புகர்முகக் கடவுள்நின் மிகுகருணை அடியனேன் புந்தியில் தங்கஅருளே.

நல்லூரில் அரசாண்டு இணுவிலில் வாழ்வுதந்த குறித்த பரராசசேகர மன்னன் சிங்கைஆரியச் சக்கரவர்த்திகள் மரபின் பதினோராவது தலைமுறையைச் சேர்ந்தவன். இக்கோவிலை வழிபட்டு அவன் பெற்ற ஆக்கங்களை வழிபடும் அடியவர்களாகிய நாமும் பெறுதல் வேண்டும். குறித்த விநாயகர் சர்வசித்தியும் சகல புத்தியும் அஷ்டலட்சுமியும், மகாவல்லி கஜாவல்லி சமேத சிவசண்முக பரமேஸ்வரமும், சந்தான கோபாலர் பணியும், உபயபதமும், காசிசிவலிங்க நடராச சிவகாமியம்மை சகிதமுமாக விளங்குகின்றார் ஆதலினால் வழிபடும் மெய்யடியார்க்குப் பின்வரும் சித்திகளும் சகல புத்திகளும் வாழ்வின் பேறாக முத்தியும் சித்திக்கும் என்பது சாஸ்திரோக்தமான மந்திரம். ஆகவே இப்பெருமானை அல்லும் பகலும் அநவரதமும் துதித்து அன்புடை அடியார்கள் இஷ்டசித்திகளும் பெறக்கடவர். இவ்விநாயகரை வழிபடுவோர் பின்வரும் உபாசனமந்திரப் பாடலைப் பாடி உய்தி பெறுவாராக.

சகலதன தானியம் சகலசம் பத்துநற் சந்தோஷ மும்சுரபியும்
சத்துருசங் காரமும் புத்திரர் இலாபமும சர்வவசீ கரவிடயமும்
புகலரிய வித்தையும் சித்தியும் புத்தியும் பொற்புறு சரீரசுகமும்
போதநிறை ஆயுளும கல்வியும செல்வமும எப்பொழுது மேதந்து அருளுவாய்
பகலவர் அநந்தகோடி எனஇலகு திருமேனி பளபளென் றொளியைவீசப்
பைம்பொன்அங் கதம்மத்த கடசமும வெயிலெழப் பாரஅரை ஞாண்அசையவே
அகிலமுறு கயிலைவரை கனகப் பெருங்கோவில் அழகுகோ புரவாசலில்
அணிசெஞ் சதங்கைஒலி கலகலென நடனமிடும் ஐங்கரப் பிள்ளையாரே.

### வணக்கம்

# விநாயகர் பெருமை பாடிப் பரவுதும்

தொகுப்பு: த. வேலாயுதபிள்ளை அவர்கள்

1. அத்தி முகவனை நித்தம் நினைபவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவரே.

### கச்சியப்ப சுவாமிகள் — விநாயகர் புராணம்

2. அகரமென வறிவாகி யுலக மெங்கு
மகர்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ளுன்கிளையு மிடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

### அருணந்தி சிவாச்சாரியார் — சிவஞானசித்தியார்

3. ஒருகோட்ட னிருசெவியன் மும் மதத்த
னல்வாயைங் கரத்த னறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றுள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

### சேக்கிழார் — பெரிய புராணம்

4. சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும்பொருளைச் சிவனூர் தந்த
பேர்பூத்த நிருமலசின் மயவடிவை
யானந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்.

### புகழேந்தியார் — நளவெண்பா

5. நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையா — ஈசன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்.

திருச்சிற்றம்பலம்

# பாகாய் உன் மனம் உருக...
# பா ஒன்று நான் இசைப்பேன்!

திருமதி சுசிலா தருமலிங்கம்

பாகாய்உன் மனம்உருகப்
பாஒன்று நான்இசைப்பேன் ...
ஏகாந்த நாயகனே ...
என் இணுவை விநாயகனே!...

— (பாகாய் ...)

ஓயாமல் வருத்துதையா...
ஒருகோடி துன்பங்கள்...
தாயாகித் துயர்துடைக்க ...
தாராய் உன் திருக்கரமே!...

— (பாகாய் ...)

அஞ்சேல் அஞ்சேலென்று
அபயம் அளிப்பவனே!...
நெஞ்சார நான் துதிப்பேன்
நினைவெல்லாம் நீ இருப்பாய் ...

— (பாகாய் ..)

மாயாப் பிறவி யென்ற ...
மயக்கந் தனையறுத்தே ...
நாயேனை யடிமை கொள்வாய் ...
நாளும்உன் தாள் பணிவேன் ...

ஓங்கார ரூபனே வா
ஒப்பிலா மணியே வா வா ...
'ஓம்' எனும் மணியின் ஒலியில்
ஒளிந்திடும் குருவே வா வா ...

வாவென்று அழைத்த போதும்
வாரா திருப்ப தேனோ
ஆவி துடிக்குதையா
அரனே நீ ஓடி வா வா ...

— (பாகாய் உன் ...)

# விநாயகர் துணை

திருமதி சின்னராசா, ஆசிரியை
(சைவப்பிரகாச மகாவித்தியாலயம், இணுவில்)

பார்புகழும் இணுவைநகர் கோயில் கொண்ட
பரராச சேகரவி நாய கன்தாள்
சீர்புகழும் அடியர்உளம் இன்பம் நல்கி
தித்திக்கும் பெருமையது நிறைந்த சோலை
கார்தவழ மயில்அகவ களிவண் டார்ப்ப
கருதுமறை வேதியர்கள் வேதம் ஓங்க
ஆர்வமுறு மடியவர்கள் அஞ்சே லென்று
அடியர்உளத் தன்புருவாய் நித்தம் காப்பாய்.

கலையழகு பொலிந்தோங்கப் புதுமை கொண்ட
கவினுரும் மண்டபமும் ஆக்க வென்றே
நிலைவிளங்கத் தொண்டர்கள் பலரும் கூடி
நிறைமனத்தோ டிளைஞர்துணை பெரிதும் கூட்டி
மலைநிகரும் சிகரமெழில் மாண்பு மிக்க
மணியொடுபொன் குயிற்றியநற் சிற்ப மோங்க
தலைசிறந்த ராஜகோ புரம் புதுக்கி
நிலவுகதிர் தவழமுடி நிரைத்து வைத்தார்.

காசிவரு சிவலிங்க மூர்த்தி தன்னை
கருதும்ஐம்பொன் ஆவுடையார் பீடம் சேர்த்து
தேசிபொலி நடராஜ மூர்த்தி யோடு
சிவகாமி அன்னைதனை சேர்த்துத் தொன்மை
ஆசிரியர் அருள்ஒழுக அன்பு கூர
அடியவர்க்கு அருள்சுரக்க அமிர்த ஞான
தேசினிய புதுமைபொலி கோயில் செய்த
செல்வர்புகழ் விநாயகர்நல் அருளில் வாழி.

# "பாரதம் எழுதிய வாரணன்"

## (நாட்டிய நாடகம்)

"இயலிசைவாரிதி", "ஸாஹித்திய சிரோமணி", "கவிமாமணி"

யாழ்ப்பாணம் (இணுவில்)

பிரம்மஸ்ரீ என். வீரமணிஐயர் அவர்கள்

## கதையமைப்பு

ஸோடஸ கணபதி என்னும் பதினாறு உருப்பெற்ற, பெருவேழமுகக் காட்சியளிக்கிறார் கணபதி அரங்கத்தில்.

1. பாலகணபதி
2. தருணகணபதி
3. பக்த கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. த்விஜ கணபதி
7. ஸித்தி கணபதி
8. உச்சிஷ்ட கணபதி
9. விக்ன கணபதி
10. க்ஷிப்ர கணபதி
11. ஹேரம்ப கணபதி
12. லக்ஷ்மி கணபதி
13. மஹா கணபதி
14. விஜய கணபதி
15. நிருத்த கணபதி
16. ஊர்த்துவ கணபதி

ஆகிய மூர்த்தங்கள் கொண்டு அந்தப் பதினாறு திருவுருவங்களையும் பராசரமகரிஷியின் புத்திரரான வியாஸபகவானுக்குத் தரிசனம் கொடுக்கிறார் விநாயகப் பெருமான். அவரது கிருபாகடாக்ஷத்தால் "மஹாபாரதம்" என்னும் இதிஹாசம் செய்யுளாக உருவெடுக்கிறது. வியாஸ மகரிஷி தான் யாத்த பாரதத்தை எழுதித்தரப் பூலோகத்தில் யாரும் இல்லையே என ஏங்கி விநாயகப்பெருமானை அனுக்ரஹம் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறார். விநாயகப் பெருமான் "வியாஸரே! உமது கவிதை ஓட்டம் தடைப்படாமலும், எனது எழுத்தாணி ஒரு நொடிகூடத் தடைப்படாமலும் நீர் கவிதை யாத்தீராயின், நான் உமது லிகிதராக அமைந்து பாரதம் எழுதித் தருவேன்" எனக் கூறுகிறார். வியாஸரும், விநாயகரிட்ட நிபந்தனையை ஏற்று, "மஹாபாரதம்" பாட, வாரணனாகிய விநாயகனும் கொம்பெழுத்தாணியால், மேரு மலையிலே பாரதத்தை எழுதலானார்.

"சுபம்"

## "பாரதம் எழுதிய வாரணன்" (நாட்டிய நாடகம்)

### காட்சி 1

இடம் :- தேவலோகம், பாத்திரங்கள் :- விநாயகர், வியாஸமுனிவர்.

விநாயகன் ஸோடசகணபதியாகத் தோன்றி, வியாஸரிஷிக்குக் காட்சி கொடுக்கிறார்.

### (பிரவேசதரு) ராகமாலிகை

**ராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி**

விநாயகர்

**பல்லவி**

பெருவேழ மாமுகன் பதினாறு உருப்பெற்று
அருளிய அரங்கில் வந்தேன் — கணபதிநான்

**அனுபல்லவி**

கருவான ஓங்கார உருவான பிரணவன்
பெரும்பா ரதம்எழுத அரும்வியா ஸர்க்கருள

**சரணம்**

1. பால கணபதி பல கனுதிபன் மாபலா வாழை கரும்பு விரும்புவேன்
சீலச் செம்மேனித் தருண கணபதி செந்நெல் அப்பமும் கபித்தம் விரும்புவேன்
கோலச் சசிவர்ண பக்த கணபதி கொம்பொடித் தருட் கோலம் விரும்புவேன்
கோபங் கொண்டு செழும் வீரக்கணபதி கூர்வேல் அங்குசம் பாசம் விரும்புவேன்

**(ஜதி)**

தக்கிட தகதிமி திக்கிட தகதிமி தகஜொணு தகதிமி ததிங்கிணதொம்
தக்கிட தகதிமி திக்கிட தகதிமி தக்கிட திக்கிட ததிங்கிணதொம்

## ராகம்: அமிர்தவர்ஷணி

2. சக்திக் கணபதி சார்ந்து வல்லபையுடன் பக்தருக் கருள்தனைப் பரிந்திடுவேன்
தித்தித் தருள்தரும் த்விஜகணபதி நான் சுவடி எழுத்தாணி தண்டம் ஏந்துவேன்
சித்தி புத்தியொடு சிவந்த பூக்கரும்பு சித்திக்கணபதி என் கைத்தலம் தாங்குவேன்
வித்தை நல்கிஎன்றும் விக்னம் நீக்கிடுவேன் விக்ன கணபதியாய் விளங்கியருள் செய்வேன்

**(ஜதி)**

## ராகம்: பஹுதாரி

3. உச்சிஷ்ட கணபதி உபாஸனை செய்வோர்க்கு உயர் பதவிகள் நல்கி உவந்தருள்வேனே
க்ஷிப்ர கணபதியாய் ரக்ஷித்து அருள்வேனே சிந்தூர ரத்னகும்பம் துதிக்கையி லேந்துவேனே
மெச்சிடும் ஹேரம்ப கணபதி யாவேனே மேவுசிவன் போலேந்து முகங்கொண் டருள்வேனே
பச்சைக்கிப் பாசமோ டங்குசமும் இச்சையாய் ஏந்துவேனே லக்ஷ்மி கணபதி நான்.

**(ஜதி)**

## ராகம்: காபி

4. மக்கள் தொழ அருளும் மஹாகணபதி யாவேன் மதிமுடிபு னைந்துநான் மோதகம் அவல் உண்பேன்
திக்கெலாம் வெற்றிபெற விஜயகணபதி யாய்த் திகழ மூஷிகத்திலே மூவுலகமும் வருவேன்
நித்தம் நடனமிடும் நிர்த்த கணபதி யாவேன் நெற்கதிர் தாமரையும் தந்தம் துளிர் ஏந்துவேன்
உத்தமப்பொன் வண்ணனுகி ஊர்த்துவ கணபதியாய் உயர்சிகரமுத்தி உவந்துநான் தந்தருள்வேன்

வியாஸ பகவான் விநாயகரைத் தொழுது, தான் பாரதக் கதையை யாத்தபோதிலும் அக் கதையைத் தான் பாடும்போது அதை எழுதி உதவிசெய்ய யாரும் இல்லையே என ஏங்கி, விநாய கரிடம் முறையிடுகிருர்.

***(விருத்தம்)***

## ராகம்: ஆனந்தபைரவி

வியாஸமுனிவர்:

*ஸோடசநற் கணபதியே; செஞ்சரணம் தஞ்சமையா!*
*பாரதத்தின் கதையாத்துப் பதுக்கியுளம் கொண்டிருந்தேன்*
*ஆதரவு இல்லையா! அதைஎவரும் எழுதவல்லார்*
*பூதலத்தில் கதையெழுதும் புதுமைதனை யாரறிவார்?*

(தரு)

**ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி**

**பல்லவி**

**வியாஸர்:**

*கருணைபுரிந்து ஆதரி — கணபதியே*
*திருவருளால் பாரதத் திருக்கதை யான்பாட*

**அனுபல்லவி**

*பெருவேழ மாமுகனே பெம்மானே மாதங்கனே!*
*ஒருவரும் இல்லைஐயா! உவந்தருள் புரியாயோ!*

**சரணம்**

*சார மதாய் வேதம் தழைத்திடும் திவ்ய கதை*
*தாரணி தன்னில் என்றும் தர்மமதைக் காக்கும்கதை*
*பாரதநற் கவிதை பகன்றிடு வேன் யானே!*
*சீரதுவாய் எழுத ஒரொருவர் இல்லைஐயா.*

**மத்யமகாலம்**

*ஆதிநான் மறையின் சாரமாய்த் திகழும் அழகு காவியம் பாடிடுவேன்*
*மேதினி தனிலே மேவும் மாந்தர் வாழ மேலான மார்க்கமதைக் காட்டிடுவேன்*
*பூதநா யகனே பூரணா உந்தன் பொன்னினடி வேண்டி நாடிவந்தேன்*
*பாதமே தருவாய் பாரதம் எழுத பதியேகண – பதியேதுணை – தரவருவாய்*

(ஜதி)

**வியாஸர் மொழிகேட்ட விநாயகர் தானே பாரதத்தை எழுதித் தருவதாக வாக்குறுதி கொடுக்கிறார்.**

**[விருத்தம்]**

**ராகம் :- மத்யமாவதி**

விநாயகர் :-

*"வித்தகக் கவிஞன் நீயே! வியாஸநன் முனியே கேளாய்*
*சித்தெலாம் நிறைந்த அந்தச் சீரிய பார தத்தை*
*மத்தகக் கொம்பை ஏந்தி மந்தர மேருவில் நானே*
*சித்திரமா யெழுதச் சிந்தனைப்பா ரதம் தாராய்".*

**வியாஸர் பாரதக் கதையைச் செய்யுள் வடிவத்தில் கூறுகிறார். விநாயகர் கொம்பினெழுத் தாணியால் மேருமலைமீது வியாஸமுனிவர் கூறிய பாரதத்தை எழுதுகிறார்.**

பாரதக் காப்புச்செய்யுள்

வியாஸர் :-

*"நீடாழி உலகத்து"*

**ராகம்:- நாதநாமக்ரிய**

**(காப்பு)**

**விருத்தம்**

**வியாஸர் :-**

*"நீடாழி உலகத்து மறைநாலொடு ஐந்தென்று நிலைநிற்கவே*
*வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதம் சொன்னநாள்*
*ஏடாக மாமேரு வெற்புஆக வங்கூர் எழுத்தாணிதன்*
*கோடாக எழுதும் பிரானைப் பணிந்துஅன்பு கூர்வாமரோ",*

சுபம்

உ

# அவ்வினைக்கு இவ்வினை

**திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்**

நாம் இப்போது நுகர்கின்ற இன்ப துன்பங்கட்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். அவரவர் செய்த வினை ஊழாகமாறி உருத்து வந்து ஊட்டும்.

நம் உடம்பின் நிழல் நாம் நடந்தால் நம்மைத் தொடர்ந்து வருமாப்போல நாம் செய்த வினையும் நம்முடன் தொடர்ந்து வரும்.

இறைவன் நடுநிலை தவறாதவன். பாரபட்சமில்லாதவன். நாம் செய்த நல்வினைகளுக்கு ஏற்ப சுக துக்கங்களை வகுத்து விதிக்கின்றான். இறைவனுடைய அருளாணையால் விதிக்கப்பட்டது விதியெனப்படும்.

''விதி காணும் உடம்பைவிடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்''

என்பது கந்தரநுபூதி, விதியை வென்றவர் எவரும் இலர். விதி வழி மதி செல்லும்.

''அவ்வினைக்கு இவ்வினை''

முதிர்தவ ராயினும் முனிவ ராயினும்
மதியின ராயினும் மன்ன ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்
— கந்தபுராணம்

நாட்டையும் நகரத்தையும் பொன்னையும் மணியையும் விலையுயர்ந்த உடைகளையும் தூசாக எண்ணித் துறந்து உடுத்த உடையுடன் கானகம் சென்ற குணவதியாகிய சீதாதேவி ஒரு மானை விரும்பினாள், கணவனுக்குக் கட்டளையிடாத அக் கற்புக்கரசி கணவனைப் பார்த்து ''இம்மானைப் பிடித்துக் கொடும்'' என்று ஏவினாள். கண்ணை இமை காத்தது போல் காத்து நின்ற பரம பக்தனாகிய இலட்சுமணனை உள்ளம் வருந்த சூடாக வைது நெடிய வனத்திடை அனுப்பினாள்.

ஒரு போதும் மனைவியின் வார்த்தையைக் கேளாத வீரராகவர் மனைவியின் சொல்லைக் கேட்டுக் கோதண்டமாகிய வில்லைத் தூக்கி மான்பின்னே சென்றார். வில்லையா தூக்கினார்? இல்லை, பழிச்சொல்லைத் தூக்கினார். இவைகட்குக் காரணம் விதிதான்.

''வெஞ்சின விதியினை வெல்ல — வல்லமோ?''

அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தான்
விதிவயம் என்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ.
— கம்பஇராமாயணம்

## விதியின் வலிமையை விளக்க ஒரு சான்று

ஒரு குளக்கரையில் ஓரந்தணர் மான் தோல் மீது அமர்ந்து காயத்திரி மந்திரம் ஜெபம் செய்துகொண்டிருந்தார். ஒரு புலையன் பசுவை வெட்டும் பொருட்டு கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தான். அறிவுள்ள அப்பசு நம்மைக் கொல்லும் பொருட்டே இவன் கத்தியைத் தீட்டுகின்றான் என்று அறிந்து கட்டுத்தறியை அறுத்துக்கொண்டு அந்தக் குளக்கரை வழியே ஓடியது.

அந்தப் புலையன் பசுவைத் தேடிக்கொண்டு வந்தான், அந்த ஜெபம் புரியும் பிராம்மணனைப் பார்த்து ''ஐயரே! பசு இந்த வழியாகச் சென்றதா'' என்று கேட்டான்.

ஜெபம் செய்துகொண்டிருந்த அந்தணர் இருகரங்களையும் நீட்டி பசு ஓடின வழியைக் காட்டினார். அவர் காட்டிய வழியே சென்று புலையன் பசுவைக் கொலைசெய்துவிட்டான்.

வடநாட்டில் தாழ்ந்த குலத்தில் ஸஜ்ஜன சாருகர் என்பவர் பிறந்தார். சாருகர் என்ற குலத்தில் பிறந்த அவர் உயர்ந்த குணங்களை உடையவராக விளங்கினார். அதனால் ஸஜ்ஜன சாருகர் என்று பேர்பெற்றார். அவர் இளமையிலிருந்தே உத்தம குணங்களுக்கு உறைவிடமாக இருந்தார். அடக்கம், பொறுமை, சாந்தம், ஈசுரபக்தி, ஒழுக்கம், பண்பு முதலிய நற்குணங்களை அணிகலமாக அணிந்த அவர் ஆசார சீலராக இருந்தார். அவர் பண்டரி

நாதனை உபாசனை புரிந்து வந்தார். பண்டரிநாதா! பண்டரிநாதா! என்று கூறி அலறுவார். கரதாளம் இட்டு 'விட்டால் விட்டால்' என்று பஜனை செய்வார். இரவு பகலாக எட்டெழுத்தை ஓதி உள்ளம் உருகுவார்; கண்ணீர் பெருகுவார்.

பண்டரீபுரம் பூலோக வைகுந்தம். அந்த க்ஷேத்திரத்தில் சதா தம்பூராவின் நாதம் முழங்கிக்கொண்டிருக்கும். பக்த ஜனங்கள் மத்தளம் ஜால்ரா முதலிய வாத்தியங்களை ஒலித்து ஆடியும் பாடியும் பரவசம் அடைவார்கள். பாண்டுரங்கனைச் சேவிக்க வருகிற பக்தகோடிகளின் கூட்டம் அளவிட முடியாது. பாண்டுரங்கன் பக்தர்களின் வினைகளைக் களைந்து விரும்பிய நலன்களை வழங்கி வரத மூர்த்தியாக விளங்கினார்.

பண்டரீபுரத்துக்கு அருகே சந்திரபாகா என்ற நதி அழகாக ஓடிக்கொண்டிருக்கும். அந்த நதி பன்னிரு ஜோதிலிங்கங்களுள் ஒன்றான பீமாசங்கர் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாவது. அதனால் பீமநதி என்று பேர் பெற்றது. பண்டரீபுரத்துக்கு அருகில் பிறைச் சந்திரனைப் போல் வளைந்து போவதால் சந்திரபாகா என்று பேர் பெற்றது. தூய்மையான நீர் சல சல என்று ஓடிக்கொண்டிருக்கும். நாமதேவர் துர்காராம் சக்கு பாய் கோராகும்பர் ராமதாசர் கபீர்தாசர் பலப்பல பக்தர்கள் வழிபட்டு முத்தியடைந்த திருத்தலம். பல ஞானியர்களின் சமாதிக் கோயில்கள் அங்கே காட்சி தருகின்றன.

ஸஜ்ஜன சாருகருக்கு பண்டரிபுரஞ் சென்றுவிட்டால் நாதனைச் சேவிக்க வேண்டும் என்ற தாகம் மேலிட்டது. 'பண்டரிநாதா! உன்னைச் சேவிக்கும் நாள எந்நாளோ? அருட்கடலே! கருணைத் தெய்வமே! உன்னைக் கண்ட கண்களே கண்கள். உன்னை வணங்கும் பேறு எல்லோருக்குங் கிடைக்குமோ? பல பிறவிகளில் செய்த புண்ணிய பயன் இருந்தால் தானே உன் தெரிசனம் கிடைக்கும்'' என்று கூறிப் புலம்புவார். திசை நோக்கித் தொழுவார், அழுவார்; மூர்ச்சித்து விழுவார். ''நாளை பண்டரிக்குப் புறப்படலாம், நாளைக்கு புறப்படலாம்'' என்று கூறுவார். ஒரு சமயம் துணிந்து பண்டரிபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

அந்தக் காலத்தில் ரயில் பஸ் முதலிய வாகன வசதிகள் கிடையா. சாருகர் பஜனை செய்துகொண்டு நடந்து போகிறார். பகல் முழுவதும் நடப்பார். பொழுதுபோன ஊரில் பிட்சையெடுத்து உண்டு சத்திரங்களில் தங்கி பஜனை செய்வார்.

ஒருநாள் ஒருநகரத்தில் தங்கினார். இரவில் வேறு நல்ல இடம் இன்மையால் ஒரு தனவந்தர்தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து ஜெபம் செய்து கொண்டிருந்தார்.

இரவு ஒரு மணி நகரம் இருள் சூழ்ந்திருந்தது. ஒலியடங்கி இருந்தது. அங்கங்கே நாய்கள் குலைத்துக்கொண்டிருந்தன. அந்த வீட்டுப் பெண் சிறுநீர் கழிக்கக் கதவுதிறந்து கொண்டு வெளியே வந்தாள். சாருகரைக் கண்டாள். அவர்மீது மையல் கொண்டாள். அவரருகில் சென்று'' ''தாங்கள் பூலோக மன்மதனைப்போலக் காட்சி தருகிறீரே. தாங்கள் யார்'' என்று கேட்டாள்.

அம்மா! வணக்கம். நான் யாத்ரீகன். என்பேர் சாருகன்; பண்டரிபுரம் போகின்றேன். ''என் உள்ளத்தைக்கொள்ளைகொண்ட உத்தமரே! தாங்கள் என் இதயராஜா. நான் தங்கள் இதயராணி. இந்த விநாடி முதல் தாங்கள் என் இன்னுயிர்க் கணவர்.

''அம்மா! இந்த உலகம் கடுகளவு. பாவத்தால் வரும் துன்பம் மலையளவு. நான் மனத்தினாலும் மாதரைத் தீண்டாதவன். பிரம்மசாரி. தாங்கள் தங்கள் கணவனுடன் வாழ்வதுதான் கண்ணியம். கற்புநெறியில் நிற்பதுதான் புண்ணியம். அவநெறியில் புக வேண்டாம்.

அவள் வெறி பிடித்தவளைப் போல் ஓடி கொடுவாளை எடுத்து அயர்ந்து தூங்குகின்ற கணவனுடைய தலையை வெட்டித் துணித்தாள்.

என் உயிரினும் இனிய உத்தமரே! ''என் கணவரைக்கொன்றுவிட்டேன். இனி நீர்தான் என்கணவர்'' என்று கூறி அவரைக் கட்டித் தழுவ வந்தாள்.

இந்த கொடுஞ் செயலைக் கண்டு சாருகர் நடுநடுங்கினார், ''ஐயா! கணவனரைக் கொன்ற இவள் ஒரு பெண்ணா? பேயா? பூதமா?'' என்று எண்ணித் திண்ணையை

விட்டுக் குதித்து ஓடினர். அந்தப் பெண் அவரைத் தொடர்ந்தாள். சாருகரைப் பற்ற முடியவில்லை. நான்கு தெரு கூடும் சந்திப்பில் அப்பெண் ஓவென்று கதறி ஓலமிட்டாள். அங்கு உறங்கியிருந்தவர்கள் கூடினர்கள்.

''பெரியோர்களே! இந்தப் பாவி எங்கள் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். நான் சிறுநீர் கழிக்கக் கதவு திறந்து வெளியே வந்தேன், என் கணவரை வெட்டி விட்டு என் கற்பழிக்க என்னை விரட்டுகின்றான்'' என்று கூறிக் கதறியழுதாள்.

ஊரவர் அவரை அடித்து வேதனைப்படுத்தினர்கள். காவல் துறையினர் அவரைச் சிறையில் அடைத்தார்கள். பொழுது விடிந்தபின் அந்த நகரத்தை ஆளும் அரசன் இதனை விசாரித்தான். சாருகர் ''எல்லாம் பாண்டுரங்கன் அறிவான். நான் ஒரு குற்றமும் புரியவில்லை என நடந்ததை உள்ளபடி சொன்னர்.'' குற்றம் புரிந்தவன் ஒப்புக்கொள்வானு? என்று எல்லோரும் கூறினர்கள். சாருகருடைய கரங்களைத் துண்டிக்குமாறு அரசன் ஆணையிட்டான், சாருகருடைய இருகரங்களும் துண்டிக்கப்பட்டன. குற்றஞ்செய்யாத குணப்பெருங்குன்றமான அவர் துடிதுடித்தார்.

''பாண்டுரங்கா! பரமதயாளா! அருட்பெருங்கடலே! ஒழுங்கு நெறியில் நின்ற எனக்கு இத்தண்டனையா? ஐயனே! சர்வ பூத சாட்சியான தேவரீரை நம்பிய எனக்கு இத் துன்பமா?'' என்று கூறி அழுதார்.

பின்னர் எங்குந் தங்காமல் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார். பண்டரிநாதர் கோயில் அர்ச்சகர்கள் அறங்காவலர்கள் ஊரில் உள்ள தக்கார்களின் கனவில் சென்று 'நமது பரம பக்தன் ஸஜ்ஜனசாருகன் வருகிறான். கோயில் மேளம், குடை சுருட்டி பூரண கும்பம் வைத்து உபசரித்து அழைத்து வாருங்கள்'' என்று பணித்தருளினர்.

எல்லோரும் வந்து ஸஜ்ஜன சாருகருக்கு கோயில் பரிவட்டம் கட்டி கனவில் பாண்டுரங்கன் அருளியதைக் கூறி பேரன்பு வரவேற்பு செய்தார்கள்.

சாருகர் இதனைக் கேட்டு அழுதார். பாண்டுரங்கன் திருமுன்நின்றர். கையில்லாமையால் தொழமுடியாமல் கதறினர். ''தேவதேவா! என்னை உன் அடியான் என்று கூறியருள் புரிந்தனையே. அன்று அரசன் என் கரங்களை வெட்டுமாறு ஆணையிட்டானே. அப்போது அசரீரியாக இவன் குற்றமற்றவன்'' என்று ஒரு சொல் கூறி இருக்கக்கூடாதா? அன்று என்னைக் கை நழுவவிட்டீரே! இன்று அருள் புரிகின்றீரே! இது நியாயமா? உன் கருணைக்கு அழகா? இதுமுறையா? இதுதர்மம் தானு? நான் இப்பிறவியில் யாருக்கும் தீங்கு செய்தேனில்லையே? கருணாகரனே! கிருபாநிதியே! உன்னைத் தெரிசித்து உன்னைக் கட்டித் தழுவவோ கைகூப்பி வணங்கவோ இயலாமல் என்மனம் நீராய் உருகி நிற்கிறதே என்று கூறி அழுதார்.

பாண்டுரங்கன் கூறுகின்றர்! ''அன்பனே அழாதே. அவரவர் வினைகளை அவரவர் அநுபவித்தே தீரவேண்டும் ''

குளக்கரையில் ஓரந்தணன் காயத்திரி மந்திர ஜெபம் செய்துகொண்டிருந்தான். பசுவைக் கொல்ல வந்த புலையன், ''பசு எந்த வழியாகச் சென்றது'' என்று கேட்டான். அந்தப் பிராமணன் பசுபோன வழியைத் தன் இருகரங்களையும் நீட்டிக் காட்டினன். புலையன் அவ்வழியே சென்று பூலோக காமதேனுவாகிய பசுவைக் கொன்றுவிட்டான். நீதான் அந்த காயத்திரி ஜெபஞ்செய்த அந்தணன். பசுவின் கொலைக்குக் காரணமாக இருந்த உன் இருகரங்களும் வெட்டப்பட்டன.

கொலையுண்ட பசு அந்தப்பெண்: பசுவைக் கொலைசெய்த புலையன் அவள் கணவன். பசுவாகிய பெண் முற்பிறப்பில் தன்னைக் கொன்றவனைக் கொன்றள். ஆகையால் இவை முன் செய்த தீவினையால் விளைந்தன என்று கூறியருளினர். பண்டரிநாதருடைய திருவாக்குகளைக் கேட்டு அவர் அல்லல் தீர்ந்து ஆறுதலை அடைந்தார். பண்டரிநாதன் கருணையால் கரங்கள் வளர்ந்தன. பண்டரி நாதருடைய இரு பாதமலரினைத் தொட்டுக் கட்டித் தழுவி அருச்சித்து ஆராதனை புரிந்து காலாந்தரத்தில் ஸஜ்ஜனசாருகர் பரமபதம் அடைந்தார்.

''அவ்வினைக்கு இவ்வினை'' என உணர்க.

## விதியின் வலிமையை விளக்க இன்னும் ஓர் சான்று

### பூசாரி

ஒரு காளிகோவில் பூசாரி ஒருவன் பூஜை செய்து கொண்டிருந்தான். மார்கழி மாதம் அதிகாலையில் குளிர்ந்த நீரில் முழுகி காளி தேவிக்குத் தயிர் அன்னம் நிவேதனம் செய்தான். ஒவ்வொரு நாள் ஒவ்வொருவருடைய உபயம். தட்டில் பணம் போடும் பெரியவர்கட்குத் தயிரன்னத்தை விளாம்பழம் அளவு உருட்டித் தருவான். பிள்ளைகள் கையில் தயிரன்னத்தைத் தடவி விடுவான். அப்பிள்ளைகள் வெளியே வந்து பூதக்கண்ணுடி போட்டுப் பார்த்தால்தான் கையில் பிரசாதம் சிறிது இருப்பது தெரியும்.

பூசாரிக்கு ஆகார மாறுபாட்டால் காய்ச்சல் வந்தது. அதற்குத் தகுந்த மருந்துண்பதுதான் முறை. அவன் அறிவில்லாதவன். காளியாயீ! இந்தக் காய்ச்சலில் இருந்து என்னைக் காப்பாற்று. உனக்கு இரு ஆடுகள் புலி தருவேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டான். அவன் மனைவி மிளகு திப்பிலி கஷாயம் செய்து தந்தாள். காய்ச்சல் நின்று விட்டது.

ஆடிமாதம் அம்மனுக்குப் பூசாரி அபிஷேகம் செய்து இரு ஆடுகளைக் கொண்டு வந்து அவைகளுக்கு மஞ்சள் நீர் ஊற்றி நீராட்டினுன். மஞ்சள்நீர் பட்டதும் இரு ஆடுகளும் தலையை உதறின. உடனே பூசாரி அம்மன் உத்தரவாகிவிட்டது, அதற்கு அடையாளம் ஆடுகள் தலையை ஆட்டி விட்டன. என்று சொல்லி இரு ஆடுகளையும் வெட்டிவிட்டான். தண்ணீர்பட்டால் உதறுவது இயற்கைதானே. அதற்காக ஆட்டை வெட்டலாமா?

அந்த நகரை ஆட்சி புரிகின்ற மன்னவனுக்கு ஒருமகனும் மந்திரிக்கு ஒருமகனும் பிறந்தார்கள். மன்னவன் மகனும் மந்திரி மகனும் கலைகளில் வல்லவர்களாக ஆனுர்கள். மன்னன் மகனுக்கு முடிசூட்டு விழா நடை பெற்றது.

மன்னன் மகனுக்கு மகுடாபிஷேகம் செய்த 12 ஆண்டுகளாக மழையில்லை. மக்கள் உண்ணீரும் தண்ணீரும் இன்றித் தவித்தார்கள். ஒருநாள் மன்னவர் மகனும் மந்திரிமகனும் இரவு 10 மணிக்கு அந்தக் காளி கோயிலுக்கு காளிதேவியிடம் இக் குறையைச் சொல்லி வழிபாடு செய்யச் சென்றுர்கள். நம்மைத் தண்டிக்க வருகின்றுர்களோ? என்று அஞ்சிய பூசாரி காளிதேவிக்குப் பின்புறம் ஒளிந்து கொண்டான்.

மன்னவன் மகன் அம்பிகையை அஞ்சலி செய்து தேவி! கருணம்பிகை! அகிலாண்ட நாயகி! எனக்கு முடிசூட்டியபின் 12 ஆண்டுகளாக மழையில்லை. நீரின்றி சீரின்றி மக்கள் தவிக்கின்றுர்களே! அம்மையே! மழை பொழியச் செய்வாய் என்று உள்ளம் உருகி வேண்டினுன்.

காளிதேவி ''மன்னன் மகனே! என் சந்நதியில் ஒரு நரபலி தந்தால் மழை பொழியும்'' என்று அசரீரியாகக் கூறினுள்.

மன்னன் மந்திரியைப் பார்த்து 'தோழனே! மக்களுக்கு நான் தந்தை. மக்கள் பொருட்டு என் உயிரைத் தியாகம் புரியவேண்டும். என்னைப் பலியிடு. நீ பதவியேற்று அரசுசெய்'' என்றுன். மந்திரி, அரசே!

'' உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கண்
இடுக்கண் களைவதாம் நட்பு. ''

தங்களின் நண்பனுகிய நான் தங்களைப் பலியிடுவதா. வேண்டா. என்னைப் பலியிடுங்கள். மந்திரிபதவிக்குப் பலர் ஆலாப் பறக்கின்றுர்கள். யாரையாவது அமைச்சராக அமைத்து அரசு புரியுங்கள்'' என்றுன்.

''என்னைப் பலியிடு!'', ''என்னைப் பலியிடு'' என்று இருவரும் வாதிட்டனர்.

அரசன் ''அன்பனே! உனக்கும் எனக்கும் வாக்கு வாதம் வேண்டாம்; அம்பிகையைக் கேட்போம். அம்பிகை யாரைக் கேட்கின்றுளோ? அவ்வாறே செய்வோம்'' என்று கூறினுன்.

''தேவி! உன் சந்நிதியில் அடியேன் பலியாக வேண்டுமா? அல்லது என் அமைச்சர் பலியாக வேண்டுமா?'' என்று வினவினுன்.

தேவி, ''மன்னவனே! நீயும் பலியாக வேண்டாம். மந்திரியும் பலியாக வேண்டாம், என் பின்னே ஒளிந்திருக்கின்ற பூசாரிதான்

பலியாக வேண்டும். அதுவும் நீயும் மந்திரியும் ஏககாலத்தில் பூசாரியை என் சந்நிதி முன்னே நிறுத்தி அவனுக்கு முன்னும் பின்னுமாக நின்று ஒரே நேரத்தில் இருவர் வாளும் பூசாரியின் தலையை வெட்டித் தள்ள வேண்டும்'' என்றாள்.

பூசாரி இதைக்கேட்டு நடுநடுங்கினான். வெளியே வந்தான். அவனுடைய கண்கள் சிவந்தன. மீசை படபடத்தது. புருவம் நெளிந்தது. ''காளியாயீ! நீ ஒரு தெய்வமா? உனக்கு 55 ஆண்டுகளாகப் பூசை செய்தேனே! என்னையா பலியிடச் சொல்லுகின்றாய்? உனக்குக் கருணையில்லையா? எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதங்கட்கும் நீ தாயல்லவா? நான் உனக்குச் சேய் அல்லவா? கொடியவளே! உனக்கு இரக்கம் இல்லையா? பலகாலம் தொண்டு செய்த என்னையே பலிவாங்க முற்பட்டனையா? உன்மனம் இரும்பா கல்லா? இரக்கமில்லாத அரக்கியே! நீ ஒரு தெய்வமா? என்று கூறி வசைமாரி பொழிந்தான்.

காளிதேவி ''பூசாரி! பதட்டம் அடையாதே. தானத்தில் நிதானம் பெரியது. தயிரன்னம் உண்டு உனக்குக் காய்ச்சல் வந்தால் கோனாரின் வீட்டில் வாழும் ஆடுகள் என்ன பாவம் செய்தன? எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்கட்கும் நான் தாய் என்று இன்றுதான் உணர்ந்தனையா? நீ பல ஆண்டுகளுக்கு முன் வெட்டிய ஆடுகட்கும் நான் தாயல்லவா? வாயில்லாத குற்றமற்ற ஆடுகளைக் கதறக்கதற அன்று நீ பலியிட்டனையே. நீ பலியிட்ட அந்த இரு ஆடுகளும் உன்னை பலிவாங்க மன்னவன் மகனாகவும் மந்திரி மகனாகவும் பிறந்து வந்திருக்கின்றனர். 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்' என்பது மூதுரை.

'' அவ்வினைக்கு இவ்வினை '' என்றாள்.

பூசாரி குனிந்து நின்றான். மன்னவன் வாளும் மந்திரியின் வாளும் பூசாரியின் தலையை ஏககாலத்தில் சேதித்தன. அம்பிகை அரசன் முன் காட்சி தந்தாள். '' மன்னனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் '' என்று கூறி அருள் புரிந்தாள்.

மன்னன் ''தாயே, இந்தப் பூசாரி குற்றத்தை உணர்ந்து கொண்டான். ஒப்புக் கொண்டான். மன்னிப்பது உன் இயல்பு. தேவி இவனை மன்னித்து இவனை எழுப்பிக் கொடு. பின்னர் மழை பெய்து மக்கள் சுகமடையச் செய்வாயாக'' என்றான்.

அம்பிகை அருள்புரிந்தாள். பூசாரி எழுந்தான். அதுமுதல் ஆலயத்தில் பலியிடும் கொடுமையை யகற்றினான். நன்கு மழை பொழிந்தது. நாடு தழைத்தது. ஆதலால் செய்தவினை செய்தவனை வந்தடையும்.

'' அவ்வினைக்கு இவ்வினை '' எனவுணர்க. யாருக்கும் எப்போதும் இடர் புரியாது நலமே புரிந்து இறையருள் பெறுக.

❋

கடவுகின்றவன் கடவுள்; (கடவுதல் — செலுத்துதல்) உடம்பை உயிர் செலுத்துகின்றது. உயிரைக் கடவுள் செலுத்துகின்றார்.

* * * *

இறைவன் அறிவு வடிவானவர். அறிவே வடிவாய ஆண்டவனை அறிவு ஒன்றினாலேயே அறிதல் வேண்டும். ஆனால் நூலறிவு அன்று; அனுபவத்தால் உண்டான (வாலறிவு) மெய்யுணர்வு.

* * * *

வாழை நாரால் மலர் தொடுக்கலாம். மதயானையைக் கட்ட முடியாது. ஏணி வைத்து மாடி மீது ஏறலாம். ஆனால் இமயத்தின் உச்சியாகிய எவரெஸ்டுக்கு ஏறமுடியாது. படியினால் நெய்யை அளக்கலாம், கடல் நீரை அளக்க முடியாது. அதுபோல நூலறிவினால் பிறபொருள்களை அறியலாம். இறைவனை அறிய முடியாது.

— வாரியார்

# வாரியார் சுவாமிகளின் வாய்மொழிகள் சில......

தெகுப்பு; திரு. செ. பாலசுப்பிரமணியம்

● பாலில் கரைந்த சர்க்கரையும், அப்பில் கரைந்த உப்பும் கண்ணுக்குத் தெரியாது. ஒருவனிடமுள்ள அன்பு, அறிவு இவைகளும் தெரியமாட்டா. இவை செயல்படும்போது மட்டும் உணர முடியும். இதுபோல் கடவுள் மெய்யுணர்வுக்கு மட்டும் புலனுவார்.

● மனிதனுக்குத் துன்பங்கள் அத்தனைக்கும் மூலகாரணம் ஆசை ஒன்றுதான். ஆசையை விட்டவனே இன்பத்தை அடைவான். ஆசையை விடாதவன் துன்பத்தில் துடித்துத் துயரமடைந்து மாள்வான்.

● மலேரியா ஜுரம் வந்தவனுக்கு கற்கண்டு கசக்கும். அதுபோல் பந்த பாசங்களில் உழல்பவனுக்கு கடவுள் பக்தி கசக்கும்.

● கடவுள் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆகவே கடவுள் இல்லை என்ருல், உயிர் கண்ணுக் குத் தெரியவில்லை. ஆகவே உடலில் உயிர் இல்லை என்பதா?

● உயிர் இருப்பதால்தான் உடம்பு அசைகிறது என்று உணர்வதுபோல கடவுள் இருப் பதால்தான் உலகம் இயங்குகிறது என்று நம்புதல் வேண்டும். கடவுளைக் காட்டு என்ருல் உடம்புக்குள் இருக்கும் உயிரைக் காட்டு என்று கேளுங்கள்.

● அரிசியின் ரூபம் தெரியவொட்டாமல் உமி மூடி இருக்கின்றது. உமியை நீக்கினுல் அரிசியைப் பார்க்கலாம். அதுபோல கடவுள் சொரூபத்தைக் காணவொட்டாமல் ஆசா பாசம் மூடியிருக்கின்றது. ஆசாபாசத்தை நீக்கினுல் கடவுளைக் காணலாம்.

● எலக்ட்ரிக் கரண்ட் எங்கும் நிறைந்திருக்கின்றது. ஆனுல் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோல கடவுள் எங்கும் நிறைந்திருக்கிருர். ஆனுல் கண்ணுக்குத் தெரிவதில்லை.

● கடவுள் தன்னை நினையாதவர் உள்ளத்தில் பாலில் நெய்போல் மறைந்து இருக்கிருர், நினைப்பவர் உள்ளத்தில் தயிரில் வெண்ணெய்போல் வெளிப்பட்டு இருக்கிருர். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவர்.

● குளிக்காவிட்டால் கஷ்டம் நமக்குத்தான். தண்ணீருக்கல்ல. அதுபோல கடவுளை நினைக்காவிட்டால் நஷ்டம் நமக்குத்தான். கடவுளுக்கல்ல.

● கடவுள் இல்லை என்பவனுக்கு எல்லாம் இல்லாமலேயே போய்விடும். கடவுள் உண்டு என்பவனுக்கு எல்லாம் உண்டாகும்.

● புகை பிடிப்பதற்கும், ஒழுங்கீனமான பேச்சுக்கள் பேசவும் வெட்கப்பட வேண்டுமே தவிர, விபூதி பூசவும் தெய்வ வழிபாடு செய்யவுமா வெட்கப்படுவது?

● மனைவியைத் திருப்திப்பண்ண வேண்டுமானுல் அவள் சுற்றத்தார்க்கு உபசாரம் செய்ய வேண்டும். அதுபோல கடவுளைத் திருப்திப்படுத்த வேண்டுமானுல் அவன் அடி யார்களுக்கு உபசாரம் செய்ய வேண்டும்.

● தன் வாழ்வில் முப்பது லட்சம் சம்பாதித்தாலும் அவன் இறந்த பிறகு மூன்று ரூபாய்க் கடுக்கனேடுகூடப் புதைக்கமாட்டார்கள். செய்த தருமந்தான் கூடவரும்.

● செல்வம் இருக்கிறது என்று திமிராகப் பேசாதே. உன் செல்வம் அழிவதற்குத் தலைவலி ஒன்றே போதும்.

● சிறிது நேரம் எரிந்தாலும் சவுக்குமரம் கொழுந்து விட்டெரியும். மூன்று நாள் எரிந் தாலும் உமிக்கரி புகைந்துகொண்டேயிருக்கும். அதுபோல சிறிது வாழ்ந்தாலும் புகழோடு வாழ வேண்டும்.

● எந்தக் காரியம் செய்தாலும் தனக்கென்று செய்வது நல்லதல்ல: பிறர்க்கென்று செய்.

● செல்வம் இருந்தால் மட்டும் போதாது. அதை அனுபவிக்கப் புண்ணியம் வேண்டும். சர்க்கரை வியாதி இருந்தால் செல்வம் இருந்து என்ன பயன்? ஆகவே ஆபத்து, நோய், துன்பம் இவற்றிலிருந்து தப்ப தருமம் செய்.

● உறவினர் எல்லோரும் சூழ்ந்திருந்தாலும் கைவிடக்கூடிய காலம் ஒன்று வரும். அது சமயம் உனக்குத் துணை நீ செய்த தருமமும் தவமும்தான்.

■ சுகமாக வாழும்போதே துக்கத்தையும் பழகிக்கொள். ஏனென்றால் வாழ்வும், தாழ்வும் மனிதனுக்கு மாறி மாறி வரும்.

● அழுதுகொண்டே பிறந்தோம். எல்லோரும் அழுதால் போய் விடுவோம்.

● எருமையைக்கண்டு யானை விலகிப் போனால் எருமைக்குப் பயந்தல்ல. அதன் மேல் ஒட்டியிருக்கும் சேறு படுமேயென்றுதான். அதுபோல் தீயவனைக்கண்டு நல்லவன் விலகிப் போவது மானத்துக்கு அஞ்சி.

● நீ தெருவில் போகும்போது நாய் குலைத்தால் நீயும் குலைப்பதில்லை. விலகித்தான் போவாய். அதுபோல் உன்னைப்பற்றி யாராவது தூற்றினால் அவனை நாயாக நினைத்துக் கொண்டு விலகிப் போ.

● பெரியோர்கள் உன்னைக் குறை கூறினால் கவலைப்படு. மூடன் குறை கூறினால் அதைப் பற்றிக் கவலைப்படாதே.

● இந்த உடம்பில் உயிர் இருக்கிறவரைதான் இதற்குப் பெருமை. உயிர் நீங்கி விட்டால் அரசன் முதல் ஆண்டிவரை 'பிணம்' என்றுதான் சொல்லுவார்கள்.

● தேங்காய் உடைப்பதன் காரணம், தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயா மலம், உரித்து எடுக்கின்ற நார்கள் கன்மமலம், உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவமலம். இந்த மூன்றும் நீங்கினால் வெண்மையான பருப்பு வெளிப்படுகின்றது. இறைவனிடத்தில் "மும்மலத்தை நீக்கி, சுத்த சத்துவ, சித்தத்தை அருள வேண்டு"மென்று குறிப்பிடுவதே தேங்காய் உடைப்பதன் உட்பொருளாகும்.

● கற்பூரம் எரிப்பதன் காரணம், கற்பூரம் நெருப்பில் எரிந்து கரியோ சாம்பலோ இன்றி மறைந்து விடுகிறது. அதுபோல் ஆன்மா இறைவனுடைய அருட்ஜோதியில் கரைந்து ஒன்றுபட வேண்டும் என்ற குறிப்பை உணர்த்துகின்றது.

● குடியிருக்கும் வீட்டுக்கு வெள்ளைபூசுவதுபோல அறிவு, ஞானம், இறை குடியிருப்பதால் நெற்றியில் திருவெண்ணீறு புனைதல் வேண்டும். மேலும் சாணத்துக்கு விஷக் கிருமிகளைப் போக்கும் ஆற்றல் உண்டு. நம் வாழ்வும் முடிவில் ஒருபிடி சாம்பல்தானே என்பதனை உணர்த்தவும் உதவுகிறது.

## பத்துப் பொன்மொழிகள்

1. உணவு தேடுவதோடு உணர்வுந் தேடு.
2. மாசிலா மனமே ஈசன் கோயில்
3. பயிருக்கு முள்வேலி; பணத்துக்கு தருமம் வேலி.
4. பாலுந் தேனும் உடலுக்கு உறுதி. வேலும் மயிலும் உயிருக்கு உறுதி.
5. உளம் வசமானால் உலகம் வசமாகும்.
6. ஒருமையுணர்வு இருமையுந் தரும்.
7. ஆறுதலையமலன் ஆறுதலையருள்வான்.
8. எல்லாவுயிரும் ஈசன் கோயில்.
9. அயர்ச்சியில்லா முயற்சி உயர்ச்சி தரும்.
10. வேலையுடையவனிடத்தில் வேலை கேள்.

# நன்றியுரை

பிரணவ சொரூபியாய் விளங்கும் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையாரது திருக்கோயில் புன ருத்தாரண வேலைகள் இனிது நிறைவெய்தி திருக்குடமுழுக்கு விழாவும் சிறப்புற நிறை வுறும் இந் நன்னாளில் மேற்படி திருக்கோயில் புனருத்தாரண வேலைகளைப் பொறுப்பெற்றுச் சிறப்புற அவற்றைச் செய்து முடித்து உதவிய அனைவருக்கும் நன்றி புகல்வது இன்றியமை யாததொன்றாகும்.

முதற்கண் தெய்வீககளை பொருந்தவும் கலை அம்சம் சிறந்து ஒளிரவும் ஸ்ரீ நடராசப் பெருமான், சிவகாமி அம்பாள், இராசேஸ்வரி அம்பாள் ஆகிய விக்கிரகங்களை வடித்து உதவிய விஸ்வஸ்ரீ நா. சோமசுந்தர ஸ்தபதி அவர்களுக்கும், அவர்தம் புதல்வர் ஸ்ரீ சோ. கங்காதரம் ஸ்தபதி அவர்களுக்கும், புதிய பரிவாரமூர்த்திகளுக்கான கோவில்கள் விமானங்களை அமைத்து உதவிய திரு. க. கோபாலசிங்கம் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும், சுப்பிரமணிய ஆலயத்தின் புதிய வசந்த மண்டபத்தை அமைத்த திரு. க. ரவீந்திரதாஸ் அவர்கட்கும் உதவியாளர்க்கும், மேற்படி வசந்த மண்டபத்துக்குரிய சிற்ப வேலைகளையும், வண்ணம் தீட்டும் பணியையும் புரிந்த திரு. கி. நாகராசா அவர்களுக்கும் உதவியாளர்க்கும், புதிய ஆலயங்களின் சிற்பவேலைகளை அழகுற அமைத்த திரு. வீ. நாகலிங்கம் ஸ்தபதி (தென் இந்தியா) அவர்கட்கும் குழுவினருக்கும், ஆலயத்தின் புதிய வர்ண வேலைகளை அழகுபெறத் தீட்டிய திரு. க. சுந்தரலிங்கம் அவர்களுக்கும் குழுவினருக்கும், கோயிலின் திருத்த வேலை களை மேற்கொண்ட திரு. ஆ. இராசலிங்கம் அவர்களுக்கும் குழுவினருக்கும், ஆலய நிலத் துக்கும் சுவர்களுக்கும் பளிங்கு வேலை புரிந்த திரு. K. கிருஷ்ணராசா அவர்களுக்கும், திரு. த. உலகநாதன் அவர்களுக்கும், கோவிற் பூச்சு வேலைகளைச் சிறப்புறச் செய்து உதவிய திரு. நா. கனகரத்தினம் அவர்களுக்கும் உதவியாளர்க்கும், ஆலயத்துக்கு வேண்டிய இரும்புக் கதவுகளைத் திருத்தமுற அமைத்த திரு. எஸ். கோபால் அவர்கட்கும் உதவியாளர்க்கும், கோயில் கொட்டகை கூரை வேலைகளைச் சிறப்புற அமைத்த திரு. வீ. ஐயாத்துரை அவர்க ளுக்கும் உதவியாளர்களுக்கும், திருவிளக்குகளை அழகுபெற அமைத்த திரு. கா. கந்தையா அவர்களுக்கும் உதவியாளருக்கும், ஆலயத்துக்குரிய மின்சாரவிளக்கு வேலைகளைச் சிறப்புறச் செய்த திரு. ந. செல்வராசா அவர்களுக்கும் உதவியாளர்களுக்கும், இராஜகோபுரத்துக் கும் மணிக் கோபுரத்துக்கும் சாரப்படி அமைத்த திரு. எஸ். மணியம் அவர்களுக்கும் குழுவினருக்கும், யாகப்பந்தல் அமைத்த திரு. த. ஐயாத்துரை அவர்களுக்கும் குழு வினருக்கும், வசந்த மண்டபத்தில் திருவூஞ்சல் அமைத்த திரு. செ. கந்தசாமி அவர்களுக்கும் உதவியாளர் அவர்களுக்கும், நுழை வாயில்களில் திருவாசிகளை அழகுற அமைத்த விஸ்வ ஸ்ரீ சு. பாஸ்கரன் அவர்களுக்கும் உதவியாளருக்கும், வீதியமைப்புக்கு உதவியவர்க்கும், குடமுழுக்குக் கிரியைகளைச் சிறப்புற ஆற்றிய அந்தணப் பெரியோர்களுக்கும், அக்கிரியை களுக்கு வேண்டிய மாலை, சமித்து முதலியவற்றை அளித்து உதவிய திரு. சி. பஞ்சாட் சரம், திரு. மு. நாகராசா ஆகியோர்க்கும், மங்கள இசை வழங்கிய நாதஸ்வர தவில் வித்துவான்களுக்கும், சிறப்புச் சொற்பொழிவு, ஆசியுரை வழங்கிய பெரியோர்களுக்கும், குடமுழுக்கு விழா மலருக்கு வாழ்த்துரை, கட்டுரை தந்துதவிய பெரியோர்க்கும், விளம் பரங்கள் தந்துதவிய அன்பர்களுக்கும், மலரை அழகுபெற அச்சிட்டுத் தந்த திருமகள் அழுத்தக உரிமையாளர்க்கும் பணியாளருக்கும், திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகளுக்கு ஒலி அமைப்பும், ஒளிஅமைப்பும் புரிந்து உதவிய அன்பர்களுக்கும், திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகளைப் படமாக்கிய மதுரவிகார் வீடியோ ஸ்தாபனத்தினருக்கும், இன்னும் பல வழிகளிலும் பணியாற்றிய அன்பர்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

**இணுவையூர் மக்கள்**

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேக விழா

சிறப்பாக நடைபெற எமது

நல்வாழ்த்துக்கள்

## இ. இலட்சுமிநாதன்

தெல்லிப்பளை.



அன்பளிப்பு

*
*
*

## டாக்டர்
## க. பாலசுப்பிரமணியம்

ஆங்கில வைத்தியசாலை

இணுவில் மேற்கு, இணுவில்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேக விழாவுக்கு

திரு. வே. முத்து அவர்களின்

ஞாபகார்த்த அன்பளிப்பு

# மு. கணேசு

மஞ்சத்தடி

இணுவில்.

---

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேக விழாவுக்கு

திரு. மு. கனகரத்தினம் அவர்களின்

ஞாபகார்த்த அன்பளிப்பு

# க. மகேந்திரராசா

"மகேந்திரபதி"

கே கே. எஸ். வீதி,

இணுவில்.

இணுவில்
ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேக விழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

# சக்தி றெக்ஸ்றைஸ் மில்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி.

இணுவில்
ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேக விழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

# ஏ. கே. எஸ்.

## * நகை மாளிகை *

கன்ஞதிட்டி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

**ஷெல்ஸ்ட்**

சிலோன் கொம்பனி ஸ்தாபனத்தாரின்
வடமாகாண ஏக விநியோகத்தர்கள்

# கமக்காரர் மாளிகை

விவசாய உரவகைகள், கிருமிநாசினிகள், களைகொல்லிகள்
விற்பனையாளர்

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.



இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேக விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்
எங்களிடம் எமது தயாரிப்புகளான
கற்பூரம், பப்படம், திறம் மிளகாய்த்தூள்,
புல்டோ, ஐஸ்புல்டோ,
பருப்பு வகைகள், கச்சான் அல்வா அனைத்தையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# V. A. இன்டஸ்றீஸ்

உரிமையாளர்:
M. N. குலசிங்கம்

இணுவில் தெற்கு, சுன்னாகம்.

அன்பளிப்பு

எங்களிடம்
பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

**இராசா ஸ்ரோர்ஸ்**

இணுவில் தெற்கு,

இணுவில்.

அன்பளிப்பு

எங்களிடம்
பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

**ஸ்ரீ விநாயகர்**
**ஸ்ரோர்ஸ்**

இணுவில் தெற்கு,

இணுவில்.

அன்பளிப்பு

**ஸ்ரீமதி ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு வியாபாரம்

இணுவில் தெற்கு,

இணுவில்.

அன்பளிப்பு

**நவகாந்தன் ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு வியாபாரம்

இணுவில் தெற்கு,

இணுவில்.

அன்பளிப்பு

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

கந்தசாமி கோவிலடி,

இணுவில்

அன்பளிப்பு

சியாமள ரேடேஸ்

பலசரக்கு வியாபாரம்

பிள்ளையார் கோவிலடி,

இணுவில்.

அன்பளிப்பு

சிவன் ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

ஆஸ்பத்திரியடி,

இணுவில்,

அன்பளிப்பு

செ. சண்முகரட்ணம்

பலசரக்கு வியாபாரம்

ஆஸ்பத்திரியடி,

இணுவில்.

அன்பளிப்பு

தாமோதரா ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

பெரியகடை, மன்னூர்

அன்பளிப்பு

மலர் ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

பெரியகடை, மன்னூர்

அன்பளிப்பு

கலாவதி கபே

மெயின் வீதி, மன்னூர்

அன்பளிப்பு

லிங்கம் கூல் பார்

பஸ் நிலையம், மன்னூர்

அன்பளிப்பு

**செல்வம் பிரதர்**

பலசரக்கு வியாபாரம்

பெரியகடை, மன்னார்.

அன்பளிப்பு

**கரேரும் ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு வியாபாரம்

பெரியகடை, மன்னார்.

அன்பளிப்பு

**க. பொன்னுத்துரை**

பலசரக்கு வியாபாரம்

மார்க்கட் வீதி, மன்னார்.

அன்பளிப்பு

**எஸ். கே. செல்லத்துரை**

பலசரக்கு வியாபாரம்

பெரியகடை, மன்னார்.

அன்பளிப்பு

ஸ்ரீ பேக்கரி

இணுவில் தெற்கு,

இணுவில்.

அன்பளிப்பு

துர்க்கா அச்சகம்

கே.கே.எஸ். வீதி, இணுவில்

அன்பளிப்பு

உங்கள் வீட்டு மங்களகரமான
வைபவங்களுக்கு உயிரோவியமான
படங்களைப் பிடிப்பதற்கு

அழைத்து மகிழுங்கள்

கவி போட்டோ

கே. கே. எஸ். வீதி,

இணுவில்.

அன்பளிப்பு

பழமுதிர்சோலை

பலசரக்கு வியாபாரம்

கே. கே. எஸ். வீதி,

கோண்டாவில் மேற்கு.

அன்பளிப்பு

எங்களிடம்

நாறல்பாக்கு, சீவல்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீ விநாயக ஸ்ரோர்ஸ்

70. புதிய மார்க்கட்,

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

க. தியாகராசா

பலசரக்கு வியாபாரம்

சிவகாமி அம்மன் கோவிலடி,

இணுவில்.

அன்பளிப்பு

வனிதா பேக்கவுஸ்

ஸ்ரேசன் ரேட், சுன்னாகம்

அன்பளிப்பு

ஸ்ரீ சக்தி பேக்கரி

இணுவில் தெற்கு, இணுவில்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகத்துக்கு

எமது வாழ்த்துக்கள்

## ஐங்கரன் அரிசி ஆலை

இணுவில் தெற்கு, இணுவில்.



இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை

வேண்டுகின்றோம்.

## ஞானேஸ்வரன் அரிசி ஆலை

இணுவில் தெற்கு, இணுவில்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

✳

# லிங்கம் ஸ்ரோஸ்

பலசரக்கு வியாபாரம்

கே. கே. எஸ். வீதி, இணுவில்.
ஆஸ்பத்திரியடி,

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகத்துக்கு
பிரபல சமயத் தொண்டரும் சிவநெறிக்
காவலருமாகிய சிவபதமடைந்த
எஸ். துரை அவர்களின்
ஞாபகார்த்த அன்பளிப்பு

✳✳

# கொழும்பு றெஸ்ரோறன்ற்

நம். 77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகாகும்பாபிஷேகத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

எங்களிடம்

பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நாதன் அன் பிரதர்

தொலைபேசி இல: 23819
194, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு
இல. 2, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

எங்களிடம்:
உணவுத் தானியங்கள், சாய்ப்புச்சாமான்கள், திறம் புகையிலை,
'லீலா' அரிசி, 'லீலா' சுருட்டு அனைத்தும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

லீலா ஸ்ரோர்ஸ்

இல. 4, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

லீலா அரிசி ஆலை

கே. கே. எஸ். வீதி, மருதனமடம்
தொலைபேசி: 342

அன்பளிப்பு:

எங்களிடம்:

எவர்சில்வர் பாத்திரங்கள்,
பீங்கான் கோப்பைகள்,
சூட்கேஸ் வகைகள்,
அழகு சாதனப் பொருட்கள்,
நவ நாகரீகப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்
யாவும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

**அருள் குமரன் பான்சி ரேடேஸ்**

இல. 3, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்

அன்பளிப்பு:

எங்களிடம்

நவயுகத்தின் நவநாகரிகத்திற் கேற்ற
நைலெக்ஸ், கொட்டன், கூறைச் சேலைகள்,
சேட்டிங், சூட்டிங், றெடிமேட்
உடைகள், பெல்பொட்டம் வகைகள்
பெற்றுக்கொள்ளலாம்.

**ஆனந்தி ரெக்ஸ்**

31 A, மத்தியசந்தை, சுன்னுகம்

அன்பளிப்பு

"மதுரவிகார்"

**வீடியோ சென்ரர்**

இணுவில்
ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி
இணுவில் தெற்கு, இணுவில்

அன்பளிப்பு

எமது தயாரிப்பு

**"கவிதா பப்படம்"**
**"அண்ணா பப்படம்"**

**கவிதா**
**இண்டஸ்ரிஸ்**

இணுவில் தெற்கு, இணுவில்

அன்பளிப்பு

**சிவநாதன்**
**ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு வியாபாரம்

மஞ்சத்தடி, இணுவில்

இணுவில்
ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம்
அதி விமரிசையாக நிகழ்வதற்கு
எமது வாழ்த்துக்கள்

**K. தாமோதரம்பிள்ளை**

நீதிமன்ற விதி,
மல்லாகம்

*With the best Complements of*

# A. K. CHELVANAYAKAM

## SALE, SERVICES

## AND

## REPAIRS

K. K. S. Road　　Kondavil West
Kondavil

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நிகழ
வாழ்த்துகிறோம்

# ரூட்ரூ தொழிற்சாலை

இணுவில் தெற்கு　　இணுவில்

அன்பளிப்பு

சகலவித புடவைத்தினிசுகள், கூறைச் சேலைகள், சிறுவர்கள், ஆண், பெண் அனைவருக்கும் ஏற்ற பெல்ஸ், மிடி ஸ்கேட்

மற்றும் றெடிமெட் உடைகளுக்கும்

# "மணியம்ஸ்"

இல. 16, நவீன சந்தை யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23545

அன்பளிப்பு

எம்மிடம் :- அலுமனியம் எவர்சில்வர் பாத்திரங்கள்
பீங்கான் கோப்பைகள்
சூட்கேஸ் வகைகள்
அழகுசாதனப் பொருட்கள்
நாகரீகப் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

யாவும் நிதான விலையில் கிடைக்கும்

# பெஷன் ஹவுஸ்

65, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்

தொலை பேசி : 23046

அன்பளிப்பு

உ

# சங்கர் அரிசி ஆலை

செங்கலடி —— மட்டக்களப்பு

அன்பளிப்பு

தற்கால நவநாகரிகத்திற்கேற்ற

நைலக்ஸ், கொட்டன் சாறிகள், கூறைச் சேலைகள், சூட்டிங், சேட்டிங், றெடிமேட் ஆடைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

# சாந்தி ரெக்ஸ்ரைல்

157, நவீன சந்தை யாழ்ப்பாணம்

தொலைபேசி : இல. 22175

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு
எமது வாழ்த்துக்கள்

**சண்யோ கோப்பி அன் கூல்பார்**

நவீன சந்தை
பஸ்நிலையம் முன்பாக சுன்னுகம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு
**எமது வாழ்த்துக்கள்**

எங்களிடம் உங்களுக்குத் தேவையான
பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

**துர்க்கை ஸ்ரோர்ஸ்**

16, மார்க்கட் வீதி சுன்னுகம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

எங்களிடம்
பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்,
குழந்தைகளுக்குரிய பால்மா,
பிஸ்கற் வகைகள் அனைத்தும்
நிதானமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

நியூ கணபதி ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ விநாயகர் ஸ்ரோர்ஸ்

மார்க்கட் வீதி சுன்னாகம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

சிறந்த சிற்றுண்டிவகைகளுக்கும்
மற்றும்
குளிர்பானங்களுக்கும்

"சிவாஸ் கூல்பார்"

இல. 54, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற
எல்லாம் வல்ல
விநாயகப் பெருமானை
வேண்டுகின்றோம்

**க. கோபாலபிள்ளை**

பலசரக்கு வியாபாரம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

அன்பளிப்பு

*
*
*

**ஓட்டோஸ் ஏஜன்சீஸ்**

109, கண்டி வீதி, வவுனியா.
தொலைபேசி இல. 2816
கிளை
கே. கே. எஸ். வீதி, இணுவில்.

அன்பளிப்பு

***

# விநாயகா அரிசி ஆலை

4ம் கட்டையடி ஒழுங்கை,

இணுவில் தெற்கு, இணுவில்.



இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகத்துக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

# கணேசன் கிறைண்டிங் மில்ஸ்

காங்கேசன்துறை வீதி,

இணுவில்.

## அன்பளிப்பு

*

எமது தயாரிப்புகள்

* விநாயகர் கற்பூரம்
* சிவகாமி கற்பூரம்
* இராஜம் கற்பூரம்

# எழில் இன்டஸ்றீஸ்

இணுவில் மேற்கு, இணுவில்

அன்பளிப்பு

# கணபதி அரிசி ஆலை

இணுவில் தெற்கு, இணுவில்

அன்பளிப்பு

**செ. சண்முகராசா அன் பிரதர்ஸ்**

இல. 151, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல. 23573

அன்பளிப்பு

**பாசி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

தொலைபேசி இல. 304

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகத்துக்கு

எமது வாழ்த்துக்கள்

# கரன் அரிசி ஆலை

உரிமையாளர்: சு. தருமலிங்கம்

ஸ்ரேசன் ரேட் — சுன்னாகம்



அன்பளிப்பு

சிறந்த குளிர்பானங்களுக்கும்

மற்றும்

சிற்றுண்டி வகைகளுக்கும்

# கரன் கூல் பார்

கே. கே. எஸ். வீதி

ஆஸ்பத்திரியடி — இணுவில்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகத்துக்கு
எமது நல் வாழ்த்துக்கள்

**வெஸ்கோ ரீ, கோப்பி**

அன்

**கூல்பார்**

இல. 5, நவீன சந்தை
பலாலிவீதி திருநெல்வேலி

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம்
சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல
விநாயகப்பெருமானை வேண்டுகின்றோம்

**ஸ்ரீ காமாக்ஷி குளிர்பானசாலை**

இல. 1, நவீன சந்தை
பலாலி வீதி, திருநெல்வேலி

அன்பளிப்பு /

எங்களிடம் முந்திரிகைப் பழம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
இல. 14, பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

விஜயா தேநீர்ச்சாலை அன் கூல்பார்
இல. 6, பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேற
விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

A. V. R. அரிசி

திருப்பதி அரிசி ஆலை

இணுவில் வீதி மானிப்பாய்

அன்பளிப்பு

சன்பிராண்ட்

ரொபிகள், இனிப்புகள்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

அளவை

கொன்வக்ஸனரி வேர்க் ஸ்தாபனம்

அளவெட்டி வடக்கு, அளவெட்டி

*With the Best Compliments of*

GANESAN TEXTILE MILLS LIMITED

MANUFACTURERS OF QUALITY TEXTILES

Thavady North Kokuvil

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற

**எமது நல்வாழ்த்துக்கள்**

## மல்ரி ஒயில் இன்டஸ்றீஸ் லிமிட்டட்

கே. கே. எஸ். வீதி, இணுவில்.

தொலைபேசி இல. 339

## மல்ரி அரிசி ஆலை இன்டஸ்றீஸ் லிமிட்டட்

பலாலி வீதி, உரும்பிராய்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

**மகா கும்பாபிஷேகத்துக்கு**

**ஸ்ரீமான் வைத்திலிங்கம் – கணபதிப்பிள்ளை அவர்களின்**

**ஞாபகார்த்த அன்பளிப்பு**

## க. சரவணபவன்

இணுவில் தெற்கு, [illegible]

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேக விழா

திருக்காட்சி கண்டு களிப்போம்

**K. R. சிவலோகநாதன் அன் கோ**

இல. 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 24289

**சியா ரெக்ஸ்ரைல்ஸ் லிமிட்டெட்**

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகம்

இனிது நிறைவேற வாழ்த்துகின்றோம்

**இராசம் அரிசி ஆலை**

மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

தொலைபேசி இல. 319

**விநாயகம் அரிசி ஆலை**

ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

தொலைபேசி. 302

With the Best Compliments of

# DURGHA ENTERPRISES LIMITED

MANUFACTURERS OF POULTRY FOOD & ANIMAL FOODS

K. K. S. Road, INUVIL.



இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

மகாகும்பாபிஷேக மலருக்கு

ஸ்ரீமான் சுப்பிரமணியம் பொன்னையா அவர்களின்

ஞாபகார்த்த அன்பளிப்பு

சு. பொ. நடராசா

## தி அண்ணா இன்டஸ்றியல்ஸ்

இ ணு வி ல்

தொலைபேசி இல. **23412**

*With the best Compliments of*

# SRI RAMS TEXTILE PROCESSING Co. Ltd.

**Manufacturers and Processors of Synthetic and Cotton Textiles**

*Branch Office:*
**"Kalki Office"**
79, Massenger Street,
**Colombo-12**
*T. P.* **35821 Colombo.**
*Telegrams,* **"Sriram" Colombo.**

*Head Office & Factory:*
Kondavil Road,
*Irupalai, Kopay.*
*T'Phone:* **24087 Jaffna**
*T'Grams:* **"Srirams", Kopay.**

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

மகா கும்பாபிஷேகத்துக்கு

எமது வாழ்த்துக்கள்

# சி. சின்னத்துரை அன் பிரதர்

**39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்**

தொலைபேசி : **22203, 22183**

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற
விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்

கல்கி சன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23711

அன்பளிப்பு

சின்னத்துரை அன்ட் கொம்பனி

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 23357

With the Best Compliments of

# SHREE RAMYAH INDUSTRIES

Factory : **"KALKI ILLAM",**
THAVADY NORTH,
KOKUVIL.

T. P.: **23011**

Office: 39. K. K. S. ROAD,
JAFFNA.

T. P.: **22183**

அன்பளிப்பு

V

## கங்கா ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

அன்பளிப்பு

## கோடீஸ்வரன் ஸ்ரோர்ஸ்

பஸ்நிலையம்
பெரியகடை — மன்னார்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேக விழாவுக்கு
திருமதி விசாலாட்சி பொன்னம்பலம்
அவர்களின் ஞாபகார்த்த
அன்பளிப்பு

**கணேஸ்வரன் ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு வியாபாரம்

இணுவில் கிழக்கு இணுவில்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேக விழாவுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

**கண்ணன் மெற்றல் கிறேசர் ஸ்தாபனத்தார்**

இணுவில்.

உரிமையாளர்: பொ. சந்திரலிங்கம்

அன்பளிப்பு

நவீன வீடு கட்ட வேண்டுமா?

நாடுங்கள்

பொ. பூபாலசிங்கம்

அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட கட்டட ஒப்பந்தக்காரர்கள்

கிளொவ் ஒழுங்கை, தெல்லிப்பழை.

அன்பளிப்பு:

எம்மிடம்

※ கட்டிட உபகரணங்கள்
※ கிருமிநாசினி வகைகள்
※ உரப்பசளைகள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்


S. T. ராஜா அன் கொம்பனி

பாமேர்ஸ் இல்லம்
அமெரிக்கன் மிசன் கட்டிடம்,
தெல்லிப்பழை

**இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்**
**மஹாகும்பாபிஷேகத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள் !**

*

*"மண்ணுல கத்தினிற் பிறவி மாசற*
*எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்*
*கண்ணுத லுடையதோர் களிற்றின் மாமுகப்*
*பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்."*



# அழகான அச்சுவேலைகள்

நியாயமான கட்டணத்தில்
செய்துகொள்ள

எம்மிடம் வாருங்கள்

↓

# சாந்தி அச்சகம்

575, கே. கே. எஸ். றோட்,
*(நாச்சிமார் கோவிலடி)*
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: **23002**

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்
மஹாகும்பாபிஷேகத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

ஓம் கணநாதாய நம



கொழும்புத் தமிழ்ச் [illegible]
இல. 1-57 [illegible]

## தர்ம சாஸ்திரம்

மனிதன் செய்யக்கூடிய காரியங்கள் தடங்கல் இல்லாமல் நடக்க வேண்டுமானல், முதலில் விநாயகப் பெருமானை வேண்டிய பின்பு, பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற மும்மூர்த்திகளையும், தன் குலதெய்வத்தையும், தன் குலகுருவையும், நவக்கிரகங்களையும் தன் சக்திக்குத் தகுந்தபடி அர்ச்சனை, அபிஷேகம், நைவேதனம், பூஜை, பிரார்த்தனை முதலியன செய்யவேண்டியது இந்துக்களின் கடமையாகும்.

※

மக்கள் மில்க்வைற் உற்பத்திகளுக்குக் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே.




# மில்க்வைற்
# சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **23233**

இம்மலர், சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு, இணுவில், ஆசிரியர் வை. கதிர்காமநாதன் அவர்களால் வெளியிடப்பெற்றது.—6295/1-84.